# இஸ்லாம்

## ஆசிரியர் வழிகாட்டி
## தரம் - 8

**(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

இஸ்லாம்

தரம் 7
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு **2015**

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

**ஸ்ரீலங்கா**

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு :
தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கையேடு வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்துகையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் தமது பங்களிப்பானது மாணவர்ளின் அறிகைசார் அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலை நோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனையவற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள் தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பிணியினை ஆகிய இரண்டும் இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.

- கற்றல் / கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னைசெயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும் போது (மாணவர் செயன்முறை) கன்புசியஸ் (Confusius) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.
  அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்.
  பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர் ஆனால்
  செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது,
  கற்றுக்கொள்கின்றனர்.

- வளம் நிறைந்ததும் சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களைப் பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும்;

- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும் போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன் உயர்மட்ட கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தை எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினை தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்துதலாகும். எனவே, ஆசிரியர்களது, கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இப்பாடத்திட்டமானது, பாடசாலைக்கு வெளியேயான உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள் /தகுதிப்பாடு களை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள் /தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல் மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்கணிய உளப்பாங்கு புதிது

புனைதலுக்கான விருப்பு மற்றும் விடாமுயற்சி;

- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு ஒழுக்கம் மற்றும் வினைத்திறனான தொடர்பாடல்;

- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங் களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலகர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள 4A க்களில் உளப்பாங்கு (Attitude), பகுப்பாய்வு (Analysis), செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறலில்(Accountability) கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பொருத்தமானதும் சாதகமானதுமான **உளப்பாங்குகளுடன்** ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற்கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்று **பகுப்பாய்வு** செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); **பொறுப்புக் கூறலை** (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற் கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறு பேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கு விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பேராசிரியர் குணபால நாணயக்கார
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**வளப்பங்களிப்பு / கலைத்திட்டக் குழு**

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்**
பிரதிப் பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**மௌலவி ஏ.எல்.எம். அலியார்**
பிரதிநிதி, கல்விக் குழு,
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா
பீடாதிபதி,
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகளுக்கான பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**மௌலவி எம்.ரீ. இக்பால்**
ஆசிரிய ஆலோசகர் - இஸ்லாம்
கொழும்பு கல்வி வலயம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
தேசிய கல்வி நிறுவகம்

**வெளியக**

**எம்.எச்.எம். புஹாரி**,
ஆசிரிய ஆலோசகர்.

**எம்.எச்.எம். நாளிர்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்.

**எம்.எஸ்.எம். அனஸ்**
ஆசிரியர், அலுத்கம்வீதிய தேசிய பாடசாலை.

**எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்**
ஆசிரியர், பாபுஸ்ஸலாம் மு. வி, நாம்புளுவ.

**எஸ்.ஏ.எம். றிஸ்வி**
ஆசிரியர், அல்ஹுதா மு. மகா வி, ரிதீகம.

**எம்.எப்.எம்.பாஹிம்**
ஆசிரிய ஆலோசகர், மினுவன்கொடை கல்வி வலயம்.

**எம்.எம்.முகர்ரம்**
எல்லலமுள்ள ஸாஹிரா மு.வி, பஸ்யால

**மௌலவி எம்.எஸ்.ஏ. நாளிம்**
பிரதிநிதி, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா
ஆசிரியர், ஹமீத் அல் ஹுஸைனி தேசிய பாடசாலை, கொழும்பு 12

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்குப் பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் இது விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டைத் திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றது.

இஸ்லாம் பாட கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்குத் தேவையான காலப்பகுதியைச் சுயாதீனமாக தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தைத் திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின் போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காகக் குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. இக்குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாகத் திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் என்ற தொடர்பை வலுப்படுத்தி மாணவர் செயற்பாட்டை வீட்டுச் சூழலுடன் இணைக்கும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டலின் இறுதிப் பகுதியில் வீட்டுச் சூழலில் பின்தொடர் செயற்பாடு என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் பெற்றோரின் பரஸ்பர ஈடுபாடும் அனுபவப் பகிர்வும் பிள்ளைகளின் கற்றலை மேலும் வளப்படுத்தும் என நாம் நாம்புகிறோம். ஆனால் இப்பகுதி பிள்ளைகளுக்கு மேலதிக சுமையாக அமையாத வகையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். அத்தோடு பிரதேசத்தின் தன்மை, மாணவரின் அனுபவம், பெற்றோரின் ஈடுபாடு முதலான காரணிகளை முன்வைத்து இச்செயற்பாடுகளில் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்ததொரு எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

செயற்றிட்டத் தலைவர்

**தரவிருத்தி உள்ளீடுள்**

- டிமை கடதாசி
- ஃபெலற் பேனாக்கள்
- எழுது கடதாசி
- பென்சில்கள்
- அடிமட்டம்
- றெஜிபோம்
- பிறிஸ்டல் போர்ட்
- ஒலி / ஒளி நாடாக்கள்
- இறுவட்டுக்கள்
- பசை நாடாக்கள்
- இணையத்தளங்கள்

**நூல்கள்**

- தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி
- றியாழுஸ் ஸாலிஹீன்- இமாம் நவவி (ரஹ்) தமிழ் மொழி பெயர்ப்பு
- நபி மொழி திரட்டிய நல்லவர்கள் - முஹம்மது முஸ்தபா
- முன்மாதிரி முஸ்லிம் - முஹம்மத் அலி அல் ஹாஷிமி
- அமல்களின் சிறப்பு - மௌலானா ஸகரிய்யா ஸாஹிப் (ரஹ்)
- ஒழுக்க மாண்புகள் - ஷெய்க் முகம்மத் அல் கஸ்ஸாலி
- வாழ்க்கைக் கலை - மௌலானா முஹம்மத் யூசுப் இஸ்லாஹி
- அர்ரஹீக் - எஸ். முபாரக் பூரி
- நபிகளாரின் துணைவியர் முஃமின்களின் அன்னையர் - மௌலவி முகம்மத் யூசுப்
- இஸ்லாத்தில் இறை நம்பிக்கை - ஹஸன் ஐயூப்
- குத்பாக்களின் தொகுப்பு - வாமி வெளியீடு
- நாற்பது நபிமொழிகள் - இமாம் நவவி
- நபித் தோழியர் வரலாறு - மௌலவி மஸ்தான் அலி பாகவி
- அல்குர்ஆன் ஓர் அறிமுகம் - ஏ.எல்.பீர் முஹம்மது
- மறுவிலா முழுமதி நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் - ஜமால்
- முதல் இறைத் தூதர் நூஹ் (அலை) - மௌலவி அப்துர் ரஹ்மான் உமரி
- நபிமார்கள் வரலாறு - வாமி வெளியீடு

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| • பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| • பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | v |
| • கலைத்திட்டக் குழு | vi |
| • ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | vii- viii |
| அறிமுகம் | x |
| தேசிய இலக்குகள் | xi |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | xii-xiii |
| பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | xiv |
| பாடத்திட்டம் | xvi-xxvi |
| கற்றல் கற்பித்தல் முறை | xxvii-xxviii |
| பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | xxix-xxx |
| கணிப்பீடும் மதிப்பீடும் | xxxii |
| • கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் | 1-88 |

## 1.0 அறிமுகம்

மனிதன் உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றையும் உள்ளடக்கியவன். இவற்றுக்கிடையில் சமநிலை பேணப்படும்போதுதான், முழுமையான ஆளுமை விருத்தியடைய முடியும். இந்த நிலைப்பாட்டிலேயே இஸ்லாம் மனிதனின் ஆன்மீக, தார்மீக வாழ்வுக்கான வழிகாட்டல்களையும் போதனைகளையும் வழங்கியிருக்கின்றது.

இன்றைய உலகம், விஞ்ஞான தொழிநுட்ப சாதனங்களுக்கூடாக பெருவாரியான மாற்றங்களைக் கண்டு வருகின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி உடல், அறிவு என்பவற்றை போஷிக்கும் அதேவேளை ஆன்மீகத்தை புறக்கணிக்கின்றது. ஆன்மீக வாழ்வு புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக மனித வாழ்வு அமைதியையும் மகிழ்வையும் இழந்து நிற்கின்றது.

கவலை, மன இறுக்கம், விரக்தி முதலான உளநோய்கள் மனிதனில் வேரூன்றி வருகின்றன. மனித விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக வாழ்வதற்கான உரிமைகூட கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. சிந்தனைக்கன்றி உணர்வுகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கியதன் காரணமாக வன்முறை, கட்டற்ற நுகர்வு, சுரண்டல், மோசடி முதலானவை இறைவனைப் புறக்கணித்த வாழ்வுமுறைக்கு மனிதனைத் தள்ளிவிட்டுள்ளன.

இந்நிலையை அவதானித்து வரும் சிந்தனையாளர்களும் கல்வியியலாளர்களும் ஆன்மீகத்தினதும் விழுமியங்களினதும் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர். ஆன்மீக வறுமைக்குட்பட்டிருக்கும் மனித சமுதாயத்தை விடுவிக்கின்ற பயிற்சியை வழங்கும் பெரும் பணியை சமய பாடத்திடமும் அதனை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களிடமும் எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பின்னணியில் மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேசிய வாழ்வு முறைகளில் சமயமும் அது சார்ந்த விழுமியங்களும் முக்கியத்துவம் பெற வேண்டிய தேவை எமது நாட்டிலும் உணரப்பட்டு வருகின்றது. நலிவுற்றிருக்கும் தார்மீக, ஆன்மீகப் பண்புகள், ஒழுக்க விழுமியங்கள் மீண்டும் வலுப்பெறுவதற்கான செயற்றிட்டங்களை வகுத்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை சமயத் தலைவர்கள் மட்டுமன்றி, கல்வியியலாளர்களும் உணர்த்தி வருகிறார்கள்.

வேகமாக மாறிவரும் உலகில் மானிடப் பெறுமானங்கள் தளர்ந்து விடாமல் பாதுகாப்பதற்கு கவர்ச்சிகரமான சமயப் போதனையும், ஆன்மீகப் பயிற்சியும் அவசர நடவடிக்கைகளாக விதந்துரைக்கப்படுகின்றன. எனவே, இஸ்லாம் பாடத்திற்கூடாகவும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, தேர்ச்சி என்பன விருத்தி செய்யப்பட்டு அவை நடைமுறை வாழ்வில் பிணைந்து கொள்ளும் அளவிற்கு இஸ்லாம் பாடக் கற்றல் கற்பித்தல் செயன்முறை இடம்பெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்லாம் நிலையானதும், காலத்தால் மாறாததுமாகும். இருப்பினும் காலத்துக்குப் பொருத்தமான வகையில் ஷரீஆவை கற்பதற்கான உத்திகளையும் அணுகுமுறைகளையும் கையாள்வதனை அது தடுக்கவில்லை. எதிர்கால சந்ததியினர் இஸ்லாத்தினது தூதின் ஒளியில் பயணிப்பதற்கான பயிற்சியையும் அனுபவத்தையும் வழங்கும் வகையில் இஸ்லாம் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்ந்த இலட்சியத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எமது ஆசிரியர்களே பிரதான பங்குதாரர்களாவர். எனவே ஆசிரியர்கள் தமது பணியையும் பங்களிப்பையும் விருத்திசெய்துகொள்வதற்காகத் தம்மைத் தயார்படுத்திச் செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

## 2.0 கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

### 2.1 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.
கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில் நுட்பத் தகைமை : கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்துதல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

**சமூகச் சூழல்** :
தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

**உயிரியல் சூழல்** :
வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** :
இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன் களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்:**
விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 3.0 - 8 ஆந் தர இஸ்லாம் பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

**1. அர்கானுல் ஈமான்**

ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.

**2. அர்கானுல் இஸ்லாம்**

இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.

**3. அல்அஹ்லாக் வத்தஸ்கிய்யா**

இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையோருக்கும் வழி காட்டுவார்.

**4. அல்குர்ஆன் வஸ்ஸுன்னா**

இஸ்லாத்தின் மூலாதாரங்களை அறிந்து, அவற்றின் போதனைகளை வாழ்வில் நடைமுறைப்படுத்துவார்.

**5. அஸ்ஸீறா வத்தாரீஹ்**

நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர் ராஷிதீன்களதும் வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசிய பங்களிப்புகளையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.

**6. அல்முஆமலாத்**

பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.

**7. அல்மபாஹீமுல் இஸ்லாமிய்யா**

ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.

# பாட உள்ளடக்கம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **1.0**<br>**அர்கானுல் ஈமான்**<br>ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார் | 1.1.<br>அல்லாஹ் அன்பும் இரக்கமும் உடையவன் என்பதையும் உதவி தேடத் தகுதியானவன் என்பதையும் அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களுடன் விளங்கி எடுத்துக் கூறுவார். | • ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்கள் (தவ்ஹீத்,றிஸாலத்,மஆத்)<br>அல்லாஹ் அன்புக்குரியவன்<br>உதவிதேடத் தகுதியானவன் | • அல்லாஹ் அன்பும் இரக்கமும் உடையவன் என்பதை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.<br>• அல்லாஹ்விடம் மாத்திரமே உதவி தேட வேண்டும் என்பதை ஏற்று அதன்படி ஒழுகுவார்.<br>• அல்லாஹ்வின் இரக்கமுடையவன் என்பதை அவனுடைய படைப்புக்களை ஆதாரங் காட்டி விளக்குவார்.<br>• அல்லாஹ்விடம் உதவி தேடுவதற்கான ஒழுங்கு முறைகளை எடுத்துக்காட்டிச் செயற்படுவார். | 02 |
| | 1.2.<br>அல்குர்ஆன் இறுதி வேதம் என்பதை ஆதாரபூர்வமாக விளங்குவதோடு அதன் சிறப்புக்களையும் அறிந்து அதன் போதனைகளைக் கடைப்பிடித்து வருவார். | • வேதங்கள்<br>இறுதிவேதம்<br>குர்ஆனின் சிறப்புக்கள் | • அல்குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் கூறுவார்.<br>• அல்குர்ஆனின் சிறப்பை விளங்கி ஒழுகுவார்<br>• அல்குர்ஆனின் முக்கிய போதனைகள் சிலவற்றை விளக்கிக் கூறுவார்.<br>• அல்குர்ஆன் எக்காலத்திற்கும் பொருத்தமானது என்பதை நிரூபித்துக்காட்டுவார். | 02 |
| | 1.3.<br>நபிமார்களினதும் றஸுல்மார்களினதும் பண்புகளையும் பணிகளையும் விளங்கி எடுத்துக் கூறுவார். | • நபி, ரஸுல் பற்றிய விளக்கம்<br>• அவர்களது பண்புகள்<br>- வாஜிப்<br>- முஸ்தஹப்<br>• அவர்களது பணிகள் | • நபிமார்களதும், றஸுல்மார்களதும் வழிகாட்டல் சமூகத்துக்குத் தேவை என்பதை எடுத்துக் காட்டுவார்.<br>• அவர்களின் விசேட பண்புகளை சொல்லிக் காட்டுவார்.<br>• அவர்களின் பணிகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• அவர்களின் பணிக்கும் பண்புகளுக்கும் இடையிலான தொடர்பை விளக்கிக் கூறுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0<br>**அர்கானுல் இஸ்லாம்**<br>இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார். | 2.1<br>பர்ளான, ஸுன்னத்தான ஓதல்களை அறிந்து தொழுகையில் ஓதி வருவார். | • தொழுகையைநிறைவேற்றுவதால் கிடைக்கும் பயன்கள்<br>தொழுகையின் பர்ளான ஓதல்கள் | • தொழுகையில் பர்ளானதும், ஸுன்னத்தானதுமான ஓதல்கள் இடம்பெறுகின்றன என்பதை எடுத்துக்காட்டுவார்.<br>• தொழுகையில் ஸுன்னத்தான ஓதல்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• ஸுன்னத்தான ஓதல்களைப் பொருளுடன் மனனமிட்டுக் கூறுவார்.<br>• தொழுகையில் அவற்றைத் தொடராக ஓதிவருவார். | 02 |
| | 2.2<br>பர்ளான தொழுகைகளை ஸுன்னத்தான தொழுகைகளை இனங்கண்டு அவற்றைப் பேணி வருவார். | ஸுன்னத்தான ஓதல்கள்<br>• தொழுகையின் வகைகள்<br>பர்ளு<br>சுன்னத்<br>ஸஜ்தா<br>ஸஹ்வு | • தொழுகையில் பர்ளானவை, ஸுன்னத்தானவை என இரு பிரிவுகள் உண்டென்பதை உதாரணம் கூறி எடுத்துக்காட்டுவார்.<br>• பர்ளான தொழுகைகளை அட்டவணை மூலம் பிரித்துக் காட்டுவார்.<br>• பர்ளான தொழுகை போலவே ஸுன்னத்தான தொழுகைகளையும் தொடராக நிறைவேற்றி வருவார்.<br>• தொழுகை அல்லாஹ்வை நெருங்குவதற்கான சாதனம் என்பதை நிரூபித்துக் காட்டுவார். | 02 |
| | 2.3<br>தொழுகையின் ஆன்மீக லௌகீக பயன்களை அறிந்து முறையாக நிறைவேற்றுவார். | திலாவத்<br>ஷுக்ர் | • தொழுகையின் மூலம் ஆன்மீகப் பயன்கள் கிட்டும் என்பதை எடுத்துக் காட்டுவார்.<br>• தொழுகையின் உலகியற் பயன்களைப் பட்டியற் படுத்துவார்.<br>• தொழுகையை முறையாக நிறைவேற்றி வருவார்.<br>• தொழுகையின் பயன்களை எடுத்துக்காட்டி சொற்பொழிவாற்றுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.4<br><br>ஸஜ்தாக்களை அறிந்து உரிய சந்தர்ப்பங்களில் நிறைவேற்றி வருவார் | ● ஸஜ்தா அறிமுகம்<br>● வணக்கம்<br>- நிறைவேற்றல் சந்தர்ப்பமும், முறையும். | • தொழுகையில் பர்ளான ஸஜ்தாக்கள் இருப்பது போல, தொழுகைக்குள்ளேயும், வெளியேயும் ஸுன்னத்தான ஸஜ்தாக்கள் உண்டென்பதை எடுத்துக்காட்டுவார்.<br>• ஸுன்னத்தான ஸஜ்தாக்களை பெயர் குறித்து விளக்கமளிப்பார்.<br>• ஸுன்னத்தான ஸஜ்தாக்கள் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• உரிய சந்தர்ப்பங்களில் ஸுன்னத்தான ஸஜ்தாக்கள் நிறைவேற்றும் முறையினை செய்து காட்டுவார். | 02 |
| | 2.5<br><br>றமழானின் சிறப்பை அறிந்து ஒழுகுவார் | ● நோன்பு - றமழானின் சிறப்பு<br><br>றமழானில்கடைப்பிடிக்க வேண்டியவை | • றமழான் ஏனைய மாதங்களை விட சிறப்படைவதற்கான காரணங்களை சுட்டிக் காட்டுவார்.<br>• ஹதீஸ்களை முன்வைத்து றமழானின் சிறப்பை எடுத்துக் கூறுவார்.<br>• றமழானின் கண்ணியத்தைப் பேணி ஒழுகுவார்<br>• றமழானின் விசேட கிரியைகளை விருப்பத்தோடு நிறைவேற்றி வருவார். | 02 |
| | 2.6<br><br>ஸகாத் ஸதகா பற்றிய விளக்கங்களை அறிந்து கடைப்பிடித்து வருவார். | ஸகாத்<br><br>ஸகாத் பற்றியஅறிமுகம்<br><br>ஸதகா | • ஸகாத், ஸதகா என்பவற்றின் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுவார்.<br>• ஸகாத்தின் சிறப்பை எடுத்துக் கூறுவார்<br>• ஸகாத்தின் தனித்துவத்தை விளக்கிக் காட்டுவார்.<br>• ஸகாத் கடமையாகாத போதும் ஸதகாவை நிறைவேற்றி வருவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.7<br>துஆ கேட்பதன் முக்கியத்துவத்தை அறிந்து அதனைப் பேணிக் கடைப்பிடிப்பார். | ● துஆ<br>- சிறப்பு<br>- முக்கியத்துவம், பயன்கள்<br>- பேணவேண்டிய ஒழுங்குகள்<br>● குறிப்பான சில துஆக்கள் | • துஆ என்பதை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.<br>• துஆக் கேட்பதன் சிறப்புக்களை முன்வைப்பார்<br>• துஆக் கேட்கும் முறையினைச் சொல்லியும் செய்தும் காட்டுவார்.<br>• துஆக் கேட்பதன் பயனை அறிந்து குறிப்பான, பொதுவான துஆக்களை மனனமிட்டு தமது பிரார்த்தனையில் இணைத்துக் கொள்வார். | 02 |
| **3.0**<br>**அல் அஹ்லாக் வத்தஸ்கிய்யா**<br>இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார். | 3.1.<br>மார்க்க அறிஞர்களைக் கண்ணியப்படுத்துவார். | ● அறிஞர்களின் சிறப்பும் அந்தஸ்தும்<br>● அறிஞர்களைக் கனம் பண்ணுதல் | • மார்க்க அறிஞர்களை அடையாளப்படுத்திக் கூறுவார்<br>• மார்க்க அறிஞர்களின் சிறப்புக்களை எடுத்துக் காட்டுவார்.<br>• மார்க்க அறிஞர்களை கண்ணியப்படுத்தி வருவார்.<br>• மார்க்க அறிஞர்களின் சமூக முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுவார். | 02 |
| | 3.2<br>துர்க்குணங்களை தவிர்த்து நடப்பார் | ● துர்க்குணம் அறிமுகம்<br>- பட்டப் பெயர் சூட்டுதல், கேலி செய்தல், பெய்,கோள்<br>● துர்க்குணம் பற்றிய குர்ஆன் ஸுன்னா போதனைகள்<br>● அவற்றைத் தவிர்ப்பதன் முக்கியத்துவமும், தவிர்ப்பதற்கான வழிகளும் | • துர்க்குணம் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• துர்க்குணங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.<br>• துர்க்குணங்களிலிருந்து விடுபட்டு வாழ்வார்.<br>• துர்க்குணங்களால் தனிநபர் வாழ்விலும், பொது வாழ்விலும் ஏற்படும் பாதிப்புக்களை எழுதிக் காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.3<br>சிறுவர்களுடன் அன்புடன் நடந்து கொள்வார். | • சிறியோருக்கு அன்பு காட்டுதல்<br>- ஸுன்னாவின் போதனை<br>- வரலாற்று நிகழ்வுகள் | • சிறுவர்களின் இயல்புகளைப் பட்டியற் படுத்துவார்.<br>• சிறுவர்களுடன் இரக்கமாக நடந்து கொள்ளும் முறையினைச் சொல்லிக் காட்டுவார்.<br>• நபி(ஸல்) அவர்கள் சிறுவர்களுடன் நடந்து கொண்ட முறையினை எடுத்துக் காட்டுவார்.<br>• சிறுவர்களுக்கு இரக்கம் காட்டுவதற்கான காரணங்களை விளக்கிக் கூறுவார். | 02 |
| | 3.4<br>அனாதைகள், விதவைகள் முதலானோருக்கு உதவுவார். | • பிறருக்குஉதவிசெய்தல்<br>- அனாதைகள்<br>- விதவைகள்<br>- ஏனையோர் | • சமூகத்தில் காணப்படும் நலிவுற்றோரை இனம்காட்டுவார்.<br>• அனாதைகள், விதவைகள் எனப்படுவோரை வரைவிலக்கணப்படுத்துவார்<br>• அனாதை, விதவைகளின் பலவீனங்களை அறிந்து தேவைகளை நிறைவேற்றுவார் | 02 |
| | 3.5<br>பாவங்களைத் தவிர்த்து நடப்பார். | • பாவங்களைத் தவிர்த்தல் | • பாவம் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்<br>• பாவங்களை உள்ளடக்கி பட்டியல் ஒன்றைத் தயாரிப்பார்<br>• பாவங்கள் பற்றிய இஸ்லாத்தின் கருத்தை முன்வைப்பார்<br>• பாவச் செயல்களால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புக்களை எடுத்துரைப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.6<br>எல்லோருடனும் நம்பிக்கை நாணயத்துடன் நடந்து கொள்வார். | • நம்பிக்கை நாணயம் | • நாணயம், நம்பிக்கை என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• குடும்ப, சமூக வாழ்வில் நாணயம், நம்பிக்கை என்பவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவார்.<br>• நாணயம் நம்பிக்கையுடன் வாழவேண்டும் என்பதற்கான ஆதாரங்களை முன்வைப்பார்.<br>• நாணயம், நம்பிக்கை குறையும் போது சமூகத்திலேற்படும் பாதிப்புக்களை விளக்கிக் காட்டுவார். | 02 |
| | 3.7<br>பயணங்களை மேற்கொள்ளும் போது இஸ்லாமிய வரையறைகளைப் பேணுவார் | • பிரயாண ஒழுங்குகள் | • பயணங்களின் தேவையை எடுத்துக் காட்டுவார்.<br>• பயணத்தின் போது கடைப்பிடிக்க வேண்டிய இஸ்லாமிய நெறிமுறைகளை ஆதாரங்களுடன் சொல்லிக் காட்டுவார்.<br>• பாதையிலும், வாகனங்களிலும் பயண ஒழுங்குகள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பதை விளக்கிக் கூறுவார்.<br>• பயண ஒழுங்குகளைப் பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகளை அறிந்து அவற்றைச் செயற்படுத்தி வருவார். | 02 |

| | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **04.0**<br>**மஸாதிருஷ் ஷரீஆ**<br>இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார். | 4.1 அல்குர்ஆன் ஓதுவதன் சிறப்பை அறிந்து தினமும் திருத்தமாக ஓதி வருவார் | • அல்குர்ஆன் ஓதுவதன் சிறப்பு - பயன்கள்<br>• விளங்குவதன் சிறப்பு | • திலாவதுல் குர்ஆன் என்பதற்கு விளக்கம் தருவார்.<br>• திலாவதுல் குர்ஆனின் ஒழுங்கு முறைகளை அறிந்து ஓதி வருவார்.<br>• திலாவதுல் குர்ஆனின் ஆன்மீக, உலகியல் நன்மைகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• தனக்குத் தெரிந்த அல்குர்ஆனின் பகுதிகளை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பார். | 03 |
| | 4.2 அல்குர்ஆனின் சிறிய ஸுறாக்களைத் திருத்தமாக ஓதி பொருளை விளங்கி ஒழுகுவார் | • ஸுறத்துல் மாஊன்<br>(பொருளும் விளக்கமும்) | • ஸுரதுல் மாஊனின் பதவிளக்கத்தைக் கூறுவார்.<br>• மார்க்கத்தை, மறுமை நாளை பொய்யாக்குபவனின் பண்புகளை அறிந்து கூறுவார்.<br>• மனிதர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது பற்றி அறிந்து மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார்.<br>• ஸுரா மாஊனின் பொருளை விளங்கி ஓதி வருவார். | 02 |
| | 4.3 அல் ஹதீஸுல் குத்ஸி, அல் ஹதீஸுன் நபவி என்பவற்றுக்கு உதாரணம் கூறுவார் | • ஹதீஸ் வகைகள்<br>-அல் ஹதீஸுன் நபவி<br>-அல் ஹதீஸுல் குத்ஸீ | • இரு வகை ஹதீஸ்களையும் இனம் பிரித்து விளக்குவார்.<br>• ஹதீஸ் குத்ஸிக்கு உதாரணம் காட்டுவார்.<br>• ஹதீஸ் நபவிகள் சிலவற்றை மனனமிட்டு மற்றவர்களுக்கும் கூறுவார்.<br>• தாம் கற்ற ஹதீஸ்களை பொருள் அறிந்து அவற்றை நடைமுறைப்படுத்துவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.4 ஹதீஸின் பிரிவுகளையும் ஸிஹாவுஸ் ஸித்தா பற்றியும் அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குவார். | •ஹதீஸின் பிரிவுகள்<br>- ஸஹீஹ்<br>- ஹஸன்<br>- ழஈப்<br>• ஸிஹாஹுஸ் ஸித்தா அறிமுகம் | • ஹதீஸ் பரிசீலனையின் போது அவை பல தரங்களாக வகுக்கப்பட்டமையை எடுத்துக் காட்டுவார்.<br>• ஸஹீஹ், ஹஸன், ளஈப் வகைக்கான விளக்கத்தையும் செயற்படுத்துவதில் அவற்றின் நிலைமையையும் விளக்கிக் கூறுவார்.<br>• ஸஹீஹான ஹதீஸ்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்<br>• ஸஹீஹான ஹதீஸ்களின் தொகுப்பு நூல்களை இனம் காட்டுவார். | 02 |
| | 4.5 மவ்ழுஉ தோன்றியமைக்கான காரணங்களை அறிந்து அவற்றைப் பயன்படுத்துவதை விட்டும் தவிர்ந்து நடப்பார். | • மவ்ழுஉ வரைவிலக்கனம்<br>தோன்றக ் காரணம்<br>- பாதிப்புக்கள் | • மவ்ழூஉ என்பதற்கான கருத்தை விளக்குவார்<br>• மவ்ழூஉகளின் தோற்றத்துக்கான காரணங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• மவ்ழூஉ(ஹதீஸ்)களுக்கான உதாரணங்களை சொல்லிக் காட்டுவார்.<br>• அவற்றின் தீமைகளை சுட்டிக்காட்டி அவற்றை உரைப்பதிலும் கேட்பதிலும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வார். | 02<br><br>02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **5.0**<br><br>**அஸ்ஸீறா வத்தாரீஹ்**<br>நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார். | 5.1 நபி முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்வில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் சிலவற்றை எடுத்துக் கூறுவார். | • முஹம்மத் (ஸல்) அவர்கள்<br>- நுபுவ்வத்<br>- மி∴றாஜ் | • முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகளைப் பட்டியல் படுத்துவார்.<br>• அவர்களுக்கு நுபுவ்வத் கிடைத்த நிகழ்வை சொல்லிக் காட்டுவார்.<br>• மி∴ராஜ் நிகழ்வை விபரித்துக் காட்டுவார். | 02 |
| | 5.2.1 நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் த∴வா அணுகுமுறையையும் அதில் எதிர்கொண்ட சவால்களையும் விளக்கிக் கூறுவார். | • த∴வாவும் சவால்களும் | • நபி (ஸல்) அவர்களின் த∴வா அணுகுமுறையை விளக்கிக் கூறுவார்.<br>• த∴வாவில் அவர் எதிர்கொண்ட சவால்களை பட்டியற் படுத்துவார்<br>• நபி (ஸல்) அவர்கள் சவால்களை வெற்றி கொண்ட வழிமுறையை விளங்கி அவற்றை முன்மாதிரியாகக் கொள்வார். | 02 |
| | 5.2.2 உம்மஹாத்துல் மு∴மினீன்களதும் ஸஹாபாக்களதும் வாழ்க்கை வரலாற்றைக் கற்று முன்மாதிரிகளை எடுத்து நடப்பார். | • உம்மஹாத்துல் மு∴மினீன்<br>- ஸவ்தா (ரழி) அவர்கள்<br>- ஜுவைரியா (ரழி) அவர்கள்<br>- சபிய்யா (ரழி) அவர்கள் | • உம்மஹாத்துல் மு∴மினீன்களான ஸவ்தா(ரழி), ஜுவைரியா (ரழி), சபிய்யா(ரழி) ஆகியோரின் வாழ்க்கையோட்டத்தை விபரிப்பார்.<br>• அவர்களது வாழ்வில் முக்கிய நிகழ்வுகளை எடுத்துக் காட்டுவார்.<br>• அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார். | 02 |
| | 5.2.3 உம்மஹாத்துல் மு∴மினீன்களதும் ஸஹாபாக்களதும் வாழ்க்கை வரலாற்றைக் கற்று முன்மாதிரிகளை எடுத்து நடப்பார். | • ஸஹாபாக்கள்<br>- இப்னுஅப்பாஸ் (ரழி)<br>- இப்னுஉமர் (ரழி)<br>- இப்னு ஸுபைர் (ரழி)<br>- இப்னு மஸ்ஊத் (ரழி) | • உபாதலா எனப்பட்ட இப்னு அப்பாஸ்(ரழி), இப்னு உமர் (ரழி), இப்னு ஸுபைர் (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி) ஆகியோரின் வாழ்க்கையோட்டத்தை எடுத்துக்காட்டுவார்.<br>• அவர்களின் தனித்துவத்தை விளக்கிக் கூறுவார்.<br>• முன்மாதிரிகளைப் பின்பற்றுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.3 இப்ராஹீம் (அலை) அவர்களது வரலாற்று முன்மாதிரிகளை விளங்கி வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வார். | • நபிமார்கள்<br>- இப்றாஹீம் (அலை) அவர்கள் | • நபி இப்றாஹீம் (அலை) அவர்களை அறிமுகப்படுத்துவார்.<br>• அவர்களில் காணப்பட்ட தனித்துவப் பண்புகளை சுட்டிக் காட்டுவார்.<br>• அவர்களுக்கும் நபி(ஸல்) அவர்களுக்குமிடையிலான உறவையும் மக்காவுடனான தொடர்பையும் எடுத்துக்காட்டுவார்.<br>• அவர்கள் த∴வா பணியில் அனுபவித்த இன்னல்களை அறிந்து அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார். | 02 |
| 6.0<br>பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார். | 6.1 அஜ்னபி, மஹ்ரமிகள் பற்றிய வரையறைகளைப் பேணி நடப்பார். | • அஜ்னபி, மஹ்ரமிகள் பற்றிய வரையறைகள் | • அஜ்னபி, மஹ்ரமி என்பதன் கருத்தை விளக்குவார்.<br>• சமூகத்தில் அஜ்னபி, மஹ்ரமி என்ற வேறுபாடு எவ்வாறு உருவாகின்றது என்பதைச் சுட்டிக் காட்டுவார்<br>• அஜ்னபி, மஹ்ரமிகளின் பட்டியலொன்றைத் தயாரிப்பார்.<br>• மணமுடித்தல், வுழு முறிதல் போன்ற நிகழ்வுகளில் இஸ்லாமிய நெறிமுறைகளை ஆதாரங்களுடன் சொல்லிக் காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **7.0**<br>**மபாஹிமுல் இஸ்லாமியா**<br>ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார். | 7.1.சமூகப் பணிகளில் பங்கெடுப்பதன் அவசியத்தை விளங்கி அவற்றில் பங்கேற்பார். | • சமூகப் பணிகளில் ஈடுபடல் | • சமூகப்பணி என்பதை விளக்கிக் காட்டுவார்.<br>• சமூகப் பணியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவார்.<br>• சமூகப் பணிகளில் விருப்போடு ஈடுபடுவார்.<br>• சமூகப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசுவார். | 02 |
| | 7.2 பொதுச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாப்பார். | • பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் | • பொதுச் சொத்து என்பதை வரையறுத்துக் குறிப்பிடுவார்<br>• சொதுச் சொத்துக்களை வகைப்படுத்திக் காட்டுவார்<br>• பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது ஒவ்வொரு தனிநபரினதும் பொறுப்பு என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யாது பாதுகாப்பதில் ஈடுபடுவார். | 02 |

## 8.5 கற்றல்- கற்பித்தல் முறை

கலைத் திட்டத்தில் சமய பாடம் மிக முக்கியமானதொன்றாகும். மாணவர் மிகவும் விரும்பத்தக்க விதத்தில் கவர்ச்சியாகவும் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் விதமாகவும் நடைமுறை வாழ்வில் பயிற்சிக்கு வரும் விதமாகவும் அதன் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். மாணவர்களது ஆக்கத் திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூகத் திறன் ஆகியவற்றை வளர்த்து வெளிக்கொணரும் விதமாக கற்றல்- கற்பித்தல் முறை அமைய வேண்டும்.

குறிப்பாக, சமய பாடத்தைப் பொறுத்தவரை மாணவர்களின் மூளையை அறிவாலும் தகவல்களாலும் போஷிக்கச் செய்து பரீட்சை எழுதும் திறனை மாத்திரம் வளர்த்து விடுவது போதுமானதல்ல. மாறாக, மாணவரிடையே தெளிவானதும் நிலையானதுமான ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும். பொருத்தமான கற்றல்- கற்பித்தல் முறைகளைத் தெரிந்திருப்பது ஆசிரியரின் தலையாய பணியாகும். இதன்போது வயது, அனுபவம், சூழல், தனியாள் வேறுபாடு என்பவற்றைக் கருத்திற் கொள்வது வரவேற்கத்தக்கது.

இப்புதிய கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கு மாணவர்களை மையமாகக் கொண்டே இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. எனவே, புதிய கற்றல்- கற்பித்தலில் மாணவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் விதமாக மாணவர்களது தொழிற்பாடுகள் மிகைத்துக் காணப்பட வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கில் ஆசிரியர் தனது மாணவரது தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்கள் எதிர்கொள்கின்ற இடர்பாடுகளை நிவர்த்தித்து உற்சாகமூட்டியும் திறமைகள், ஆற்றல்களுக்கு மதிப்பளித்து பாராட்டியும் நடந்து கொள்ள வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் முறைகள் சில தரப்பட்டுள்ளன.

- கலந்துரையாடல் முறை
- பங்கேற்றுக் கற்றல் முறை
- தகவல் திரட்டும் முறை
- கதை கூறல் முறை
- விரிவுரை முறை
- குழு முறை
- செய்து காட்டல் முறை
- பாத்திரமேற்று நடிக்கும் முறை
- சிந்தனைக் கிளர்வு முறை

இவ்வாறான முறைகளுடன் பாடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான மாணவர் மைய சூழலைத் தேர்ந்தெடுப்பது வரவேற்கத்தக்கது.
மாணவரின் கற்றலை மேம்படுத்த உதவும் வகையில் இஸ்லாமிய சஞ்சிகைகள், செய்தித் தாள்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், பத்திரிகை நறுக்குகள், வரைபடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

மேலும் கற்றலை இலகுபடுத்தி கவர்ச்சிகரமானதாக்கிக் கொள்வதற்காக கற்றல்- கற்பித்தல் சாதனங்கள், பொருத்தமான இணையத்தளம் போன்றவற்றைத் தேவைக்கேற்ப பயன்படுத்துவது உசிதமானதாகும்.

மேலும் பாடசாலையிலும் சுற்றாடலிலும் நடைபெறுகின்ற சமய, கலாசார நிகழ்ச்சிகள், வேலைத் திட்டங்கள் போன்றவற்றில் மிகப் பொருத்தமானவற்றை இனங்கண்டு அவற்றில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பயன்பெற வழிகாட்ட முடியும்.

எனவே, மாணவர்கள் இஸ்லாம் பாடத்தை ஆர்வத்தோடு கற்று முன்மாதிரிமிக்க முஸ்லிமாகவும் நாட்டுக்கு நல்ல பிரஜையாகவும் வாழ்வதற்கான பயிற்சியை வழங்கும் விதத்தில் கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கை காத்திரமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் ஆசிரியர்கள் அமைத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## 8.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

எமது நாட்டின் கலைத்திட்டம் அறிவு வளர்ச்சி, திறன் விருத்தி, மனப்பாங்கு மாற்றம் என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்படுகின்றது.

இஸ்லாம் ஒரு வாழ்வு முறையாக அமைவதால் பாடசாலைச் சூழலில் மனப்பாங்கு மாற்றத்தையும் அதற்கூடாகச் செயற்பாட்டுச் சீர்மையையும் ஏற்படுத்துவதற்கான அறிவும் முறையான பயிற்சியும் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

- சமய, பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
- வெளிக்களப் பயணங்கள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவற்றை ஒழுங்குசெய்து அவற்றின் மூலம் சமய, கலாசார மையங்களைத் தரிசிக்கச் செய்தலும் அவற்றுக்கு மதிப்பளித்தலும்.
- புத்தாக்க செயற்பாடுகளை உள்ளடக்கிய முஹர்ரம் புத்தாண்டை வரவேற்றல், ரமழான் மாதத்தை வரவேற்றல், மீலாத் தொடர்பான ஆக்க முயற்சிகளை மேற்கொள்ளல் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- இனங்காணப்பட்ட புத்தாக்கத் திறனுள்ள மாணவர்களின் திறமையை மேம்படுத்தும் வகையில் வளப்பங்களிப்புச் செய்யக் கூடியவர்களை வரவழைத்து செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும் அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தலும்.
- பாடசாலைச் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், அழகுபடுத்தல், பராமரித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக தனித்தனி மாணவக் குழுக்களை அமைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்தல்.
- தேசிய, சர்வதேச தினங்களை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தல்.
- இஸ்லாமிய நடைமுறைகளின் யதார்த்தபூர்வமான உண்மைகளைப் புரியவைத்து, மாணவர்கள் அவற்றை உணர்ந்து பின்பற்றுவதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

இத்தகைய பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு பாடசாலை முறைமையிலுள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் முதலானோரின் பங்களிப்பு அவசியமாகின்றது. இப்பணியை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்குத் தேவையான பௌதிக, மனித வளங்களை இனங்கண்டு அவற்றின் மூலம் பாடசாலைச் சமூகம் பயன்பெறலாம்.

மேலும் குறித்த செயற்பாடுகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து அதன் மூலம் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளில் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

இஸ்லாம் பாடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளின் கால நேரத்தைக் கவனத்திற் கொண்டு குறித்த நேரத்திற்குள் மாணவர்கள் கூடிய பயனைப் பெறும் வகையில் பாட ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பாடத்துக்காக ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும்போது, இஸ்லாம் பாடத்துக்காக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இஸ்லாமிய ஷரீஆ கலாநிலையங்களில் தராதரம் பெற்றவர்கள், இஸ்லாமிய கலாசாரத்தை ஒரு பாடமாகக் கற்ற பட்டதாரிகள் என்போரை ஈடுபடுத்துவது பயன்மிக்கதாக அமையும்.

இந்தப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இஸ்லாமிய அறிவும், சிந்தனைத் தெளிவுமுள்ள, ஒழுக்க விழுமியங்களைப் பேணி நடக்கின்ற, நேர்முறையாகச் சிந்திக்கின்ற, நல்ல உள்ளங்கொண்ட சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனளிக்கக்கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்கும் பணியில் வெற்றி காணலாம்

## 8.7 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்- கற்பித்தல் நடவடிக்கைகளுக்கூடாக மாணவர்களின் கற்றல் பேறுகளை அளவிடும் ஒரு வழிமுறையாகவே கணிப்பீடும் மதிப்பீடும் அமைகின்றது. இது ஒவ்வொரு பாட வேளையிலும் இடம்பெற வேண்டிய ஒரு செயன்முறையாகும்.

இஸ்லாம் பாட உள்ளடக்கத்தினூடாக மாணவரின் நடத்தை சார்ந்த பண்புகள், வணக்க வழிபாடுகள் மீது கொண்டுள்ள அக்கறை, சமய சமூக செயற்பாடுகளில் ஈடுபாடு போன்றன கணிப்பீடு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (இது வகுப்பறைக்குள்ளேயும் வகுப்பறைக்கு வெளியேயும் குறித்த தேர்ச்சியை அடைந்துள்ளாரா என முறைசார்ந்த அல்லது முறைசாராத வகைகளில் இடம்பெற முடியும்.)

பாட ஆரம்பம் முதற்கொண்டே கணிப்பீடு செய்யப்பட்டு, இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு பரிகாரக் கற்பித்தலை உடனடியாக ஆரம்பிப்பது பயனுடையதாக அமையும். கணிப்பீட்டுக் கருவி ஆளுக்காள் வேறுபடுவதோடு இஸ்லாம் பாடம் தொடர்பான மதிப்பீடு, கற்றல் கற்பித்தல் முடிவுற்ற பின்பும் மாத, தவணை, ஆண்டு இறுதியிலும் வாய்மொழி வினாக்களுக்கூடாகவோ, எழுத்து மூலமாகவோ, வேலைத் திட்டங்களுக்கூடாகவோ இடம்பெற முடியும். இவற்றுக்குப் பொருத்தமான நியதிகள், வழிமுறைகளை நேர காலத்துடன் உருவாக்கிக் கொள்வது அவசியமாகும்.

இவை தவிர, ஸூறாக்கள், அத்கார்கள், ஹதீஸ்கள், துஆக்கள் முதலியவற்றின் எழுத்துக்கள் சரியாக உச்சரிக்கின்றனரா, மனனமிட்டுள்ளனரா, குறித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகின்றனரா என்பவற்றையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், கணிப்பீடும் மதிப்பீடும் மாணவர்களுக்குரியது மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கும் முக்கியமானது என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இஸ்லாம் பாடத்தில் மனப்பாங்கு தொடர்பான கணிப்பீட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானதாகும். பாடத்திட்டத்தில் இடம்பெறும் அல்குர்ஆன் ஸூறாக்கள், சந்தர்ப்ப துஆக்கள் என்பவற்றைக் கணிப்பீடு செய்யும்போது அறபு எழுத்துக்களின் உச்சரிப்பு, நீட்டல்- குறுக்கம், மனனமிட்டிருத்தல் போன்றன அவதானிக்கப்படல் வேண்டும். கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் கணிப்பீடும் மதிப்பீடும் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றி- தோல்வி அதற்கூடாகவே தீர்மானிக்கப்படுகின்றது.

# கற்றல் - கற்பித்தல் செயல்முறைக்கான வழிகாட்டல்கள்

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக்கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : அல்லாஹ் அன்பும் இரக்கமும் உடையவன் என்பதையும் உதவி தேடத் தகுதியானவன் என்பதையும் அல்குர்ஆன் ஸுன்னா ஆதாரங்களுடன் விளங்கி எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- அல்லாஹ் அன்பும் இரக்கமும் உடையவன் என்பதை ஆதாரங்களுடன் முன்வைப்பார்
- அல்லாஹ்விடம் மாத்திரமே உதவி தேட வேண்டும் என்பதை ஏற்று அதன் படி ஒழுகுவார்
- அல்லாஹ் இரக்கம் உடையவன் என்பதை அவனது படைப்புக்களை ஆதாரங்காட்டி விளக்குவார்
- அல்லாஹ்விடம் உதவி தேடுவதற்கான ஒழுங்கு முறைகளை எடுத்துக் காட்டிச் செயற்படுவார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- ஸூரா அல் கஃப் 32 முதல் 44 ஆம் வசனம் வரை சொல்லப்பட்டுள்ள இரு நண்பர்களின் சம்பவத்தைக் கதையாகச் சொல்லி அதிலிருந்து ஓரிரு படிப்பினைகளை மாணவர்கள் மூலம் சொல்ல வைத்தபின் பாடத்தை ஆரம்பியுங்கள்
- இந்த துஆவின் கருத்தைத் தொழுகையுடனும், வாழ்க்கையுடனும் தொடர்புபடுத்தி விளக்குங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஈமானின் பிரதான உள்ளடக்கம் தவ்ஹீத், ரிஸாலத், மஆத் ஆகியனவாகும்.
  - தவ்ஹீத் படைப்பாளன் குறித்தும் ரிஸாலத் வழிகாட்டல் குறித்தும் மஆத் வாழ்வின் பெறுபேறு குறித்தும் விளக்குகின்றன.
  - வாழ்க்கையில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பது நம்பிக்கையேயாகும்.
  - சரியான நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொண்ட மனிதன் தோல்வியடையமாட்டான்.

**படி 2** :
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - மறைவானவற்றை நம்புவதே ஈமானாகும்
    - ஒவ்வொரு மனிதனும் மறைவான விடயம் குறித்துத் தன்னிடமுள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்வை அமைத்துக் கொள்கிறான்
    - மறைவான விடயம் குறித்து எழுகின்ற சகல விதமான வினாக்களுக்கும் தெளிவான பதிலை இஸ்லாம் முன்வைக்கின்றது
    - அல்லாஹ்வின் பெயர்கள் (அஸ்மா), பண்புகள் (ஸிபாத்), விதி (கத்ர்) என்பன பற்றி தவ்ஹீத் என்ற தலைப்பு விளக்குகின்றது
    - மனிதன் நேர்வழியில் வாழ்வதற்காக அல்லாஹ்வின் வழிகாட்டல் பற்றியும் , வழிகாட்டுவதற்காக அனுப்பப்பட்ட நபிமார்கள், றஸூல்மார்கள் பற்றியும் ரிஸாலத் என்ற தலைப்பு விளக்குகின்றது
    - மனிதன் தன் உலக வாழ்வில் இறை வழிகாட்டலை ஏற்றல், நிராகரித்தல் என்பவற்றின் பிரதிபலன் பற்றி மஆத் என்ற தலைப்பு விளக்குகின்றது
    - படைப்பாளனாகிய அல்லாஹ்வைப் பற்றியும் அவனை எவ்வாறு வணங்க வேண்டும் என்பது பற்றியும் ரிஸாலத்தினூடாக மாத்திரமே சரியாக அறிந்து கொள்ள முடியும்.
    - இறைவழிகாட்டலை ஏற்று அதன்படி வாழ்கின்ற மனிதர்கள் மறுமையில் பேரின்பம் தரும் சுவர்க்கத்தைப் பரிசாகப் பெறுவர்.
    - “ஈமான் கொண்டு நல்லமல்கள் புரிவோருக்குச் சதா நீரருவிகள் ஓடும் சுவனபதிகள் உண்டு என நன்மாராயம் கூறுவீராக .....” (2:25)
    - இறைவழிகாட்டலைப் புறக்கணித்து மனோஇச்சைப்படி வாழ்ந்தவர்கள் வேதனை தரும் நரகத்தையே வெகுமதியாகப் பெறுவர்

- ''பாவம் செய்தவர்கள் செல்லுமிடம் நரகமேயாகும். அவர்கள் அதிலிருந்து வெளியேற முயற்சிக்கும் போதெல்லாம் மீண்டும் அதிலே போடப்படுவர். மேலும், நீங்கள் பொய்ப்பித்துக் கொண்டிருந்த நரக நெருப்பை சுவையுங்கள் என்றும் அவர்களுக்குக் கூறப்படும்''. (32:20)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** நம்பிக்கையே வாழ்க்கை என்ற வகையில் ஈமானின் உள்ளடக்கத்தை விசுவாசிப்பவன், விசுவாசிக்காதவன் ஆகிய இருவரது வாழ்க்கை முறையும் எவ்வாறு வேறுபட்டிருக்கும் என்பதை விளக்குங்கள்

**குழு-2** அல்லாஹ்வின் அன்போடு தொடர்பான அவனது பெயர்களையும் பண்புகளையும் அவற்றின் பொருளுடன் கண்டறிந்து எழுதுங்கள்.

**குழு-3** ஸுமர் என்ற அத்தியாயத்தின் 71,72 ஆகிய வசனங்களை கண்டறிந்து அதன் பொருளை எழுதிய பின் காபிர்களை நரகத்திற்கு இட்டுச் சென்ற செயல் என்ன என்பதை எழுதிக்காட்டுங்கள்.

**குழு-4** ஸுமர் என்ற அத்தியாயத்தின் 73,74 ஆகிய வசனங்களைக் கண்டறிந்து அதன் பொருளை எழுதிய பின் மு.்.மின்களை சுவர்க்கத்திற்கு இட்டுச் சென்ற செயல் என்ன என்பதை எழுதிக்காட்டுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

அல்லாஹ் மீதுள்ள நம்பிக்கை காரணமாக தாம் செய்த ஏதாவதொரு நல்ல காரியத்தை நினைவுபடுத்தி அதை விபரமாக எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக்கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 : அல்குர்ஆன் இறுதி வேதம் என்பதை ஆதாரபூர்வமாக விளங்குவதோடு அதன் சிறப்புக்களையும் அறிந்து அதன் போதனைகளைக் கடைபிடித்து வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- அல்குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் கூறவார்
- அல்குர்ஆனின் சிறப்பை விளங்கி ஒழுகுவார்.
- அல்குர்ஆனின் முக்கிய போதனைகள் சிலவற்றை விளக்கிக் கூறுவார்.
- அல்குர்ஆன் எக்காலத்திற்கும் பொருத்தமானது என்பதை நிரூபித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :

- பின்வரும் சம்பவத்தை உணர்வுபூர்வமாக மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லி; சிந்தனைக் கிளர்வை ஏற்படுத்துங்கள்

  “ நபி (ஸல்) அவர்கள் தன்வயது முதிர்ந்த வளர்ப்புத் தாயாகிய உம்மு அய்மன்(ரழி) அவர்களை அடிக்கடி சுகம் விசாரிக்கச் செல்பவர்களாக இருந்தார்கள். நபியவர்களின் வபாத்தைத் தொடர்ந்து உம்மு அய்மன் (ரழி) அவர்களை சுகம் விசாரிக்கச் சென்ற அபூபக்கர்(ரழி), உமர்(ரழி) ஆகியோரைக் கண்டதும் அவர் தேம்பி அழ ஆரம்பித்தார். நபியவர்களின் மறைவிற்காகத் தான் அவர் அழுவதாக நினைத்து தோழரிருவரும் ஆறுதல் கூறலாயினர். அப்போது உம்மு அய்மன் அவர்கள், நான் நபியவர்களின் மறைவிற்காக அழவில்லை. அவரின் மறைவோடு வஹி அருளப்படுவதும் நின்று விட்டதே என்பதற்காகத் தான் அழுதேன் என்றார்கள். இதைக் கேட்டதும் தோழர்களின் கண்களும் கலங்கின.”

  இச்சம்பவத்தைக் கூறி அல்குர்ஆன் தான் அல்லாஹ்வின் இறுதி வஹி என்பதை மாணவர்களிடம் உறுதிப்படுத்துங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - மனிதர்கள் நேர்வழியில் வாழவேண்டும் என்பதற்காக அல்லாஹ் காலத்துக்குக் காலம் வேதங்களை அனுப்பினான்.
  - அனுப்பப்பட்ட வேதங்களின் வரிசையில் அல்குர்ஆன் இறுதியானதாகும்.

- அல்குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.
- அல்குர்ஆனை இறுதி வேதம் என்று நம்பி நடப்பது ஈமானின் முக்கிய அம்சமாகும்.

**படி 2** :
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - மனிதர்கள் நேர்வழியில் செல்வதற்காக அல்லாஹ் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு சமுதாயத்துக்கும் வேதங்களையும் ஸுஹுபுகளையும் அனுப்பினான்.
  - அனுப்பப்பட்ட வேதங்களுள் நான்கு வேதங்களின் பெயர்கள் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளன.
  - ஒவ்வொரு வேதங்களும் அவை வழங்கப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் அறிவு, வாழ்க்கை முறை என்பவற்றிற்கமையவே அவர்களை வழி நடாத்தின.
  - அல்லாஹ் வழங்கிய எல்லா வேதங்களிலும் நம்பிக்கை சார்ந்த விடயங்கள் பொதுவானதாகவும் நடைமுறை சார்ந்த விடயங்கள் (ஷரீஆ) கால சூழ்நிலைக்கேற்ப வேறுபட்டும் காணப்பட்டன.
  - அல்லாஹ் அனுப்பிய வேதங்களுள் அல்குர்ஆன் இறுதியானதாகும்.
  - அல்குர்ஆன் இறுதிவேதம் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.
    - ஆல்குர்ஆன் முழு மனித சமூகத்துக்கும் பொதுவாக அருளப்பட்டமை.
    - அல்குர்ஆன் மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் உள்ளடக்கியுள்ளமை.

- அல்குர்ஆனின் வழிகாட்டல்கள் எல்லா மக்களும் பின்பற்றக் கூடிய விதத்தில் நடுநிலைத் தன்மையும் நெகிழ்வுத்தன்மையும் கொண்டுள்ளமை.
- அல்குர்ஆனின் அற்புதத் தன்மை அறிவியல் சார்ந்து காணப்படுகின்றமை.

- பின்வரும் அல்குர்ஆன் வசனங்களும் அல்குர்ஆன் இறுதி வேதம் என்பதனை உறுதிப்படுத்துகிறன.
    - ''நாமே அல்குர்ஆனை இறக்கினோம். நாமே அதைப் பாதுகாப்போம்'' ஏனைய வேதங்களுக்கு இப்பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படவில்லை.
    - இன்று உங்கள் மார்க்கத்தை உங்களுக்காக நான் பூர்த்தியாக்கி விட்டேன். எனது அருளையும் பூர்த்தியாக்கி விட்டேன். இஸ்லாத்தை உங்கள் மார்க்கமாக ஏற்றுக் கொண்டேன்.'' (5:3) எல்லா நபிமார்களும் போதித்து வந்த இஸ்லாம், இறுதி வேதமாகிய அல்குர்ஆன் மூலம் பூர்த்தியாக்கப்பட்டது என்பதுவே இதன் கருத்தாகும்.
    - ''........மேலும் இது தனக்கு முன்னர் அருளப்பட்ட வேத நூல்களை உண்மைப் படுத்துகிறது, மேலும் மக்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக இதற்கு முன் தவ்ராத்தையும், இன்ஜீலையும் அவன் இறக்கியிருக்கின்றான். மெய்யையும், பொய்யையும் வேறுபடுத்திக்காட்டும் இந்த புர்ஃகானையும் இறக்கியுள்ளான்.''(3:3)
- அல்குர்ஆனுக்குப்பின் இதுவரை 15 நூற்றாண்டுகள் கடந்த பின்பும் இன்னொரு வேதம் வந்ததற்கான சான்றுகள் எதுவும் இல்லை.
- அல்குர்ஆனின் உள்ளடக்கத்தை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
-
    1. நம்பிக்கை சார்ந்த விடயங்கள்
    2. வணக்க வழிபாடுகள்
    3. சட்டங்கள்
    4. ஒழுக்கப் போதனைகள்
    5. படிப்பினை மிக்க வரலாறுகள்
- அல்குர்ஆன் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமானது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.
    - அல்குர்ஆனின் கருத்துக்கள் காலத்தால் பழமை அடையாதவைகளாகும்.

- அல்குர்ஆன் கூறும் விஞ்ஞான உண்மைகள் காலத்தால் உண்மைப்படுத்தப்பட்டு வருகின்றன.
- அல்குர்ஆனின் சட்டங்கள் எல்லா மனிதர்களாலும் பின்பற்ற முடியுமானதாக உள்ளன.
- அல்குர்ஆன் முற்றிலும் நடுநிலைத் தன்மை வாயந்தது
- அதன் போதனைகள் மனித வாழ்வின் அனைத்துப் பகுதிகளுக்கும் வழிகாட்டுகிறது.
- அல்குர்ஆனில் மனித கருத்துக்கள், புனைந்துரைகள் எதுவும் கலக்காது இருக்கின்றமை

- ஆல்குர்ஆன் இறுதி வேதம் என்ற வகையில் அதன்பால் நமக்குள்ள கடமைகள் பல.
  - ஓத வேண்டும்
  - விளங்க முயற்சிக்க வேண்டும்
  - அதன் போதனைகளுக்கமைய வாழவேண்டும்.
  - ஏனையவர்களை அதன்பால் அழைக்க வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** அல்குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கு ஆதாரமான மூன்று அல்குர்ஆன் வசனங்களையும் மூன்று தர்க்கரீதியான ஆதாரங்களையும் தேடி எழுதுங்கள்

**குழு-2** அல்குர்ஆன் எல்லாக் காலத்துக்கும் பொருத்தமான வேதம் என்பதை மூன்று உதாரணங்கள் காட்டி நிரூபியுங்கள்

**குழு-3** அல்குர்ஆனின் உள்ளடக்கங்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொறு உதாரணம் தேடி எழுதுங்கள்.

**குழு-4** அல்குர்ஆன்பால் எமக்குள்ள கடமைகள் ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

பெற்றோரின் கண்காணிப்புடன் அல்குர்ஆனைத் தொடராக ஓதிவருவதற்கு வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக்கொள்வாரர்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 : நபிமார்களினதும் றஸூல்மார்களினதும் பண்புகளையும் பணிகளையும் விளங்கி எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நபிமார்களினதும் றஸூல்மார்களினதும் வழிகாட்டல் சமூகத்துக்குத் தேவை என்பதை எடுத்துக் காட்டுவார்.
- அவர்களின் விஷேட பண்புகளை சொல்லிக் காட்டுவார்.
- அவர்களின் பணிகளைப் பட்டியல் படுத்துவார்.
- அவர்களின் பணிக்கும் பண்புக்கும் இடையிலான தொடர்பை விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- பின்வரும் உரைப்பகுதியை ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்க வையுங்கள்.

  சுவர்க்கத்தில் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்த ஆதம்(அலை), ஹவ்வா(அலை) ஆகிய இருவரும் ஷைத்தானின் தூண்டுதலால் அல்லாஹ்வின் கட்டளையை மீறியதைத் தொடர்ந்து மனம்வருந்தி மன்றாடினர். அவர்களது பாவங்களை மன்னித்த அல்லாஹ், அவர்களிடம்: “இங்கிருந்து நீங்கள் உலகிற்குச் சென்று விடுங்கள். அங்கு நீங்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கான எனது வழிகாட்டல் உங்களை வந்தடையும். யார் அதைப் பின்பற்றுகின்றாரோ அவர் அஞ்ச வேண்டியதும் இல்லை கவலைப்பட வேண்டியதும் இல்லை. யார் அதை மறுக்கின்றாரோ அவர் நரகத்தில் நிரந்தரமாக தங்கிவிடுவார்.” எனக் கூறினான்.

  உரைப்பகுதியை வாசித்தபின் கீழ்வரும் வினாக்களை வினவி சிந்தனைக் கிளர்வை ஏற்படுத்துங்கள்.

  1. அல்லாஹ் தனது வழிகாட்டலை மனித சமூகத்திற்கு எவ்வாறு வழங்கினான்?
  2. நாம் சுவர்க்கம் செல்ல என்ன செய்ய வேண்டும்?

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - நபிமார்களும் றஸூல்மார்களும் மனிதர்களில் இருந்து அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.
  - நபிமார்களுக்கும் றஸூல்மார்களுக்குமிடையில் சில வேறுபாடுகளுண்டு.

- நபிமார்களினதும் றஸூல்மார்களினதும் வழிகாட்டல் இன்றி நேர்வழியில் வாழ முடியாது.
- அல்லாஹ் அனைத்து சமூகங்களுக்கும் ஒரு றஸூலை அல்லது நபியை அனுப்பியுள்ளான்.

படி 2 :
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
    - மனிதர்களுக்கு முன்மாதிரியாக நின்று வழிகாட்ட மனிதர்களே பொருத்தமானவர்கள் என்பதனாலேயே அல்லாஹ் நபிமார்களை மனிதர்களில் இருந்து தெரிவு செய்தான்.
    - நபிமார்கள் மனிதர்களாய் இருப்பதைக் குறைத்து மதிப்பிட்டோருக்கு அல்லாஹ் கூறிய பதில் வருமாறு "நபியே கூறுங்கள்: பூமியில் அமைதியாக நடந்து செல்லும் மலக்குகள் உயிர்வாழ்வார்களாயின் நாம் அவர்களுக்கு வழிகாட்ட வானத்திலிருந்து மலக்கை றஸூலாக இறக்கியிருப்போம்."( 17:95)
    - றஸூல்மார்கள் என்போர் நபிமார்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விஷேட பொறுப்புச் சுமத்தப்பட்டவர்களாவர்.
    - எல்லா றஸூல்மார்களும் நபிமார்களாவர். எல்லா நபிமார்களும் றஸூல்மார்களல்லர்.
    - அல்லாஹ் உலகிற்கு ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களை அனுப்பியுள்ளான். அவர்களுள் முன்னூற்றுப் பதின்மூன்று பேர் றஸூல்மார்களாவர்
    - அல்குர்ஆனில் இருபத்தைந்து நபிமார்களே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். மேலும் ஒரு சிலர் ஹதீஸ்களில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். உதாரணம் யூஷஃ. பின் நூன்(அலை), ஸம்வேல்(அலை), இர்மியா(அலை)

- நபிமார்களையும் றஸூல்மார்களையும் விசுவாசிப்பது ஈமானின் பிரதான அம்சமாகும்.
- நபிமார்கள் மனிதர்கள் என்றவகையில் மனிதர்களுக்குரிய பொதுவான தேவைகள் அனைத்தும் அவர்களுக்கும் இருந்தன.
- அல்குர்ஆன் கூறுகிறது:
    - ''உமக்கு முன்பும் தூதர்கள் பலரை நாம் அனுப்பியுள்ளோம். அவர்களுக்கு நாம் மனைவி மக்களை ஏற்படுத்தியிருந்தோம்.''(13:38)
    - மேலும் (நபியோ) உமக்கு முன்பு நாம் அனுப்பிய தூதர்கள் அனைவரும் உணவு உண்பவர்களாயும் கடைவீதியில் நடமாடுகின்றவர்களாயும் தான் இருந்தார்கள்'' (25:20)
    - ''நான் எனக்கு எவ்வித நன்மையையும் இழப்பையும் ஏற்படுத்தும் ஆற்றல் பெற்றிலேன். அல்லாஹ் எதை நாடுகிறானோ அதுவே நிகழ்கிறது. மறைவானவற்றை நான் அறிபவனாக இருந்திருந்தால் எனக்கு நானே நிறைய ஆதாயங்களைப் பெற்றிருப்பேன். மேலும் எந்தத் தீங்கும் என்னை அணுகியிராது'' (7:188)
    - ''(நபியே) சொல்லுங்கள், நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான். எனக்கோ உங்களுடைய இறைவன் ஒருவன்தான் என்று வஹி வருகிறது''(19:110)
- நபிமார்கள் மலக்குகளாக இருந்திருந்தால் மனிதர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் அவர்களால் புரிந்து கொள்ளாமலேயே செயற்பட்டிருப்பார்கள்.
- றஸூல்மார்களின் வழிகாட்டலின்றி மனிதர்களால் சுயமாக நேர்வழியில் செல்ல முடியாது
- அல்லாஹ், மறுமை, கத்ர் போன்ற மறைவான விடயங்களை வஹியின் துணையின்றி மனித அறிவினால் மாத்திரம் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது.
- மனிதன் மனோ இச்சைக்கு ஆட்படுகின்றவன் என்றவகையில் எல்லா மனிதர்களுக்கும் பொதுவான நீதியான சட்டத்தை இறைவழிகாட்டலின்றி மனிதனால் உருவாக்க முடியாது.
- மனிதன் அவசரப்புத்தியுடையவனாக இருப்பதனால் குறுகிய கால நலன்களை மாத்திரம் கருத்திற் கொண்டே செயற்படுவான். நீண்ட காலத்தில் ஏற்படப்போகும் தீமை பற்றி அவன் சிந்திப்பதில்லை.
- நபிமார்கள் றஸூல்மார்கள் என்போர் அல்லாஹ்வின் வழிகாட்டலை நேரடியாகப் பெற்றுச் செயற்படுவதன் காரணமாக அவர்களால் மாத்திரமே முழு மனித சமூகத்துக்கும் வழிகாட்ட முடியும்.

- ஆகவே தான் அல்லாஹ் எல்லாச் சமூத்துக்கும் நபிமார்களை அனுப்பினான்.
    - "மேலும், எச்சரிக்கை செய்பவர் எவரும் வருகை தராமல் எந்தச் சமுதாயமும் இருந்ததில்லை."(35:24)

      "ஒவ்வோர் சமுதாயத்துக்கும் ஓர் இறைத்தூதர் இருக்கிறார்."(10:47)
- அல்குர்ஆன் கூறும் சில சமூகங்களும் அவர்களுக்கு அனுப்பப்பட்ட நபிமார்களும் வருமாறு
    - ஆத் சமூகம் - ஹூத் (அலை)
    - ஸமூத் கோத்திரம் - ஸாலிஹ் (அலை)
    - மத்யன் வாசிகள் - ஷுஐப் (அலை)
    - பனூ இஸ்ராயீல் - மூஸா (அலை)
    - முழு உலகிற்கும் பொதுவாக - முஹம்மத் (ஸல்)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** மனிதர்களுள் மிகவும் சிரேஷ்டமானவர்களே நபிமார்களாவர் என்றவகையில் நபிமார்களிடம் காணப்பட்ட மனிதப்பண்புகளையும் நபித்துவத்தின் விஷேட பண்பினையும் குறிப்பிட்டு அதற்கு ஆதாரமான அல்குர்ஆன் வசனங்களையும் குறிப்பிடுங்கள்.

**குழு-2** அல்லாஹ் எல்லாச் சமூகங்களுக்கும் நபிமார்களை அனுப்பியுள்ளான் என்பதற்கு ஆதாரமான அல்குர்ஆன் வசனங்களைக் கூறி ஐந்து சமூகங்களையும் அவற்றுக்கு அனுப்பப்பட்ட நபிமார்களையும் உதாரணம் காட்டுங்கள்.

**குழு-3** இம்மை வாழ்வும் மறுமை வாழ்வும் சீராக வேண்டும் எனின் நபிமார்களின் வழிகாட்டல் இன்றியமையாதது என்பதற்கான காரணங்கள் ஐந்தினைக் குறிப்பிடுங்கள்.

**குழு-4** அல்குர்ஆனில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இருபத்தைந்து நபிமார்களையும் பட்டியல்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

அல்குர்ஆனில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இருபத்தைந்து நபிமார்களையும் அவர்கள் வாழ்ந்த காலம், பரம்பரை என்பவற்றையும் தெளிவுபடுத்தம் "ஷஜரதுல் அன்பியாவை" பெற்றோரின் உதவியுடன் வரைந்து வர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 : பர்ளான, ஸுன்னத்தான ஓதல்களை அறிந்து தொழுகையில் ஓதி வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- தொழுகையில் பர்ளானதும் ஸுன்னத்தானதுமான ஓதல்கள் இடம் பெறுகின்றன என்பதை எடுத்துக் காட்டுவார்.
- தொழுகையில் ஸுன்னத்தான ஓதல்களைப் பட்டியற்படுத்துவார்.
- ஸுன்னத்தான ஓதல்களின் பொருளை மனனமிட்டுக் கூறுவார்.
- தொழுகையில் அவற்றைத் தொடராக ஓதிவருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ''துஆஉல் இப்திதாஹ்'' (''வஜ்ஜஹத்'') ஐ ஓதி அதன் மொழிபெயர்ப்பை வாசித்துக் காட்டுவதனூடாகப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- இந்த துஆவின் கருத்தை தொழுகையுடனும் வாழ்க்கையுடனும் தொடர்புபடுத்தி விளக்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் விதமாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - தொழுகை என்பது பர்ளான, ஸுன்னத்தான ஓதல்களையும், பர்ளான ஸுன்னத்தான செயற்பாடுகளையும் உள்ளடக்கிய ஸலாத்துடன் முடிவடைகின்ற ஒரு வணக்கமாகும்.
  - தொழுகையில் இடம்பெறும் செயல்களில் பர்ளான, ஸுன்னத்தான ஓதல்கள் ஓதப்படுகின்றன.
  - இவ்வோதல்கள் தொழுகையை நிறைவேற்றுபவர்களை இறை நினைவுக்கு உட்படுத்துகின்றன.
  - தொழுகையின் ஓதல்கள் அதனை நிறைவேற்றுபவனின் வாழ்க்கைக்கு உபதேசமாகவும் இருக்கின்றன.

படி 2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - தொழுகையின் பர்ளான ஓதல்களை நபி(ஸல்) அவர்கள் தெளிவாக ஓதிக் காட்டியுள்ளார்கள்.

தக்பீர் தஹ்ரீமா ÇáááåÃßÈÑ

ஸூரதுல் பாதிஹா بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۙ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۙ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۗ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۗ

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۙ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அத்தஹிய்யாத் ஓதுதல்

ÇáÊóÍöíøóÇÊõ ÇáãõÈóÇÑóßóÇÊõ ÇáÕøóáóæóÇÊõ ÇáØøóíøöÈóÇÊõ áöáøåö ÇáÓøóáÇóãõ Úóáóíúßó ÃóíøõåóÇ
ÇáäøóÈöíøõ æóÑóÍúãóÉõ Çááøåö æóÈóÑóßóÇÊõåõ ÇáÓøóáÇóãõ ÚóáóíúäóÇ æóÚóáóì ÚöÈóÇÏö Çááøåö
ÇáÕøóÇáöÍöíúäó ÃóÔúåóÏõ Ãóäú áÇó Åöáóåó ÅöáÇøó Çááøåõ æóÃóÔúåóÏõ Ãóäøó ãõÍóãøóÏðÇ ÑóÓõæáõ Çááøåö

அத்தஹிய்யாத்தில் ஸலவாத் ஓதுதல்

Çááøåõãøó Õóáøö Úóáóì ãõÍóãøóÏò æóÚóáóì Âáö ãõÍóãøóÏò ßóãóÇ ÕóáøóíúÊó Úóáóì ÅöÈúÑóÇåöíúãó æóÚóáóì Âáö
ÅöÈúÑóÇåöíúãó Åöäøóßó ÍóãöíúÏñ ãóÌöíúÏñ
Çááøåõãøó ÈóÇÑößú Úóáóì ãõÍóãøóÏò æóÚóáóì Âáö ãõÍóãøóÏò ßóãóÇ ÈóÇÑóßúÊó Úóáóì ÅöÈúÑóÇåöíúãó æóÚóáóì
Âáö ÅöÈúÑóÇåöíúãó Åöäøóßó ÍóãöíúÏñ ãóÌöíúÏñ

முதலாம் ஸலாம் கூறுதல்

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ

- தொழுகையின் ஒவ்வொரு நிலைகளிலும் வரும் ஸுன்னத்தான ஓதல்களையும் நபி (ஸல்) அவர்கள் தெளிவாக ஓதிக் காட்டியுள்ளார்கள்.
- முஸ்லிம் இந்த பர்ளான,ஸுன்னத்தான ஓதல்களை மனனமிட்டு தொழுகையின் அதற்குரிய நிலைகளில் ஓதி வருவார்.
- தொழுகையின் இந்த பர்ளான, ஸுன்னத்தான ஓதல்கள் ஒரு முஸ்லிமுக்கு சிறந்த உபதேசமாகவும் உள்ளன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** உங்களுக்குத் தரப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற தொழுகையின் ஓதல்களில் பர்ளான ஓதல்களை மாத்திரம் பிரித்து எழுதிக்காட்டுங்கள்.

**குழு-2** உங்களுக்குத் தரப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற தொழுகையின் ஓதல்களில் ஸுன்னத்தான ஓதல்களை மாத்திரம் பிரித்து எழுதிக்காட்டுங்கள்.

**குழு-3** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற ஓதல்கள் ஒவ்வொன்றும் எவ்வெவ் நிலைகளில் ஓதப்படுகின்றன என்பதை அவற்றுக்கெதிரே குறிப்பிடுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

தொழுகையின் பர்ளான, ஸுன்னத்தான ஓதல்களை தமது பெற்றோருக்கு மனன மூலம் ஒப்புவித்து சரிபார்த்துக் கொள்ள மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

அட்டவணை I

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

- الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ ۝ الرَّحْمَٰنِ الرَّحِيمِ ۝ مَالِكِ يَوْمِ الدِّينِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۝
  اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۝ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۝
- ÓõÈÍóÇäó ÑóÈì ÇáÃÚáì
- ................................... æóÈöÍóãúÏöåö ÓõÈúÍóÇäó ÑóÈøöíó ÇáúÚóÙöíúãö æóÈöÍóãúÏöåö
- ................................... ÓóãöÚó Çááåõ áöãóäú ÍóãöÏóåõ ÑóÈøóäóÇ áóßó ÇáúÍóãúÏõ
- ................................... ÑóÈøö ÇÛúÝöÑú áöíú æóÇÑúÍóãúäöíú æóÇÌúÈõÑúäöíú æóÇÑúÝóÚúäöíú æóÇÑúÒõÞúäöíú æóÇåúÏöäöíú æóÚóÇÝöäöíú æóÇÚúÝõ Úóäøöíú
- ÇáÓøóáÇóãõ Úóáóíúßõãú æóÑóÍúãóÉõ Çááåö
- ................................... ÇáÊøóÍöíøóÇÊõ ÇáúãõÈóÇÑóßóÇÊõ ÇáÕøóáóæóÇÊõ ÇáØøóíøöÈóÇÊõ ááåö

| பர்ளான ஓதல்கள் | ஸுன்னத்தான ஓதல்கள் |
|---|---|
| | |

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 : பர்ளான தொழுகைகளை, ஸுன்னத்தான தொழுகைகளை இனங்கண்டு அவற்றைப் பேணி வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- தொழுகையில் பர்ளானவை, ஸுன்னத்தானவை என இரு பிரிவுகள் உண்டென்பதை உதாரணம் கூறி எடுத்துக் காட்டுவார்.
- பர்ளான தொழுகைகளை அட்டவணை மூலம் பிரித்துக் காட்டுவார்.
- பர்ளான தொழுகை போலவே ஸுன்னத்தான தொழுகைகளையும் தொடராக நிறைவேற்றி வருவார்.
- தொழுகை அல்லாஹ்வை நெருங்குவதற்கான சாதனம் என்பதை நிரூபித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- மாணவர்கள் நாளாந்தம் நிறைவேற்றுகின்ற தொழுகைகள் பற்றி கேட்டறிந்து கொள்ளுங்கள். அவற்றுள் தனிநபர் மீதும் சமூகத்தின் மீதும் கடமையாகின்ற வணக்கங்களை வினவுங்கள்.
- அவற்றுள் பர்ளான, ஸுன்னத்தான தொழுகைகள் பற்றி நினைவூட்டிப் பாடத்தில் பிரவேசியுங்கள்.
- தொழுகை தொடர்பாக பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - தொழுகைகள் பர்ளானவை, ஸுன்னத்தானவை என இரு வகையுண்டு.
  - பர்ளான தொழுகைகள் பர்ளு ஐன், பர்ளு கிபாயா என இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.
  - ஸுன்னத்தான தொழுகைகள் நிறைவேற்றப்படுவதற்கான காரணம், காலம், நேரம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டும் வகைப்படுத்தப்படுவதுண்டு.
  - இவை தவிர வேறு சில ஸுன்னத்தான தொழுகைகளும் நபி வழியினூடாக கிடைக்கப் பெற்றுள்ளன.
  - பர்ளான, ஸுன்னத்தான தொழுகைகளை நிறைவேற்றுவதன் மூலம் இம்மையிலும் மறுமையிலும் அபரிமிதமான நன்மைகள் கிடைக்கின்றன.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும், போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - ''பர்ளு ஐன்'' தனிநபர் ஒவ்வொருவர் மீதும் கட்டாயமாகின்ற கடமைகளைக் குறிக்கின்றது. இவற்றை நிறைவேற்றுவதன் மூலம் நன்மையும் நிறைவேற்றாமல் இருப்பதன் மூலம் பாவமும் தண்டனையும் கிடைக்கும்.
    - ''பர்ளு கிபாயா'' என்பது சமூகத்தவர்கள் மீது விதியாகும் கடமைகளைக் குறிக்கின்றது. ஒரு சிலர் நிறைவேற்றினாலும் எல்லோரது பொறுப்பும் நீங்கிவிடும். அவர்களுக்கு நன்மையும் கிடைக்கும். எவருமே நிறைவேற்றாவிட்டால் எல்லோரும் குற்றவாளிகளாகக் கணிக்கப்படுவர்.
    - பர்ளு ஐன், பர்ளு கிபாயாவிற்கு மேலதிகமான செயற்பாடுகள் ஸுன்னத்தானவை என அழைக்கப்படுகின்றன. இவற்றை நிறைவேற்றினால் நன்மை கிடைக்கும். நிறைவேற்றாவிட்டால் பாவம் கிடைக்காது. ஆனால் மறுமையில் விசாரணையின் போது பர்ளான செயற்பாடுகளின் குறைபாடுகளை நிவர்த்திக்க அவை உதவும்.
    - தொழுகையிலும் பர்ளான, ஸுன்னத்தான பிரிவுகள் உண்டு. இவற்றை பின்வரும் அட்டவணை மூலம் அறிந்து கொள்ளலாம்.
    - எவர் கடமையான தொழுகைகளைத் தவிர இரவிலும் பகலிலும் பன்னிரண்டு ரக்அத் தொழுகைகளை நிறைவேற்றுகிறாரோ அவருக்காக அல்லாஹ் சுவனத்தில் ஒரு வீட்டை நிர்மாணிக்கின்றான்.
    - திண்ணமாக தொழுகை மானக்கேடான மற்றும் தீய செயல்களை தடுக்கின்றது (29:41)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** தொழுகையில் பர்ளு ஐன், பர்ளு கிபாயா ஆகிய இரு வகைகளையும் வேறுபடுத்தி பிரிஸ்டல் அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**குழு-2** ஒரு முஸ்லிம் நாளாந்தம் நிறைவேற்ற முடியுமான ஸுன்னத்தான தொழுகைகளை அட்டவணைப்படுத்துங்கள்.

**குழு-3** நபி (ஸல்) அவர்கள் பேணிவந்த முஅக்கதான ஸுன்னத்தான தொழுகையைக் குறிப்பிட்டு அது பற்றி எழுதுங்கள்.

**குழு-4** பர்ளான, ஸுன்னத்தான தொழுகைகளை பேணுவதனால் நீங்கள் அடைந்து கொள்ளக் கூடிய ஆன்மீக, லௌகீக நன்மைகளை அட்டவணைப்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

வீட்டில் நாளாந்தம் பேணக்கூடிய ஸுன்னத்தான தொழுகைகளைப் பெற்றோரோடு இணைந்து நிறைவேற்ற வழிப்படுத்துங்கள்.

.

# தொழுகை

- **பர்ளு**
  - **பர்ளு ஐன்**
    (உதாரணம் : ஐவேளைத் தொழுகை, ஜும்ஆ தொழுகை)
  - **பர்ளு கிபாயா**
    (உதாரணம் : ஜனாஸாத் தொழுகை, ஐவேளை ஜமாத் தொழுகை)
- **ஸுன்னத்**
  - **முஅக்கதானவை (வற்புறுத்தப்பட்டவை)**
    உதாரணம் : ஐவேளைத் தொழுகைக்கு முன் பின் ஸுன்னத்தான 10 ரக்அத்
  - **கைறு முஅக்கதானவை (வற்புறுத்தப்படாதவை)**
    உதாரணங்கள்: ஐவேளைத் தொழுகைக்கு முன் பின் தொழப்படும் ஸுன்னத்தான 12 ரக்அத்
  - **ராதிபானவை (நாளாந்தம் தொழுபவை)**
    உதாரணங்கள் தஹஜ்ஜுத், வித்ர்
  - **கைறு ராதிபானவை (நாளாந்தம் தொழாதவை)**
    உதாரணங்கள்: பெருநாள் தொழுகை, கிரகணத் தொழுகை
  - **ஜமாஅத்தாக தொழுவது ஸுன்னத்தாக்கப் பட்டவைகள்**
    உதாரணங்கள் பெருநாள் தொழுகை, கிரகணத் தொழுகை
  - **ஜமாஅத்தாக தொழுவது ஸுன்னத்தாக்கப் படாதவைகள்**
    உதாரணங்கள்: தஹிய்யதுல் மஸ்ஜித், இஸ்திஹாரா

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3 : தொழுகையின் ஆன்மீக, லௌகீக பயன்களை அறிந்து முறையாக நிறைவேற்றுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- தொழுகையின் மூலம் ஆன்மீகப் பயன்கள் கிட்டும் என்பதை எடுத்துக் காட்டுவார்.
- தொழுகையின் உலகியற் பயன்களைப் பட்டியற்படுத்துவார்.
- தொழுகையை முறையாக நிறைவேற்றி வருவார்.
- தொழுகையின் பயன்களை எடுத்துக்காட்டி சொற்பொழிவாற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- ''நிச்சயமாக தொழுகை மானக்கேடான, வெறுக்கத்தக்க விடயங்களிலிருந்து மனிதனைத் தடுத்துவிடும்'' (29:41) எனும் அல் குர்ஆன் வசனத்தை எழுதிக் காட்சிப்படுத்தி மாணவர்களை கவனயீர்ப்புச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - தொழுகை மனிதனது உடல், ஆன்மா, அறிவு ஆகிய மூன்றுக்கும் பயனுறுதி வாய்ந்த இபாதாவாகும்.
  - இம்மூன்று கூறுகளைச் சமநிலைப்படுத்துவதில் தொழுகைக்கு முக்கிய பங்கிருக்கின்றது.
  - தொழுகையை ஒரு முஸ்லிம் முறையாக நிறைவேற்றுவதன் மூலம் உலகியல், ஆன்மீகப் பயன்களைப் பெறுகின்றான்.

**படி 2** :
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - தொழுகையின் மூலம் அல்லாஹ்வுக்கும் மனிதனுக்குமிடையிலான இடைத்தொடர்பு புதுப்பிக்கப்படுகின்றது.
    - தொழுகை மூலம் மனிதனது உடல், உடை, இடம் என்பன சுத்தம் அடைகின்றன.
    - மனிதன் அல்லாஹ்வின் அழைப்பிற்குக் கட்டுப்படும் தன்மையை தொழுகை ஏற்படுத்துகிறது.
    - தொழுகை உள்ளத்தை ஒருநிலைப்படுத்தப் பயிற்றுவிக்கின்றது.
    - தொழுகை தகாத காரியங்களிலிருந்தும், மானக்கேடான காரியங்களிலிருந்தும் பாதுகாக்கின்றது.
    - தொழுகையின் ஓதல்கள் சிறந்த உபதேசங்களாக அமைகின்றன.
    - தொழுகை நேரத்திற்கு இயங்கும் பயிற்சியைத் தருகின்றது.
    - கஷ்டங்களை நீக்குதல், கப்ருடைய வேதனையை அகற்றல், ஸிராத்தை விரைவாகக் கடந்து செல்லல், கேள்வி கணக்கின்றி சுவனம் நுழைதல் போன்ற நன்மைகளை தொழுகை பெற்றுத் தருகின்றது.
    - கூட்டுத் தொழுகை, ஜும்ஆத் தொழுகை என்பன மூலம் பல பிரத்தியேக நன்மைகள் கிடைக்கின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** தொழுகை மூலம் கிடைக்கின்ற பயன்களைக் குறித்துக் காட்டும் குர்ஆன் வசனங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவை தரும் கருத்துக்களை உரை வடிவில் எழுதுங்கள்.

**குழு-2** தொழுகையை விடுவதால் ஏற்படக் கூடிய விபரீதங்களை குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களுடன் விபரித்து எழுதுங்கள்.

**குழு-3** தொழுகையின் ஆத்மீக, லௌகீகப் பயன்கள் தொடர்பாக சொற்பொழிவொன்றை தொகுத்து வழங்குங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

தொழுகை மூலம் கிடைக்க முடியுமான பயன்பாடுகள் தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.4 : ஸஜ்தாக்களை அறிந்து உரிய சந்தர்ப்பங்களில் நிறைவேற்றி வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- தொழுகையில் பர்ளான ஸஜ்தாக்கள் இருப்பது போல, தொழுகைக்குள்ளேயும் வெளியேயும் ஸுன்னத்தான ஸஜ்தாக்களும் உண்டென்பதை எடுத்துக் காட்டுவார்.
- ஸுன்னத்தான ஸஜ்தாக்களை பெயர் குறித்து விளக்கமளிப்பார்.
- ஸுன்னத்தான ஸஜ்தாக்கள் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டுவார்.
- உரிய சந்தர்ப்பங்களில் ஸுன்னத்தான ஸஜ்தாக்கள் நிறைவேற்றும் முறையினை செய்து காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**
- பர்ளான தொழுகை தவிர்ந்த நேரங்களில் ஸஜ்தாக்கள் செய்த அனுபவம் உண்டா? அல்லது பிறர் அவ்வாறு செய்வதைக் கண்டதுண்டா? என மாணவர்களிடம் வினவிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் விதமாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - ஸுஜுத் என்பது அல்லாஹ்வுக்காக என்ற நிய்யத்துடன் சிரம்பணிதலைக் குறிக்கின்றது.
  - பர்ளான தொழுகையில் நிறைவேற்றப்படும் ஸஜ்தாக்கள் தவிர்ந்த வேறு வகையான ஸஜ்தாக்களும் காணப்படுகின்றன.
  - ஸஜ்தா திலாவத், ஸஜதா சுக்ர், ஸஜ்தா ஸஹ்வ் என்பன முக்கிய ஸஜ்தாக்களாகும்.
  - ஒவ்வொரு ஸஜ்தாவையும் நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பங்களும் முறைகளும் உள்ளன.

**படி 2 :**
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

    - ஸஜ்தா திலாவத் என்பது அல் குர்ஆனில் உள்ள ஸஜ்தாவுடைய ஆயத் ஒன்றை ஓதினால் அல்லது செவிமடுத்தால் ஒரு ஸஜ்தா செய்வதைக் குறிக்கும்.
    - குர்ஆனில் 15 இடங்களில் ஸஜ்தாவுடைய ஆயத்துக்கள் இடம்பெற்றுள்ளன. (அ.்.ராப்: 206,அர்ர.்.து:15, அந்நஹ்ல்:49, அல் இஸ்ரா : 107, மர்யம்: 57, அல் ஹஜ் : 77, அல் புர்கான்: 60, அந்நம்ல்: 25, ஸஜ்தா: 15, ஸாத் : 24, புஸ்ஸிலத் : 37, அந்நஜ்ம் : 62, அல் இன்ஷிகாக் : 21, அல் அலக் : 19)
    - ‘‘ஒரு மனிதன் குர்ஆனின் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதி ஸுஜூத் செய்தால், ஷைத்தான் அப்புறப்பட்டு அழுது கொண்டு ‘‘எனக்கே கேடு, ஸுஜூத் செய்யுமாறு மனிதனுக்கு கட்டளையிடப்பட்டபோது அவன் ஸுஜூத் செய்து சுவனபதியை நிச்சயமாக்கிக் கொண்டான். நானோ ஸுஜூத் செய்யுமாறு கட்டளையிடப்பட்டபோது அதனை நிராகரித்து விலகிக் கொண்டேன். அதனால் எனக்கு நரகம் நிச்சயமாக்கப்பட்டது என்று ஓலமிட்டுக் கொண்டே இருப்பான்’’ (முஸ்லிம், அஹ்மத்) என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
    - பொதுவாக குர்ஆன் ஓதுகின்ற வேளையில் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதினால் அல்லது செவிமடுத்தால் ஒரு ஸஜ்தா செய்வதே ஸஜ்தா திலாவத் ஆகும். இது ஸுன்னத் ஆகும். ஸஜ்தாவுடைய ஆயத்தை தொழுகையில் ஓதினாலும் அவ்வாறு செய்வது ஸுன்னத் ஆகும்.

      ஸஜ்தா திலாவத்தில் ஸுப்ஹான றப்பியல் அ.்.லா என்பதை ஓத முடியும். மேலும் ஒரு துஆவையும் நபி (ஸல்) அவர்கள் ஓதக் கற்றுக் தந்துள்ளார்கள்.

      [illegible]
      [illegible]

    - ஸஜ்தா ஷுக்ர் என்பது அல்லாஹ் எமக்கு ஏதாவது அபார அருட்கொடைகளை வழங்கிவிட்டால் அல்லது எமக்கு வரவிருந்த ஆபத்துக்கள் தவிர்க்கப்பட்டால் அதற்காக அவனுக்கு நன்றி செலுத்திச் செய்யும் ஸுன்னத்தான ஸுஜுதையே குறிக்கின்றது.
    - இந்த ஸஜ்தா தனக்காகவோ தன்னை சார்ந்தவர்களுக்காகவோ முஸ்லிம் சமுதாயத்திற்காகவோ ஏற்படும் மகிழ்ச்சிக்காக அல்லது ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதற்காக நிறைவேற்றலாம்.
    - அல்லாஹ்வுக்காக ஸஜ்தா ஷுக்ர் செய்கின்றேன் என்ற நிய்யத்துடன் தக்பீர் சொல்லி ஸுஜுதிலிருந்து எழுந்து ஸலாம் கூறியதும் நிறைவேறிவிடும்.
    - ஸஜ்தா ஸஹ்வ் என்பது தொழுகையில் ஏற்பட்ட மறதி ஒன்றுக்காக நிறைவேற்றப்படும் இரு ஸுஜுதுகளையே குறிக்கும்.

      ‘‘உங்களில் ஒருவர் தனது தொழுகையில் மூன்று ரக்அத் தொழுதேனா அல்லது நான்கு தொழுதேனா என சந்தேகப்பட்டால்

சந்தேகத்தை விட்டுவிடுங்கள். மிக உறுதியான எண்ணிக்கையை தொழுததாக எடுத்துக் கொள்ளுங்கள் பின்னர் ஸலாம் கொடுக்க முன் இரண்டு ஸுஜூதுகளை நிறைவேற்றுங்கள்'' (முஸ்லிம்)

- ஸஜ்தா ஸஹ்வுக்கு நான்கு பர்ளுகள் காணப்படுகின்றன.

  - ஸஜ்தா ஸஹ்வ் செய்கிறேன் என்று மனதால் நிய்யத் வைத்தல்
  - இரண்டு ஸுஜூது செய்தல்
  - இரண்டு ஸுஜூதுகளுக்குமிடையில் உட்காருதல்
  - இரண்டு ஸுஜூதுகளிலும் நடு இருப்பில் தாமதித்தல்

- ஸஜ்தா ஸஹ்வு நிறைவேற்றப்படும் சந்தர்ப்பங்களாவன

  - மறதியாக ஐந்து ரக்அத்துக்கள் தொழுதல், ஒரு ருகூவை மேலதிகமாக செய்தல், பர்ளுகளில் ஒன்றை மறதியாக விட்டுவிட்டு நினைவுக்கு வந்தவுடன் அதைச் செய்து விட்டு ஸஜ்தா ஸஹ்வு செய்தல்.
  - முக்கிய ஓதல்களை இடம் மாற்றி ஓதல்
  - அப்ஆல் ஸுன்னத் ஒன்று விடுபட்டதா என சந்தேகம் ஏற்படல்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** ஸஜ்தாக்களின் வகைகளை வரைவிலக்கணப்படுத்துங்கள்.

**குழு-2** ஸஜ்தா ஷுக்ர் நிறைவேற்ற முடியுமான சில சந்தர்ப்பங்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-3** அல்குர்ஆனில் ஸஜ்தா திலாவத் இடம் பெற்றுள்ள ஆயத்துக்களை தர்ஜமதுல் குர்ஆனின் உதவியுடன் கண்டறிந்து பட்டியற்படுத்துங்கள்.

**குழு-4** ஸஜ்தா ஸஹ்வு நிறைவேற்றப்படுவதற்கான சந்தர்ப்பங்களை அனுபவத்தினூடாக கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

தமது பெற்றோர் தங்களது வாழ்வில் ஸஜ்தா ஷுக்ர் நிறைவேற்றிய சந்தர்ப்பங்கள் பற்றி அவர்களுடன் கலந்துரையாடி, எதிர்காலங்களில் அதனை நிறைவேற்றி வருவதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.5 : றமழானின் சிறப்பை அறிந்து ஒழுகுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- றமழான் ஏனைய மாதங்களை விட சிறப்படைவதற்கான காரணங்களைச் சுட்டிக் காட்டுவார்.
- ஹதீஸ்களை முன்வைத்து றமழானின் சிறப்பை எடுத்துக் கூறுவார்.
- றமழானின் கண்ணியத்தைப் பேணி ஒழுகுவார்
- றமழானின் விசேட கிரியைகளை விருப்பத்தோடு நிறைவேற்றி வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ÇÐÇÌÇÁÑãÖÇäÝÊÍÊÇÈæÇÈÇáÌäÉæÛáÞÊÇÈæÇÈÇáäÇÑ,ÕÝÏÊÇáÔíÇØíäõ

  “றமழான் மாதம் வந்துவிட்டால் சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. நரகின் வாயில்கள் இறுக மூடப்படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றார்கள்” (புகாரி, முஸ்லிம்)

  குறித்த ஹதீஸை உள்ளடக்கம் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் விதமாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - றமழான் ஏனைய மாதங்களை விட பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன.
  - றமழானின் சிறப்புக்களை பல்வேறு ஹதீஸ்கள் வலியுறுத்தியுள்ளன.
  - கண்ணியமிக்க றமழானில், எமக்கு நிறைவேற்ற பல்வேறு கடமைகள் உள்ளன. அவற்றை மனமுவந்து விருப்போடு நிறைவேற்றி வறுவதை ஹதீஸ்கள் வலியுறுத்துகின்றன.

படி 2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - றமழான் ஏனைய மாதங்களை விட பல சிறப்புக்களைக் கொண்டுள்ளது.
  - ஆயிரம் இரவுகளை விட சிறந்த இறவான லைலதுல் கத்ரைக் கொண்டுள்ளது.
  - பசி, தாகம், புலனுணர்ச்சிகள் முகாமை செய்யும் மாதமாகும்.
  - பாவமன்னிப்பும் நரகவிடுதலையும் இருக்கக்கூடிய மாதமாகும்.
  - ஒரு மு.்.மினின் தக்வாவை பரீட்சிக்கும் மாதமாகும்.
  - இறை திருப்தியை பெறும் மாதமாகும்.
  - சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படும் நரகின் வாயில்கள் மூடப்படும் மாதமாகும்.
  - நன்மைகளின் பால் தூண்டும் ஷைத்தான் விளங்கிடப்படும் மாதமாகும்.

  இதனாலே இம்மாதத்தை கண்ணியப்படுத்தி இறை திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் பல்வேறு விசேட கிறியைகளை விருப்பத்தோடு நிறைவேற்றி வரல் வேண்டும் என ஹதீஸ்கள் தெளிவு படுத்துகின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** றமழானின் சிறப்புக்களைக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-2** றமழானின் சிறப்புக்களைக் கூறும் ஹதீஸ்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-3** றமழானில் விசேடமாக கவனம் செலுத்த வேண்டிய நற்கிரியையகள் தொடர்பான பட்டியலை ஹதீஸ்களின் துணையுடன் திரட்டுங்கள்

றமழானை சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகளை உமது நண்பரொருவருக்குக் கடிதமாக எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

றமழான் மாதத்தின் கண்ணியத்தைப் போற்றும் வகையில் வீட்டுச் சூழலில் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் ஒரு பட்டியலைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.6 : ஸகாத், ஸதகா பற்றிய விளக்கங்களை அறிந்து கடைப்பிடித்து வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸகாத், ஸதகா என்பவற்றின் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுவார்.
- ஸகாத்தின் சிறப்பை எடுத்துக் கூறுவார்.
- ஸகாத்தின் தனித்துவத்தை விளக்கிக் காட்டுவார்.
- ஸகாத் கடமையாகாத போதும் ஸதகாவை நிறைவேற்றி வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- ஸகாத், ஸதகா இரு சொற்கள் குறித்தும் மாணவர்கள் தாம் விளங்கிக் வைத்துள்ளவை பற்றி வினவி அவர்களது கருத்துக்களைப் பெற்று கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஸகாத் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றாகும்.
  - வசதி படைத்தோர், குறித்த சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிறைவேற்றும் ஒரு கடமையே ஸகாத் ஆகும்.
  - ஸதகா என்பது பொதுவாக நிறைவேற்றப்படும் தான தர்மங்களைக் குறிக்கும்.
  - ஸகாத், ஸதகா என்பவற்றுக்கு பல்வேறு சிறப்புக்கள் காணப்படுகின்றன.
  - ஸகாத் கடமைக்கு பல்வேறு நிபந்தனைகள் காணப்படுவதால் அது ஸதகாவை விட தனித்துவம் பெற்று விளங்குகின்றது.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்

    - ஸகாத், ஸதகா ஆகிய இரண்டுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக ஸகாத் வாஜிபானது. குறிப்பிட்ட சில பொருள்களில் மாத்திரம் கடமையானது. குறிப்பிட்ட சிலர் மீது கடமையானது, குறிப்பிட்ட அளவு, குறிப்பிட்ட எட்டு வகுப்பினருக்கு மாத்திரம் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனைகளைக் கொண்டது. ஸதகா அவ்வாறன்று.
    - (நபியே!) அவர்களது பொருள்களிலிருந்து (கடமையான) ஸகாத்தை எடுப்பதன் மூலம் (உள்ளும் புறமும்) அவரைப் பரிசுத்தமாக்கி வைத்து அதைக் கொண்டு அவர்களைத் தூய்மைப்படுத்தி அவர்களை ஆசிர்வதிப்பீராக. (9:103)
    - ''ஸகாத்தை கொடுக்காது வைத்துக் கொள்ளும் சமூகத்தினை அல்லாஹ் பஞ்சத்தைக் கொண்டு சோதிப்பான்.'' ( தபரானி )
    - (நம்பிக்கையாளர்களே!) எவர்கள் தங்கள் பொருளை (பிறருக்கு உதவும் நோக்கில்) இரவிலும் பகலிலும் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் செலவு செய்கிறார்களோ அவர்களுக்குரிய கூலி அவர்களின் இறைவனிடம் அவர்களுக்கு உண்டு. தவிர, அவர்களுக்கு (மறுமையில்) எவ்வித பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும்மாட்டார்கள். (2:274)
    - ''தர்மங்களைச் செய்பவர் இறைவனுக்கு அருகாமையில் இருக்கிறார். அவர் மனிதர்களுக்கு அருகாமையில் இருக்கிறார். அவர் சுவர்க்கத்திற்கு அருகாமையில் இருக்கிறார். நரகத்திற்கு வெகு தொலைவில் இருக்கிறார்....'' (திர்மிதி)
    - ஸகாத் விதியாவோர் பற்றியும், விதியாகும் பொருட்கள் பற்றியும், ஸகாத் பெறத் தகுதியானோர் பற்றியும் இஸ்லாமிய சட்டம் விளக்குகின்றது.
    - ஸதகா பொருள்களில் மட்டுமன்றி செயல்களிலும் இடம் பெறும். (தாயின் முகத்தைப் பார்த்து முறுவலித்தல்)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** ஸகாத்தின் முக்கியத்துவம் பற்றி அல்குர்ஆனில் இடம் பெற்றுள்ள ஐந்து வசனங்களைக் கண்டறிந்து பொருளுடன் எழுதி, அவற்றிலிருந்து நீங்கள் புரிந்து கொண்ட கருத்துக்களையும் எழுதுங்கள்.

**குழு-2** ஸதகாவின் சிறப்புக்கள் பற்றிய ஐந்து ஹதீஸ்களின் பொருளை எழுதி சிறு விளக்கமொன்றை முன்வையுங்கள்.

**குழு-3** ஸகாத் விதியாகும் பொருட்கள், பெறத் தகுதியானோர் என்பவற்றை உள்ளடக்கிய ஓர் பட்டியல் தயாரியுங்கள்.

**குழு-4** ஸதகாவின் முக்கியத்துவம் அல்லது சிறப்பு பற்றிய ஒரு வரலாற்று நிகழ்வைக் குறிப்பிட்டு அதன் படிப்பினைகளை எழுதிக்காட்டுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

‘‘ஒவ்வொரு நாள் காலையிலும் இரு மலக்குகள் வந்து இறைவா! தர்மம் செய்பவனுக்கு நீர் மென் மேலும் கொடுப்பாயாக. இறைவா! தர்மம் செய்யாது எவன் தடுத்துக் கொள்கிறானோ அவனுக்கு அழிவை கொடுப்பாயாக’’ என பிரார்த்திப்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த ஹதீஸை வீட்டாருடன் கலந்துரையாடி ஒவ்வொரு நாள் காலையிலும் தர்மம் செய்வதற்காக ஓர் உண்டியலை ஏற்பாடு செய்து தர்மத்தைச் சேகரித்து பின்னர் இல்லாத ஒருவருக்கு கையளிக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.7 : துஆ கேட்பதன் முக்கியத்துவத்தை அறிந்து அதனைப் பேணிக் கடைப்பிடிப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- துஆ என்பதை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- துஆ கேட்பதன் சிறப்புக்களை முன்வைப்பார்.
- துஆக் கேட்கும் முறையினை சொல்லியும் செய்தும் காட்டுவார்.
- துஆக் கேட்பதன் பயனை அறிந்து குறிப்பான மற்றும் பொதுவான துஆக்களை மனனமிட்டு தமது பிரார்த்தனையில் இணைத்துக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- மூன்று நபர்கள் ஒரு குகையில் இரவில் தங்கினார்கள். பெரும் பாறை ஒன்று சரிந்து உருண்டு வந்து குகைவாயலை அடைத்துக் கொண்டது. செய்வதறியாது திகைத்த அம்மூவரும் தாம் செய்த நற்செயல்களை முன்வைத்து இறைவனிடம் பிரார்த்தித்தபோது படிப்படியாக பாறை அகன்று அவர்கள் துன்பத்திலிருந்து விடுபட்டனர். ஹதீஸில் வந்துள்ள இந்த சம்பவத்தை கதையாக மாணவர்களிடம் முன்வைத்து, பிரார்த்தனையின் பயன்கள், வலிமை குறித்து சிந்தனைக் கிளர்வொன்றை மேற்கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் விதமாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - ''துஆ'' என்ற பதம் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதைக் குறிக்கின்றது.
  - துஆவின் சிறப்புக்களை அல் குர்ஆனும் ஸுன்னாவும் தெளிவுபடுத்துகின்றன.
  - அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதற்கு சில ஒழுங்குவிதிகள் காணப்படுகின்றன.
  - நபி (ஸல்) அவர்கள் பல்வேறு துஆக்களை கற்றுத் தந்துள்ளார்கள்.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - துஆ - பிரார்த்தனை வணக்க வழிபாட்டின் சாரமாகும். வழிபாட்டுக்குரியவன் ஏக இறைவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே அவனிடமே பிரார்த்தனை புரிய வேண்டும். (பார்க்க : அல் குர்ஆன் அர் ரஅத் :14)
    - பிரார்த்தனை மு.்.மினின் ஆயுதமாகும். (ஹாகிம்)
    - அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான செயல் அவனிடம் பிரார்த்திப்பதாகும். (அஹ்மத்)
    - இறைவனிடம் மதிப்பையும் கண்ணியத்தையும் அளிக்கக் கூடியவை அடியானின் பிரார்த்தனையை விட வேறு எதுவும் இல்லை (திர்மதி)
    - பிரார்த்திப்பதில் இயலாதவனாக இருப்பவனே, அனைத்தையும் விட பெரும் இயலாதவன் ஆவான் (தபரானி)
    - யார் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கவில்லையோ அவன் மீது அல்லாஹ் கோபப்படுகின்றான் (இப்னு மாஜா)
    - பிரார்த்திப்பதற்கு சில ஒழுங்குகள் காணப்படுகின்றன.
        - பல் துலக்கி, வுழு செய்து, கிப்லாவை நோக்கி இரு கைகளையும் உயர்த்தி அமைதியோடும் பணிவோடும் பிரார்த்தித்தல்.
        - பிரார்த்திக்கு முன் அல்லாஹ்வைப் புகழ்தல், முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் சொல்லல்.
        - விருப்புடனும், பூரண நம்பிக்கையுடனும் மன்றாட்டத்துடனும், இஹ்ஸானுடனும், அல்லாஹ் ஒருவனிடம் மாத்திரம் மன்றாடி பிரார்த்தித்தல்.
        - பணிவுடனும், நடுங்கிய உள்ளத்துடனும், தாழ்ந்த குரலில் நா தழுதழுக்கப் பிரார்த்தித்தல்.
        - ஸாலிஹான நல்லமல்களை முன்னிறுத்தி கேட்டலும், பிரார்த்திக்கு முன் நல்லமல் ஒன்றை செய்துவிட்டுக் பிரார்த்தித்தல்.
        - பிரார்த்தனையை தொடர்ந்து கடைப்பிடித்தல்.
        - மற்றவர்களது தேவைகளுக்காகவும் பிரார்த்தித்தல்.
    - துஆ கேட்பதனால் பல நன்மைகள் கிடைக்கின்றன.
        - இறையன்பு கிட்டும்.
        - உள்ளம் ஆறுதல் அடையும்.
        - தேவை நிறைவேறும்.
        - அல்லாஹ்வுடனான நெருக்கம் அதிகரிக்கும்.
        - வரவிருக்கும் ஆபத்து நீங்கும்.
        - மறுமையில் சேமிப்பாக, கட்டுச் சாதனமாக அமையும்.

- குறிப்பான சில துஆக்கள்

  - அல் குர்ஆனில் இடம் பெற்றுள்ள துஆக்கள் சில

رَبَّنَآ ءَاتِنَا فِي ٱلدُّنۡيَا حَسَنَةٗ وَفِي ٱلۡأٓخِرَةِ حَسَنَةٗ وَقِنَا عَذَابَ ٱلنَّارِ ٢٠١

(2:201)

رَبَّنَآ أَفۡرِغۡ عَلَيۡنَا صَبۡرٗا وَثَبِّتۡ أَقۡدَامَنَا وَٱنصُرۡنَا عَلَى ٱلۡقَوۡمِ
ٱلۡكَٰفِرِينَ ٢٥٠

(2:250)

رَبَّنَا ٱغۡفِرۡ لِي وَلِوَٰلِدَيَّ وَلِلۡمُؤۡمِنِينَ يَوۡمَ يَقُومُ ٱلۡحِسَابُ ٤١

(14:41)

رَبَّنَا ٱغۡفِرۡ لَنَا وَلِإِخۡوَٰنِنَا ٱلَّذِينَ سَبَقُونَا بِٱلۡإِيمَٰنِ وَلَا تَجۡعَلۡ فِي قُلُوبِنَا غِلّٗا
لِّلَّذِينَ ءَامَنُواْ رَبَّنَآ إِنَّكَ رَءُوفٞ رَّحِيمٌ ١٠

(59:10)

- ஹதீஸில் இடம் பெற்றுள்ள துஆக்கள் சில

ÇáááåãøóÅäøöìÃÓúÃáõßóÇáååõÏöìæóÇáÊõÞóìæóÇáÚóÝóÇÝóæÇáÛöäì

ÇáááåãøóÃÍúÓöäúÚóÇÞöÈóÊóäÇÝöìÇáÃãõæÑßõáøöåÇæóÃÌöÑäóÇãöäúÎöÒúí
ÇáÏõäúíóÇæóÚóÐóÇÈöÇáÂÎöÑóÉ

ÇáááåãøóÅäøöìÃÚõæÐõÈößóãöäúÞóáÈòáÇíóÎÔóÚæóäóÝÓòáÇÊÔÈÚæ
æóÚöáãòáÇíóäÝÚæóÏÚæÉòáÇíõÓÊÌÇÈõáåóÇ

ÇáááåãøóÅäøöìÃÓÃáßÇáÚóÝæóæÇáÚÇÝöíÉÝìÇáÏøõäúíóÇæÇáÂÎöÑÉ

ÇáááåãøóÅäøöìÃÓÃáßóÑÖÇßóæÇáÌäøÉæóÃÚõæÐõÈößóãöäÓóÎóØößó
æÇáäøÇÑ

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

### கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

### குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:

**குழு-1** துஆ, பிரார்த்தனையின் சிறப்பு பற்றி றியாலுஸ் ஸாலிஹீன் நூலின் உதவியுடன் ஹதீஸ்கள் நான்கினைத் திரட்டி எழுதுங்கள்.

**குழு-2** முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓதி வந்த சில பிரார்த்தனைகளைத் தொகுத்து எழுதுங்கள்.

**குழு-3** அல் குர்ஆனில் இடம்பெற்றுள்ள சில பிரார்த்தனைகளைத் தொகுத்து எழுதுங்கள்.

**குழு-4** எமது பிரார்த்தனைகள் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின் நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

இங்கு தரப்பட்டுள்ள துஆக்களை வீட்டில் உள்ளோருடன் சேர்ந்து மனனம் செய்து ஒருவரை ஒருவர் சரிபார்த்துக் கொள்வதொடு தொடர்ந்து ஓதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 : மார்க்க அறிஞர்களை கண்ணியப்படுத்துவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- மார்க்க அறிஞர்களை அடையாளப்படுத்திக் கூறுவார்.
- மார்க்க அறிஞர்களின் சிறப்புக்களை எடுத்துக் காட்டுவார்.
- மார்க்க அறிஞர்களை கண்ணியப்படுத்தி வருவார்.
- மார்க்க அறிஞர்களின் சமூக முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :

- கலீபா ஹாரூன் ரஷீத் தனது மகன்களான அமீன், மஃமூன் ஆகிய இருவரையும் ஓர் ஆசிரியரிடம் கற்பதற்காக அனுப்பி வைத்திருந்தார். ஒரு நாள் ஆசிரியர் கலீபாவை சந்திக்க மாளிகைக்கு வந்தார். இதனைக் கண்ட இரு இளவரசர்களும் ஓடிச் சென்று அந்த அறிஞரின் ஒவ்வொரு செருப்பை சுமந்து கொண்டு அவரின் பின்னால் சென்றனர்.
  இவ்வேளை கலீபா ஹாரூன் ரஷீத் முன்னால் வந்து கொண்டிருந்தார். இரு மகன்களையும் தமது செருப்பை சுமக்க வைத்ததற்காக கலீபா தனக்கு ஏசுவாரோ என அந்த அறிஞர் தனக்குள் அஞ்சிக் கொண்டார். ஆனால் நடந்ததோ வேறு. கலீபா இதனைக் கண்டு சினம் கொள்ளவில்லை. மாறாக முகம் மலர்ந்தார்கள். ''இன்றுதான் எனது வாழ்நாளில் மிக மகிழ்ச்சியான காட்சியைக் காண்கிறேன்'' என ஆசானின் செருப்பை சுமந்த இளவரசர்கள் இருவரையும் தட்டிக் கொடுத்தார்கள்.

  இந்தச் சம்பவத்தை கதைபோலக் கூறி அறிஞர்களுக்குக் கௌரவமும், மரியாதையும் வழங்குவதன் முக்கியத்துவம் பற்றிய மாணவர்களது கருத்துக்களை வெளிக்கொண்டுவர உதவுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இஸ்லாம், அதனை சுமந்திருக்கும் அறிஞர்களுக்கும் கண்ணியம் வழங்குகின்றது.
  - சன்மார்க்க அறிஞர்கள் இஸ்லாமிய சமூகத்திலும் எப்பொழுதும் கண்ணியப்படுத்தப்பட்டே வந்துள்ளனர்.
  - சமூகத்தைச் சுவனத்தின் பால் அழைத்துச் செல்வதில் அறிஞர்களுக்கு பெரும் பங்குண்டு.
  - அறிஞர்கள் நபிமார்களின் வாரிசுகளாவர்.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும், போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இவ்வுலக வாழ்வுக்கும், மறுமை வாழ்வுக்கும் பயனளிக்கும் கல்வியை கற்றவர்கள் அறிஞர்களாவர்.
  - உங்களிலுள்ள விசுவாசிகளுக்கும் கல்வி ஞானமுடையோருக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான் - (58:11)
  - அல்லாஹ்வுடைய அடியார்களில் அவனுக்கு அஞ்சுபவர்கள் அறிஞர்கள் தாம் (35: 28)
  - நபியே நீர் கூறுவீராக ! கற்றவர்களும், கற்காதவர்களும் சமமாவார்களா (39:9)
  - கடலிலும், தரையிலும் உள்ள இறைபடைப்புக்கள் அனைத்தும் அறிஞர்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றன ( திர்மிதி)
  - அறிஞர்களின் உரிமையை அறிந்திராதவன் என் உம்மத்தை சார்ந்தவன் அல்லன் (அஹ்மத்)
  - எனக்குப் பின் வரிசையில் உங்களிலுள்ள சான்றோர்களும், அறிஞர்களும் நிற்கட்டும் (முஸ்லிம்)
  - தனக்கு அறிவு கற்பித்தவனுக்கு நான் அடிமையாவேன் (அலி ரழி)
  - இமாம்களிடம் ஹதீஸ்களை பயிலச் சென்ற மாணவர்கள் மிகவும் பணிவாகவும், குரலைக் கூட உயர்த்தாமலும் எதிலும் அவர்களை முந்திக் கொள்ளாமலும் நடந்து கொண்டனர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** மார்க்க அறிஞர்களை எவ்வாறு கௌரவிப்பீர்கள் என்று கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-2** மார்க்க அறிஞர்களின் சிறப்பு, கண்ணியம் பற்றிப் பேசும் அல்குர்ஆன் வசனங்களை சேகரித்து எழுதுங்கள்.

**குழு-3** மார்க்க அறிஞர்களின் சிறப்பு, கண்ணியம் பற்றி கூறும் நபிமொழிகளை தொகுத்து எழுதுங்கள்.

**குழு-4** மார்க்க அறிஞர்களின் சமூக அந்தஸ்த்து, முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

முன்னைய காலங்களில் அறிஞர்கள் மதிக்கப்பட்ட விதங்கள் பற்றிப் பெற்றோருடன் கலந்துரையாடி அவற்றை நடைமுறையில் கொண்டு வர வழிப்படுத்துங்கள்.

.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 : துர்க்குணங்களை தவிர்ந்து நடப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- துர்க்குணம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துவார்.
- துர்க்குணங்களை பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- துர்க்குணங்களிலிருந்து விடுபட்டு வாழ்வார்.
- துர்க்குணங்களால் தனிநபர் வாழ்விலும், பொது வாழ்விலும் ஏற்படும் பாதிப்புக்களை எழுதிக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- ஸூரதுல் ஹுஜ்ராத்தின் 11வது வசனத்தை மொழிபெயர்ப்புடன் காட்சிப்படுத்தி அது தொடர்பாக மாணவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - இஸ்லாம் நற்குணங்களை வலியுறுத்துவதோடு துர்க்குணங்களை தவிர்க்குமாறும் போதிக்கின்றது.
    - துர்க்குணம் மனதனின் இயல்புமல்ல, எவரும் அதனை விரும்புவதும் இல்லை.
    - அல்குர்ஆனும், ஸுன்னாவும் துர்க்குணங்களை தவிர்ந்து கொள்ளுமாறு போதித்துள்ளது.
    - துர்க்குணம் தனிநபர் வாழ்விலும், சமூகவாழ்விலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 : • ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிகமான விடயங்களையும், போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - அல்லாஹ்வும், அவன் தூதரும் தடுத்த, மக்களால் வெறுக்கப்படுகின்ற, அடுத்தவர்களுக்கு நோவினை அளிக்கின்ற குணவியல்புகள் துர்க்குணங்கள் எனப்படும்.
  - நான் நற்குணங்களைப் பூரணப்படுத்தவே தூதராக அனுப்பப்பட்டேன் (மாலிக்)
  - பொய், கோள், கோபம், புறம், பட்டப்பெயர் சூட்டல், கேலி செய்தல், சந்தேகம், முன்கோபம், பொறாமை, தற்பெருமை, தூசனம் பேசுதல், வதந்தி வார்த்தைகளைப் பரப்பல், வாக்குறுதி மீறல், குறைகளைக் கூறல், சண்டை பிடித்தல், வாக்குவாதம் போன்றன துர்க்குணங்களுக்கான சில உதாரணங்களாகும்.
  - ஈமான் கொண்டவர்களே! அதிகமான எண்ணங்களை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள். சில எண்ணங்கள் பாவமாகும் (49:11)
  - உண்மையே பேசுங்கள்! அதில்தான் உங்கள் அழிவே இருப்பதாகத் தெரிந்தாலும் சரியே! ஏனெனில் அதில் தான் இறுதியில் உங்கள் ஈடேற்றம் இருக்கின்றது. (இப்னு அபித் துன்யா)
  - கோள் கூறுபவன் சுவனம் நுழைய மாட்டான் (புகாரி, முஸ்லிம்)
  - கோபம் ஷைத்தானியப் பாதிப்பின் விளைவாகும். (அபூதாவூத்)
  - "எவனது உள்ளத்தில் அணுவளவு தற்பெருமை இருக்குமோ அவன் சுவனத்தில் நுழைய மாட்டான்" (முஸ்லிம்)
  - உன் சகோதரனின் துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தாதே: அல்லாஹ் அவன் மீது கருணை புரிந்து உன்னைத் துன்பத்தில் ஆழ்த்திவிடலாம் (திர்மிதி)
  - கட்டுக்கதைகளை கட்டிவிடுபவர் எவரும் சுவனம் நுழையமாட்டார். (புஹாரி)
  - "தன் நாவால் கெட்ட விஷயங்களை பேசுபவனையும் கெட்ட வார்தைகள் கூறுபவனையும் அல்லாஹ் மிகவும் வெறுக்கின்றான்" (திர்மிதி)

    அல்லாஹ்வால் மிகவும் வெறுக்கப்படக்கூடியவர்கள் சர்ச்சைகள் நிறைந்த வாதங்கள் புரிபவர்களே (புஹாரி)
  - உன்னுடைய சகோதரரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடாதே அவரைக் கேலி செய்யாதே! வாக்குறுதி செய்து விட்டு அதனை மீறாதே (திர்மிதி)
  - நெருப்பு விறகை சாம்பலாக்கி விடுவதைப் போல் பொறாமை நற்செயல்களை சாம்பலாக்கி விடுகின்றது (அபூ தாவூத்)
  - ஓர் முஸ்லிமுக்கு ஏசுவது தீய செயலாகும். அவனை கொலை செய்வது இறைநிராகரிப்பாகும். (முஸ்லிம்)

- துர்க்குணம் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்
    - மன நிம்மதியை இழக்கச் செய்யும்
    - உள்ளம் இருளடையும்
- நன்மைகளில் வெறுப்பு ஏற்படும்
- பாவங்களில் விருப்பு உண்டாகும்.
- பிளவுகளும், பிரிவினைகளும் ஏற்படும்
- இறை தண்டனை கிடைக்கும்.
- மனித உறவுகள் சீர்கெடும்
- சமூகத் தொடர்பு நீங்கும்.
- நல்லவர்களின் தொடர்பு அற்றுப் போகும்.
- வீணான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.
- சமூக விரோதிகளின் ஒருவனென அடையாளப்படுத்தும் நிலை உருவாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** பாடசாலைச் சூழலில் நீங்கள் தவிர்ந்து கொள்ள வேண்டிய துர்க்குணங்களை இனங்கண்டு அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான வழிமுறைகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-2** துர்க்குணங்கள் தனிநபர் வாழ்விலும், சமூக வாழ்விலும் ஏற்படுத்தும் பாதிப்புக்களை எழுதுங்கள்.

**குழு-3** துர்க்குணங்களை தவிர்ப்பதனை வலியுறுத்தி அல்குர்ஆன், அல் ஹதீஸ் வசனங்கள் ஐந்தைத் தேடி எழுதுங்கள்.

**குழு-4** துர்க்குணங்களை தவிர்ப்பதனை வலியுறுத்தி துண்டுப்பிரசுரம் ஒன்றினை தயாரியுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

வீட்டில் இடம்பெறும் துர்க்குணங்களை பெற்றோருடன் சேர்ந்து இனங்கண்டு பட்டியல்படுத்தவும். அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை கண்டறிந்து செயற்படுத்தவும் வழிப்படுத்துங்கள்.

.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.3 : சிறுவர்களுடன் அன்புடன் நடந்து கொள்வார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- சிறுவர்களின் இயல்புகளைப் பட்டியற்படுத்துவார்.
- சிறுவர்களுடன் இரக்கமாக நடந்து கொள்ளும் முறையினைச் சொல்லிக் காட்டுவார்.
- நபி (ஸல்) அவர்கள் சிறுவர்களுடன் நடந்துகொண்ட முறையினை எடுத்துக் காட்டுவார்.
- சிறுவர்களுக்கு இரக்கம் காட்டுவதற்கான காரணங்களை விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- ''நபி (ஸல்) அவர்கள் அப்பாஸ் (ரழி) அவர்களின் பிள்ளைகளான அப்துல்லாஹ், உபைதுல்லாஹ், குஸய்யி (ரழி) ஆகிய மூவரையும் அணிவகுக்கச் செய்து ''எவர் என்னிடம் முந்தி வருகின்றாரோ அவருக்கு இன்னின்ன கிடைக்கும்'' என்று கூறுவார்கள். சிறுவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் ஓடி வந்து அவர்களது முதுகிலும், நெஞ்சிலும் விழுவார்கள். அப்பொழுது நபி(ஸல்) அவர்கள் அச்சிறுவர்களை முத்தமிடுவார்கள். (முஸ்னத் அஹ்மத்) இந்நிகழ்வை கதையாக மாணவர்களிடம் எடுத்துக் கூறி சிறுவர்களின் எதிர்பார்ப்புகள், தேவைகள், பலம், பலவீனங்கள் என்பன பற்றி சிந்தனை கிளர்வொன்றினை மேற்கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - சிறுவர்கள் என்போர் பல்வேறு எதிர்பார்ப்புகளும், தேவைகளும் உடையவர்களாவர்.
  - அவர்களிடம் பல்வேறு பலங்கள் இருப்பது போன்றே பலவீனங்களும் காணப்படுகின்றன.
  - சிறுவர்களது உரிமைகளையும், உணர்வுகளையும் புரிந்து நடந்துகொள்வது அவசியமாகும்.
  - நபியவர்கள் சிறுவர்களுடன் நடந்து கொண்ட அழகிய முறைமைகள் எல்லாக் காலத்துக்குமேற்ற சிறந்த முன்மாதிரிகளாகும்.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.

- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்.

  - சிறுவர்கள் உடலாலும், உள்ளத்தாலும், சிந்தனையாலும் பெரியவர்களைவிட பலம் குறைந்தோர் ஆவர்.
  - சிறியவர்கள் தாமும் சாதிக்க வேண்டும் எனும் ஊக்கமும், ஆசையும் உடையவர்களாவர்.
  - சிறியவர்கள் அன்பு, காப்பு, கணிப்பு எனும் உளவியல் தேவைகளை கூடிய அளவில் வேண்டிநிற்பவர்களாவர்.
  - பிடிவாதம், அழுதுசாதித்தல், தடுப்பவற்றை விரும்பிச் செய்தல், பிறர் பொருளில் அதீத விருப்பம், முன்கோபம் போன்றன பெரும்பாலான சிறுவர்களின் சுபாவங்களாகும்.
  - சிறுவர்களுக்கு இரக்கம் காட்டுவதனை இஸ்லாம் ஈமானின் வெளிப்பாடாக அடையாளப்படுத்துகிறது.

    ''சிறியவர்கள் மீது அன்பு காட்டாதவர் எம்மை சார்ந்தவரல்லர்'' (புஹாரி)
  - தாம் எவ்வளவு பெரிய அந்தஸ்துடனும், மதிப்புடனும் இருந்த போதிலும் அது சிறியவர்கள் மீது அன்பு காட்டுதவற்குத் தடையாக அமையக் கூடாது.

    ''நபியவர்கள் சிறுவர்களைக் கண்டால் தமது அன்பை வெளிப்படுத்தி அவர்களுக்கு ஸலாம் கூறுவார்கள்'' (புஹாரி)
  - தனது பிள்ளைகளைப் போல் எல்லாச் சிறுவர்களுடனும் அன்புடன் கருணை உள்ளத்துடனும் நடந்து கொள்வதோடு, அவர்களுக்கு நல்லவற்றை சொல்லிக் கொடுக்க வேண்டும்.
  - ''சிறுவர் அப்துர் ரஹ்மான் பின் ஸஹ்ல் (ரழி) நபியவர்களின் சபையில் பெரியவர்களின் முன்னிலையில் பேச ஆரம்பித்த போது ''பெரியவர்களுக்கு மரியாதை கொடுப்பாயாக!'' என நபியவர்கள் அன்பாய் சொல்லிக் கொடுத்தார்கள்.
  - சிறுவர்களின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து கொள்ள வேண்டும்.

    ''நபியவர்கள் ஹஸன்(ரழி), ஹுஸைன் (ரழி) இருவரதும் கரங்களைப் பிடித்து அவர்களது பாதங்களைத் தன் பாதத்தில் வைத்து ''நீ மேலே ஏறு'' எனக் கூறுவார்கள்.

    ''நபியவர்கள் நீண்ட நேரம் ஸுஜூதில் இருந்தமை பற்றி நபித்தோழர்கள் கேட்ட போது எனது மகன் என்மீது சவாரி செய்து கொண்டிருந்தார்'' என்றார்கள்.
  - சிறுவர்களுடன் வேறுபாடுகள் இன்றி அன்புடனும், நேசத்துடனும் நடந்து கொள்ளல் வேண்டும்.

''நபியவர்கள் யூதச்சிறுவனொருவன் நோயுற்ற போது நலன் விசாரிக்க சென்று தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டு ''இஸ்லாத்தை ஏற்றுக்கொள்'' என்றார்கள். சிறுவனோ தந்தையின் முகத்தை பார்க்க அவர் ''நீ அபுல் காஸிமுக்கு கட்டுப்படு'' எனக் கூற சிறுவன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். ''இச்சிறுவனை நரக நெருப்பிலிருந்து காத்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்'' என நபியவர்கள் கூறினார்கள்.

- சிறுவர்கள் தீய நடத்தைகள், மோசமான பேச்சுக்கள், தீய சிந்தனைகள், வன் செயல்கள் என்பவற்றுக்கு உட்படாது காக்க துணைநிற்க வேண்டும்.
- சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க முடியுமான பங்களிப்புகளை வழங்க வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** சிறுவர் தினமொன்றில் முன்வைப்பதற்காக ''சிறுவர் மீது அன்பு காட்டுவோம்'' என்ற தலைப்பில் 3 நிமிடங்களுக்கு ஓர் உரையைத் தயாரியுங்கள்.

**குழு-2** உம்மை விட வயதில் குறைந்தவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளக்கூடிய வழிமுறைகள் ஐந்தை எழுதுங்கள்.

**குழு-3** நபி (ஸல்) அவர்கள் சிறுவர்களுடன் அன்பாக நடந்து கொண்ட இரண்டு நிகழ்வுகளைத் தொகுத்தெழுதுங்கள்.

**குழு-4** சிறுவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளாத ஒருவருக்கு அறிவுரை வழங்கி ஒரு கடிதம் எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

சிறுவர்களுக்கு அன்பு காட்டுவதன் அவசியத்தை எடுத்துக்காட்டக் கூடிய முன்மாதிரி மிக்க இரு சம்பவங்களைப் பெற்றோருடன் கலந்துரைடயாடி எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.4 : அனாதைகள், விதவைகள் முதலானோருக்கு உதவுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- சமூகத்தில் காணப்படும் நலிவுற்றோரை இனம்காட்டுவார்.
- அனாதைகள், விதவைகள் எனப்படுவோரை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அனாதை, விதவைகளின் பலவீனங்களை அறிந்து தேவைகளை நிறைவேற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- ''நானும் அனாதையை ஆதரித்துப் பொறுப்பேற்று வளர்த்தவரும் சுவர்க்கத்தில் இவ்வாறு இருப்போம் என நபி (ஸல்) அவர்கள் கூறிவிட்டுத் தங்களது ஆட்காட்டி(கலிமா) விரலையும், நடுவிரலையும் சற்று விரித்தவர்களாக சுட்டிக்காட்டினார்கள்''(புஹாரி) என்ற ஹதீஸை தாமாக முன்வரும் மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- வாசிக்கப்பட்ட ஹதீஸின் கருத்தை வினவி மாணவர்களின் கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் விதமாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - அனாதைகள், விதவைகள், ஏழைகள், அங்கவீனர்கள், நிரந்தர நோயாளிகள் போன்றோர் சமூகத்தில் காணப்படும் நலிவுற்றவர்கள் ஆவர்.
  - இத்தகையோருக்கு உதவி செய்வது மார்க்கக் கடமையாகும்.
  - இதன் மூலம் மறுமையில் அல்லாஹ்விடம் உயர்ந்த நற்கூலியை பெற்றுக் கொள்ள முடியும்.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - தந்தையை இழந்தவர் அனாதை ஆவார். இவரை அறபியில் 'யதீம்' என்போம்.
    - மரணத்தின் மூலமோ அல்லது விவாகரத்தின் மூலமோ கணவனை இழந்த பெண்ணை 'விதவை' என அழைப்போம்.
    - அனாதைகளுக்கு உதவுவது என்பது அவர்களுக்கு அன்பு காட்டல், அவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல், பருவ வயதை அடையும் வரை அவர்களது சொத்துக்களை பாதுகாத்துக் கொடுத்தல் போன்றனவாகும்.
    - அனாதைகளுக்கு அடுத்து விதவைகளும் இரக்கம் காட்டப்படவேண்டியவர்களாவர்.
    - நபி (ஸல்) அவர்கள் விதவைகளைத் திருமணம் முடித்து வாழ்வளித்தார்கள்.
    - ''விதவைகளுக்காகவும் ஏழைகளுக்காகவும் பாடுபடுபவர் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிபவர் போன்றவராவார்' (புஹாரி)
    - நோயாளிகள், அங்கவீனர்கள் போன்றோருக்கும் உதவி செய்வது கடமையாகும்.

      ''பசித்தவருக்கு உணவளியுங்கள். நோயாளிகளிடம் நோய் விசாரிக்கச் செல்லுங்கள், கைதிகளுக்கு விடுதலை வாங்கிக் கொடுங்கள்''
    - பலவீனர்களுக்கு உதவி செய்யும் போது அல்லாஹ் எம்மீது அன்பு கொள்கின்றான்; எமக்கு அருள்புரிகின்றான்.

      'எனக்காக பலவீனர்களைத் தேடுங்கள்! ஏனெனில் நீங்கள் உதவி செய்யப்படுவது நீங்கள் இரணம் அளிக்கப்படுவதும் உங்களில் பலவீனமானவர்களின் காரணமாகத்தான்.' (அபூ தாவூத்)

      'ஒர் அடியான் தனது சகோதரனுக்கு உதவி புரியும் காலமெல்லாம் அல்லாஹ் அவ்வடியானுக்கு உதவுகின்றான்' (முஸ்லிம்)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** பின்வரும் அல்குர்ஆன் வசனங்களின் மொழிபெயர்ப்பை வாசித்து நன்கு கலந்துரையாடி அவற்றிலிருந்து எமது வாழ்வில் பின்பற்றத்தக்க படிப்பினைகளை எழுதுங்கள்

ஸூரதுல் லுஹா - 9 ஸூரதுல் மாஊன் - 1-3

**குழு-2** அனாதைகளை அரவணைப்பது தொடர்பாக வந்துள்ள மூன்று ஹதீஸ்களை தேடி எழுதுங்கள்.

**குழு-3** பின்வரும் அல்குர்ஆன் வசனங்களின் மொழி பெயர்ப்பை எழுதி அதன் கருத்தைக் கலந்துரையாடி யாசகம் கேட்டு வருவோருடன் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை எழுதுங்கள்.

ஸூரதுல் லுஹா - 10

**குழு-4** அங்கவீனர்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாம் என்பதைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்து பிறருக்கு உதவி செய்தல் தொடர்பாகக் கலந்துரையாடி நலிவுற்ற எவருக்கேனும் உதவி செய்ய வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.5 : பாவங்களைத் தவிர்ந்து நடப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- பாவம் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பாவங்களை உள்ளடக்கிய பட்டியல் ஒன்றைத் தயாரிப்பார்.
- பாவங்கள் பற்றிய இஸ்லாத்தின் கருத்தை முன்வைப்பார்.
- பாவச்செயல்களால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- ஸுரதுல் ஹுஜ்ராத்தின் 11,12 ஆகிய வசனங்களை ஒருமாணவனைக் கொண்டு ஓதச்செய்து இன்னொரு மாணவனைக் கொண்டு அதன் மொழிபெயர்ப்பை வாசிக்கச் செய்யுங்கள்.
- பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இஸ்லாம் பாவங்களைவிட்டு விலகி இருக்குமாறு கட்டளையிடுகின்றது.
  - பாவங்கள் மனிதனின் ஆன்மீக, லௌகீக வாழ்வைப் பாதிக்கின்றது.
  - பாவங்கள் பற்றியும் அவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும் அல்-குர்ஆனும் ஸுன்னாவும் குறிப்பிடுகின்றன.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்திக் வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும், போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - அல்லாஹ்வும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் செய்யவேண்டாம் எனத் தடுத்தவைகள் அனைத்தும் பாவங்களாகும்.
  - பெரும்பாவங்கள் என நபி (ஸல்) அவர்கள் ஏழு பாவங்களை அடையாளப்படுத்தியுள்ளார்கள். அவை

    1. அல்லாஹ்வுக்கு இணைவைத்தல்.
    2. சூனியம் செய்தல்.
    3. கொலை செய்தல்.
    4. வட்டியை உண்ணுதல்.
    5. அனாதைகளின் சொத்துக்களைச் சாப்பிடுதல்.
    6. ஜிஹாத்தின் போது புறமுதுகு காட்டி ஓடுதல்.
    7. கற்புள்ளபெண் மீது அவதூறு கூறுதல்

    (புஹாரி, முஸ்லிம்)

  - இவை தவிர இன்னும் சில பாவங்கள் பற்றி அல்-குர்ஆனும் ஸுன்னாவும் குறிப்பிட்டுள்ளன. அவை :

    பெற்றோரைத் துன்புறுத்தல், பட்டப் பெயர் சூட்டுதல், கேலிசெய்தல், பெருமையடித்தல்,புறம் பேசுதல்,கோள் மூட்டுதல், பொய் சொல்லுதல், தற்கொலை செய்தல் போன்றன.

  - பாவங்கள் காரணமாக உள்ளம் இருளடைகின்றது.
  - பாவங்கள் காரணமாகத் தனிமனிதன் பாதிக்கப்படுவது போலவே சமூகமும் பாதிக்கப்படுகின்றது.
  - இறையச்சம், நல்ல சூழல், நல்லநட்பு என்பன மனிதனை பாவத்திலிருந்து பாதுகாக்கின்றன.

    (உ+ம்) நூறு மனிதர்களைக் கொலை செய்த மனிதனின் சம்பவம்.

  - பாவங்கள் பற்றியும் அவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும் அல்-குர்ஆனும் ஸுன்னாவும் குறிப்பிடுகின்றன.

    “உங்களுக்கு விலக்கப்பட்ட பெரும் பாவமான காரியங்களில் இருந்து நீங்கள் விலகிக்கொண்டால் உங்களுடைய (மற்ற) சிறிய பாவங்களுக்கு (அதனை) நாம் பரிகாரமாக்கி உங்களை (மிக்க) கண்ணியமான இடங்களிலும் நுழைவிப்போம்.” (4:31)

*“நல்லொழுக்கமே நன்மையெனப்படும். பாவம் என்பது அதைச்செய்யும் போது உன் உள்மனம் உன்னை எச்சரிப்பதும்,*

*அதைப்பிறரிடம் வெளியிடும் போது நீ வெறுப்பதுமாகும் "*
*(முஸ்லிம்)*

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** பாவங்கள் காரணமாக ஏற்படும் சமூக பாதிப்புக்களை கலந்துரையாடிப் பட்டியல் படுத்துங்கள்.

**குழு-2** பாவங்கள் தனிமனித வாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்புக்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-3** பாவங்களை விட்டும் தவிர்ந்து நடப்பதற்கான நடவடிக்கைகளைக் குறிப்பிடுங்கள்.

**குழு-4** தர்ஜமாவின் உதவியுடன் சூரதுல் ஹுஜ்ராத்தின் 11,12 ஆகிய வசனங்கள் குறிப்பிடும் பாவங்களைப் பட்டியல் படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

பாவங்கள் செய்ததன் காரணமாக பல சமூகங்களை அல்லாஹ் அழித்ததாக அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது. அவ்வாறு அழிக்கப்பட்ட சமூகங்களையும் அதற்கான காரணங்களையும் பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.6 : எல்லோருடனும், நம்பிக்கை, நாணயத்துடன் நடந்து கொள்வார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நாணயம் நம்பிக்கை என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- குடும்ப சமூக வாழ்வில் நாணயம், நம்பிக்கை என்பவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்.
- நாணயம் நம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை முன்வைப்பார்.
- நாணயம் நம்பிக்கை குறையும் போது சமூகத்திலேற்படும் பாதிப்புக்களை விளக்கிக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- “நபி (ஸல்) அவர்கள் அல் அமீன் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டு வந்தார். அதற்கான காரணம் என்ன? என மாணவர்களிடம் கேளுங்கள். அவர்கள் முன்வைக்கும் காரணங்களைக் கலந்துரையாடிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - நம்பிக்கை, நாணயம் என்பது நேர்மை, வாய்மை போன்ற கருத்துக்களைக் குறிக்கின்றது.
    - வாழ்வின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நம்பிக்கை நாணயத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.
    - நபி (ஸல்) அவர்கள் சிறுவயது முதலே நாணயத்துடன் நடந்து கொண்டதால் அல் அமீன் எனப் பட்டம் சூட்டி அழைக்கப்பட்டார்கள்.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - நம்பிக்கை, நாணயம் நபிமார்களினதும் சாலிஹீன்களினதும் பண்பாகும். மூஸா(அலை) அவர்களைப் பற்றிக் கூறும் போது அல் குர்ஆன் ''பலமிக்கவர் நம்பிக்கைக்குரியவர்'' (28:26) எனக் கூறுகின்றது.
    - நம்பிக்கை, நாணயம் என்பன மறுமையில் சுவர்க்கத்தில் நபிமார்களுடன் ஒன்றாக இருக்கும் பாக்கியத்தை பெற்றுத் தரும்.

      ''நாணயமும் வாய்மையுமுள்ள வியாபாரி மறுமையில் நபிமார்கள் ஸித்தீக்கீன்கள் (உண்மையாளிகள்) ஷுஹதாக்களுடன் (இறைபாதையில் மரணித்தவர்கள்) இருப்பார்கள்'' (இப்னு மாஜா)
    - வாக்குறுதியினைக் காப்பாற்றுவதும் உடன்படிக்கைகளைப் நிறைவேற்றுவதும் நாணயத்தின் வெளிப்பாடாகும்.

      ''விசுவாசிகளே! நீங்கள் உடன்படிக்கைகளை பூரணமாக நிறைவேற்றுங்கள்'' (5:1)

      ''உங்கள் வாக்குறுதிகளை நீங்களும் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள் ஏனென்றால் (மறுமையில்) வாக்குறுதியைப்பற்றி நிச்சயம் கேட்கப்படும்'' (17:34)
    - நம்பிக்கை நாணயமிக்கவர் அமானிதத்தை பாதுகாப்பார்; கடன்களைத் திருப்பிக் கொடுப்பார்; சத்தியத்தைப் பாதுகாப்பார்.
    - ஒரு மனிதன் இன்னொருவரிடம் ஒரு விடயத்தைச் சொல்லி அதனை இரகசியமாக வைக்க வேண்டும் என வேண்டினால் அது அவரிடம் ஒப்படைக்கப்பட்ட ஓர் அடைக்கலப் பொருள் (அமானிதம்) ஆகும்.
    - நம்பிக்கைத் துரோகம் செய்வது முனாபிகின் பண்பாகும்.
    - அளவை நிறுவையில் மோசடி செய்வது ஒரு முஸ்லிமின் பண்பல்ல.

      ''எவர் எமக்கு எதிராக வாளை ஏந்துகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்லர். எவர் எமக்கு மோசடி செய்கிறாரோ அவரும் நம்மைச் சார்ந்தவரல்லர். (முஸ்லிம்)
    - பெற்றோர் பிள்ளைகள், பிள்ளை பெற்றோர், கணவன் மனைவி, மனைவி கணவன், ஆசிரியர் மாணவர்கள், மாணவர்கள் ஆசிரியர்கள், தொழிலாளர்கள் எசமானர்கள், எசமானர்கள் தொழிலாளர்கள் (முதலானோர்) ஒருவருக்கொருவர் நம்பிக்கை நாணயத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** நம்பிக்கை நாணயத்தைப் பேணுவதனால் பாடசாலையிலும் சமூக வாழ்விலும் கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-2** நம்பிக்கை நாணயத்தைப் பேணுவதனால் பாடசாலை வாழ்விலும் சமூக வாழ்விலும் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-3** நம்பிக்கை, நாணயம் தொடர்பாக நீங்கள் கேட்டறிந்த ஒரு சம்பவத்தை விளக்கமாக எழுதுங்கள்.

**குழு-4** நம்பிக்கை, நாணயத்தை வலியுறுத்திக் காலைக் கூட்ட நிகழ்வொன்றில் மூன்று நிமிடங்களுக்கு முன்வைக்கக்கூடிய ஒரு சிறிய உரையைத் தயார் செய்யுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

தனது பெற்றோருடன் நம்பிக்கை, நாணயத்துடன் நடந்து கொண்ட நிகழ்வுகளை பெற்றோரிடம் கேட்டறிந்து அதனை வகுப்பறையில் ஏனைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ள வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.7 : பயணங்களை மேற்கொள்ளும் போது இஸ்லாமிய வரையறைகளைப் பேணுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- பயணங்களின் தேவையை எடுத்துக் காட்டுவார்.
- பயணத்தின் போது கடைப்பிடிக்க வேண்டிய இஸ்லாமிய நெறிமுறைகளை ஆதாரங்களுடன் சொல்லிக் காட்டுவார்.
- பாதையிலும், வாகனங்களிலும் பயண ஒழுங்குகள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பதை விளக்கிக் கூறுவார்.
- பயண ஒழுங்குகளைப் பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகளை அறிந்து அவற்றை செயற்படுத்தி வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- ''பிரயாணத்தின் போது ஓதும் பின்வரும் துஆவை ஓதிக் காட்டி அதன் மொழிபெயர்ப்பையும் வாசித்துக் காட்டிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - பயணம் மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்ததொன்றாகும்.
    - பயணத்துக்கான ஒழுங்குமுறைகளை நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்துள்ளார்கள்.
    - பயணத்தின் ஆரம்பத்திலும் நடுவிலும் இறுதியிலும் ஓத வேண்டிய அவ்றாதுகளை நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தந்துள்ளார்கள்.
    - இஸ்லாம் காட்டித் தந்துள்ள பயண ஒழுங்குகளைப் பேணிக் கடைப்பிடிப்பதன் மூலம் பல நன்மைகள் கிடைக்கின்றன.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதே குழுவுக்கும் பின்னர் குறை நிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - நபி (ஸல்) அவர்கள், தனித்து பயணம் செய்வதை விட கூட்டாகப் பயணம் செய்வதையே தூண்டியுள்ளார்கள்.

      ‘‘தனித்துப் பயணம் செய்வது ஷைத்தானுடைய பயணமாகும். மூன்று பேர் சேர்ந்து பயணம் செய்வதே உண்மையான பயணமாகும். (திர்மிதி)
    - பெண்கள் தனித்துப் பயணம் செய்வதைத் தவிர்ப்பதே சிறந்ததென இஸ்லாம் போதிக்கின்றது.
    - அஜ்னபிகளுடன் பயணம் செய்வதை இஸ்லாம் தடுத்துள்ளது.
    - பயணத்தைத் துவங்கும் போதும் முடித்துத் திரும்பும் போதும் இரண்டு ரக்கத்துக்கள் ஸுன்னத் தொழுவது நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்துள்ளார்கள்.
    - கடமையான தொழுகைகளைத் தவறாத விதத்தல் பயணத்தை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும்.
    - பயணத்தை முடிக்கும் போதும் துஆக்களை ஓதிக் கொள்ள வேண்டும். அவ்வாறே ஒருவரை பயணத்திற்கு வழிஅனுப்பும் போதும் துஆ ஓதிக்கொள்ளுமாறு நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்துள்ளார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** பயணம் ஒன்றைத் திட்டமிடுவதற்கான ஒழுங்குமுறைகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-2** பயணத்தின் போது பேண வேண்டிய இஸ்லாமிய ஒழுங்குகளைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-3** பயணமொன்றை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கான வழிமுறைகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-4** பயணத்தின் போதும், பயணத்தின் இடையிலும், அதன் முடிவிலும் ஒருவரை வழியனுப்பும் போதும் ஓதும் அவ்றாதுகளை மொழிபெயர்ப்புக்களுடன் எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

நீங்கள் மேற்கொண்ட பயணம் ஒன்றை எவ்வாறு இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு ஏற்பத் திட்டமிட்டிருக்கலாம் என்பதை பெற்றோருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 : அல் குர்ஆன் ஓதுவதன் சிறப்பை அறிந்து தினமும் திருத்தமாக ஓதி வருவார்.**

**பாடவேளை : 3**

**கற்றல் பேறுகள்:**

- திலாவதுல் குர்ஆன் என்பதற்கு விளக்கம் தருவார்.
- திலாவதுல் குர்ஆனின் ஒழுங்கு முறைகளை அறிந்து ஓதி வருவார்.
- திலாவதுல் குர்ஆனின் ஆன்மீக, உலகியல் நன்மைகளைப் பட்டியற்படுத்துவார்.
- தனக்குத் தெரிந்த அல்குர்ஆனின் பகுதிகளை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- அல் குர்ஆனை அழகாக ஓதக் கூடிய மாணவர்கள் இருவரைக் கொண்டு அல்குர்ஆனின் இரண்டு சிறிய சூராக்களை ஓதச் செய்து பாடத்தில் பிரவேசியுங்கள்.
- அல் குர்ஆன் ஓதுவதன் சிறப்புப் பற்றி மாணவர்களிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - ‘திலாவதுல் குர்ஆன்’ என்பது அல்குர்ஆனை ஓதுதல் எனப் பொருள் படும்.
    - அல்குர்ஆனை ஓதுவதற்கென ஒழுங் விதிமுறைகள் உண்டு அவற்றைப் பின்பற்றி ஓத வேண்டும்.
    - அல்குர்ஆனை ஓதுவது இம்மையிலும், மறுமையிலும் நன்மைகளை ஈட்டித்தரும்.
    - அல்குர்ஆனை கற்பது, கற்பிப்பது இபாதத்தாகும்.

**படி 2** :
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- ''அல் குர்ஆனில் உங்களுக்கு சாத்தியமான அளவு ஓதுங்கள் ...'' (73: 20)
- அல் குர்ஆனை சரியான உச்சரிப்புடன், பொருள் அறிந்து ஓதுவது உள்ளத்திற்கு மகிழ்ச்சியைக் கொண்டு வரக் கூடியது.

  ''மேலும் அல் குர்ஆனை நன்கு திருத்தமாக ஓதுங்கள்!''(73:4)
- ''குர்ஆனை மிகச்சரியாக ஓதுபவருடன் உயர்வான, கீழ்ப்படிதலுள்ள வானவர்கள் இருப்பார்கள், வசனங்களைத் திக்கித் திணறி சிரமத்துடன் ஓதுபவருக்கு இரு மடங்கு நன்மை உள்ளது'' (புஹாரி)
- அல்குர்ஆனை ஓதுவது மிகச் சிறந்த வணக்கங்களில் ஒன்றாகும். அது அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனைக்கும் அறிவுக்கும் தூண்டு கோலாக அமைகின்றது.
- ''அல்குர்ஆனை ஓதுங்கள். அது மறுமை நாளில் ஓதியவர்களுக்கு பரிந்து பேசக்கூடியதாக வரும்'' (முஸ்லிம்).

  ''யார் அல்லாஹ்வின் வேத வசனங்களை செவிமடுக்கின்றாரோ அவருக்கு பல மடங்கு நன்மைகள் உரித்தாகும். யார் அதனை ஓதுகின்றாரோ அது மறுமை நாளில் அவருக்கு ஒளியாக காணப்படும்'' (அஹ்மத்).
- குர்ஆனை கற்று, பிறருக்கு கற்றுக் கொடுத்து உள்ளத்தை உயிரோட்டம் உள்ளதாக மாற்ற வேண்டும்.

  ''உங்களில் சிறந்தவர், குர்ஆனை, தானும் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே'' (புஹாரி)

  "எவருடைய உள்ளத்தில், கொஞ்சம் கூட குர்ஆனில் மனனம் இல்லையோ, அவருடைய உள்ளம் பாழடைந்த வீட்டைப்போன்றதாகும்" (ஆதாரம்: திர்மிதி)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** அல்குர்ஆன் ஓதுவதனால் ஏற்படும் நன்மைகளை உள்ளடக்கிய பட்டியலொன்றைத் தயாரியுங்கள்.

**குழு-2** அல்குர்ஆன் ஓதும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய சட்டங்கள் ஐந்தைக் குறிப்பிட்டு அதன் விளக்கத்தினையும் குறிப்பிடுங்கள்.

**குழு-3** திலாவதுல் குர்ஆன் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள், அல்குர்ஆன் வசனங்களைத் தொகுத்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

அல் குர்ஆனின் சூராக்களை விளங்குவதற்காக தர்ஜமதுல் குர்ஆன் ஒன்றை எடுத்து அதில் இறுதி 10 சூராக்களில் ஒன்றை வீட்டில் சகோதர சகோதரிகளுடன் சேர்ந்து ஓதி அதன் மொழி பெயர்ப்பை வாசிக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 : அல்குர்ஆனின் சிறிய ஸூறாக்களை திருத்தமாக ஓதி பொருளை விளங்கி ஒழுகுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸூரதுல் மாஊனின் பதவிளக்கத்தைக் கூறுவார்.
- மார்க்கத்தை, மறுமை நாளை பொய்யாக்குபவனின் பண்புகளை அறிந்து கூறுவார்.
- மனிதர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது பற்றி அறிந்து மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார்.
- ஸூரா மாஊனின் பொருளை விளங்கி ஓதி வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- ஸூரா மாஊனை அழகாக ஓதும் ஒரு மாணவனைக் கொண்டு அல்லது ஒலி நாடா மூலம் ஓதவைத்துச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- இந்த ஸூரா வலியுறுத்தும் விடயம் குறித்து வினவிக் கருத்துப் பரிமாறுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஸூரா மாஊன், நபி (ஸல்) அவர்களது மக்கா வாழ்வில் அருளப்பட்ட சிறிய ஸூராக்களில் ஒன்றாகும்.
  - இந்த ஸூரா மார்க்கத்தை மறுப்பவனின் அடையாளங்களை எடுத்துக்கூறுகின்றது.
  - இந்த ஸூராவில் தீன் என்ற சொல்லிற்கு மார்க்கம், மறுமை நாள் போன்ற கருத்துக்களை அறிஞர்கள் முன்வைத்துள்ளனர்.
  - அதனை ஓதுவது, மனனமிடுவது, அதன் பொருள் அறிவது, கருத்தைச் செயற்படுத்துவது என்பன நன்மைதரும் செயல்களாகும்.

**படி 2** :
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - மார்க்கத்தை பொய்யாக்குபவன் யார் என வினாத் தொடுத்து அவனின் பண்புகளை வித்தியாசமான ஒரு கோணத்தில் விளக்கியுள்ளது.
    - ஸீராவின் நோக்கில் மறுமை நாளை பொய்ப்பிப்பவனின் அடையாளங்களாக சூராவின் நோக்கில் பின்வருவனவற்றை குறிப்பிட முடியும்.
        - அநாதைகளை விரட்டுதல்
        - ஏழைகளுக்கு உணவளிக்காமை
        - அற்பப் பொருள்களையேனும் அடுத்தவர்களுக்கு இரவல் கொடுக்க மறுத்தல்
        - பிறருக்குக் காண்பிப்பதற்காகத் தொழுதல்
        - தொழுகையில் பொடுபோக்காக இருத்தல்
    - ஸூரா முன்வைக்கும் முக்கிய கருத்துக்கள்.
        - இல்லாதவர்களுக்கு வழங்குதல் அவசியம்.
        - அநாதைகளையும், ஏழைகளையும் ஆதரிக்க வேண்டும்.
        - தொழுகையில் பேணுதலாக இருக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| நீர் பார்த்தீரா? | أَرَءَيْتَ | மார்க்கத்தை பொய்ப்பிக்கிறான் | يُكَذِّبُ بِٱلدِّينِ |
| அநாதைகளை விரட்டுகின்றான் | يَدُعُّ ٱلْيَتِيمَ | தூண்டுவதில்லை | وَلَا يَحُضُّ |
| ஏழைகளுக்கு உணவளித்தல் | طَعَامِ ٱلْمِسْكِينِ | தொழுகையாளிகளுக்கு கேடுதான் | فَوَيْلٌ لِّلْمُصَلِّينَ |
| தொழுகையில் பொடுபோக்காக இருப்பார்கள் | عَن صَلَاتِهِمْ سَاهُونَ | காண்பிக்கவே செய்கின்றனர் | يُرَآءُونَ |
| அற்பப் பொருள்களையும் தடுத்துக் கொள்கின்றனர். | وَيَمْنَعُونَ ٱلْمَاعُونَ | | |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** ஸூரதுல் மாஊனை படித்ததன் பின்னர் உமது உள்ளத்தின் பிரதிபலிப்புக்களை கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-2** நடைமுறை வாழ்வில் பின்பற்றி ஒழுகுவதற்காக நீங்கள் இந்த ஸூராவிலிருந்து பெற்றுக் கொண்ட படிப்பினைகளை எழுதுங்கள்.

**குழு-3** ஸூரதுல் மாஊனை அரபியிலும் அதன் பொருளை தமிழிலும் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

அநாதைகளை ஆதரித்தல் அல்லது ஏழைகளுக்கு உணவளித்தல் தொடர்பாக வந்துள்ள இரண்டு ஹதீஸ்களை பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 : அல் ஹதீஸுல் குத்ஸி, அல் ஹதீஸுன் நபவி என்பவற்றுக்கு உதாரணம் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இருவகை ஹதீஸ்களையும் இனம் பிரித்து விளக்குவார்.
- ஹதீஸ் குத்ஸிக்கு உதாரணம் காட்டுவார்.
- ஹதீஸ் நபவிகள் சிலவற்றை மனனமிட்டு மற்றவர்களுக்கும் கூறுவார்.
- தாம் கற்ற ஹதீஸ்களை பொருள் அறிந்து அவற்றை நடைமுறைப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- அறிமுகமான இரு வகை சிறிய ஹதீஸ்களை கரும்பலகையில் காட்சிப்படுத்தி அதுபற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

  உதாரணம் :-

  Úä ÃÈí åÑíÑÉ ÑÖí Çááå Úäå ÞÇá : ÞÇá ÑÓæá Çááå Õáì Çááå Úáíå æÓáã ÞÇá Çááå ÊÚÇáì : ßá Úãá ÇÈä ÂÏã áå ÇöáÇ ÇáÕóæã ÝÇöäøóå áöí æóÃäÇ ÃÌÒí Èöå

  மனிதனுடைய எல்லா அமலும் அவனுக்குரியது. நோன்பைத் தவிர அது எனக்குரியது. அதற்குரிய கூலியை நானே வழங்குவேன்'' என அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

  Úä ÌÇÈÑ ÑÖí Çááå Ãäøó ÇáäÈì Õáì Çááå Úáíå æÓáã ÞÇá : ÇáÕøöíóÇãõ Ìõäøóɺ ÝóíÓÌäõ ÈåóÇ ÇáÚÈóÏõ ãöäó ÇáäøÇÑ

  நோன்பு ஒரு கேடயமாகும். அதன் மூலம் ஒருவன் தன்னை நரகிலிருந்து காத்துக் கொள்கின்றான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - இருவகை ஹதீஸ்களுக்குமிடையில் வேறுபாடுகள் உண்டு.
  - அல்லாஹ்வுடைய கருத்தை தனது மொழிநடையில் கூறுவது அல் ஹதீஸுல் குத்ஸியாகும்.
  - நபி (ஸல்) அவர்கள் தனது கருத்தை தனது மொழிநடையில் வழங்குவது ஹதீஸுன் நபவியாகும்.

**படி 2** :
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.

- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களில் இரண்டாவது இடத்தை ஸுன்னா வகிக்கிறது.
    - ஸுன்னா நபி (ஸல்) அவர்களின் காலம் முதல் இன்று வரை முறையாகப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.
    - முஸ்லிம்கள் ஹதீஸ் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.
    - ஸுன்னாவினது துணையின்றி அல் குர்ஆனை விளங்குதலோ, அதன் கட்டளைகளைச் செயற்படுத்தலோ சாத்தியமற்றதாகும்.
    - அல் குர்ஆனைப் போன்றே ரஸூல் (ஸல்) அவர்களின் ஸுன்னாவையும் அங்கீகரிப்பதும் அதனைப் பின்பற்றுவதும் முஸ்லிம்களின் கடமையாகும் என்பதை அல்குர்ஆன் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்துகின்றது.

      ''நம்முடைய தூதர் உங்களுக்கு அளித்ததை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை உங்களுக்குத் தடுத்தாரோ அதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்'' (59: 7)

      ''நபியே! நீர் மேலும் கூறும் : அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் நீங்கள் வழிப்படுங்கள். ஆனால் நீங்கள் புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போர்களை நேசிப்பதில்லை'' (3:32)
    - ஹதீஸ்களை ஹதீஸுல் குத்ஸி, ஹதீஸுன் நபவி எனப் பிரித்து நோக்கலாம்.
    - ஹதீஸுல் குத்ஸிக்கும் ஹதீஸுன் நபவிக்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

| **ஹதீஸ் குத்ஸி** | **ஹதீஸ் நபவி** |
|---|---|
| 1. அல்லாஹ் கூறியதாக நபியவர்கள் கூறும் செய்தி உள்ளடக்கப்படும். | 1. அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தாமல் நபியவர்கள் கூறிய செய்தி |

| | |
|---|---|
| 2. உள்ளடக்கம்<br>அல்லாஹ்வுடையது மொழிநடை நபியுடையது. | 2. உள்ளடக்கம்<br>அல்லாஹ்வுடையது கருத்தும் விளக்கமும் மொழிநடையும் நபியுடையது |

**குறிப்பு :** இரண்டுக்கும் உரிய பொதுவான பண்பு இரண்டுமே வஹியை அடிப்படையாகக் கொண்டது.

- பின்வரும் ஹதீஸ்கள் ஹதீஸுல் குத்ஸிக்கு உதாரணங்களாகும்.

Úä ÃÈí åÑíÑÉ ÑÖí Çááå Úäå Úä ÑÓæá Çááå Õáì Çááå Úáíå
æÓáã ÝíãÇ íÑæíå Úóä ÑóÈøöåö ÚÒøó æÌáøó "íóÏõ Çááåö ãáÃì
áÇÊÛÖíåÇ äÝÞÉ ÓÍÇÁ Çááíá æÇáäåÇÑ

அல்லாஹ்வின் கை நிரப்பமானது. இரவு பகலாக தர்மம் செய்தாலும் அதனை மிகைக்க முடியாது.

Úä ÃÈí åÑíÑÉ ÑÖí Çááå Úäå Ãä ÑÓæá Çááå Õáì Çááå Úáíå
æÓáã ÞÇá íÞæá Çááå ÊÚÇáì : ÃäóÇ Úöäú Ùäøö ÚÈÏí Èí æÃäÇ ãÚóåõ ÅÐÇ ÐßÑ äöí
Åáì ÂÎÑ ÇáÍÏíË -ãÊÝÞ Úáíå

"என்னை நினைக்கின்ற அடியானிடத்தில் நான் இருக்கிறேன். அவன் என்னை நினைவுகூரும் போது நானும் அவனுடனே இருக்கிறேன். என அல்லாஹ் கூறுகிறான்"

- பின்வரும் ஹதீஸ்கள் ஹதீஸுன் நபவிக்கு உதாரணங்களாகும்.

Úä ÃÈí åÑíÑÉ ÑÖí Çááå Úäå ÞÇá : ÓãÚÊõ ÑÓæá Çááå Õáì
Çááå Úáíå æÓáã íÞæá æÇááåö Åäøöí áÃÓÊÛÝÑ Çááåó æÃÊæÈõ Åáíåö Ýì Çáíóæãö
æÇáíÉ ÇßËÑ ãöä ÓÈÚöíä ãÑøóÉ - ÑæÇå ÇáÈÎÇÑí

"அல்லாஹ்வின் மீது சத்தியமாக ஒரு நாளில் 70 இற்கு மேற்பட்ட தடவைகள் நான் அல்லாஹ்விடம் இஸ்தி.்.பார் செய்கின்றேன் என்று நபியவர்கள் கூறுவதை நான் கேட்டேன்."

Úä ÃÈí ÇáÏÑÏÇÁ Úä ÇáäÈí Õáì Çááå Úáíå æÓáã ÞÇá : ãóä
ÑÏøó Úóä ÚöÑÖö ÃÎöíå¡ ÑÏøó Çááå Úóä æóÌåöåö ÇáäøóÇÑó íóæãó ÇáÞöíÇãóÉ

"எவர் தனது சகோதரனின் மானத்தைக் காக்கின்றாரோ அவரை அல்லாஹ் மறுமையில் நரகத்தை விட்டும் காக்கின்றான்."

Úä ÅÈä ÚÈÇÓ ÑÖí Çááå Úäå Ãä ÑÓæá Çááå Õáì Çááå Úáíå
æÓáã ÞÇá áÃÔÌ ÚÈÏ ÇáÞíÓ : Åäøó Ýöíß áÎóÕáóÊóíäö ãõÍöÈøõåõãóÇ Çááåõ
ÇáÍöáãõ æÇáÃäóÇÉõ - ÑæÇå ãÓáã

"நபி (ஸல்) அவர்கள் அப்துல் கைஸ் கூட்டத்தின் தலைவர் அஷஜ் என்பவரைப் பார்த்து உங்களிடம் அல்லாஹ் மிகவும் விரும்புகின்ற புத்திசாலித்தனமும் நிதானமும் என்ற இரண்டு அம்சங்கள் உள்ளன என்றார்கள்"

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** ஹதீஸ் குத்ஸிக்கு உதாரணங்கள் இரண்டை ஹதீஸ் நூல்களிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.

**குழு-2** ஹதீஸ் குத்ஸிக்கும் அல் குர்ஆனுக்குமிடைலான வேறுபாடுகள் நான்கினைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-3** ஹதீஸ் நபவிக்கு உதாரணங்கள் சிலவற்றைத் தேடியறிந்து பொருளுடன் எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

ஹதீஸுல் குத்ஸி, ஹதீஸுன் நபவி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை பெற்றோருடன் கலந்துரையாடி, அவ்விரு வகையிலிருந்தும் ஒவ்வோர் ஹதீஸை மனனமிட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.4 : ஹதீஸின் பிரிவுகளையும் ஸிஹாஹுஸ் ஸித்தா பற்றியும் அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஹதீஸ் பரிசீலனையின் போது அவை பல தரங்களாக வகுக்கப்பட்டமையை எடுத்துக் காட்டுவார்.
- ஸஹீஹ், ஹஸன், ளஈப் வகைக்கான விளக்கத்தையும் செயற்படுத்துவதில் அவற்றின் நிலைமையையும் விளக்கிக் கூறுவார்.
- ஸஹீஹான ஹதீஸ்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்
- ஸஹீஹான ஹதீஸ்களின் தொகுப்பு நூல்களை இனம் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- ‘‘அவர் (இறைத்தூதர்) தன் இஷ்டப்படி (எதனையும் பேசுவதில்லை. இது அவருக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி வேறில்லை. (53: 3-4) என்ற அல்குர்ஆன் வசனத்தை ஓதி மொழிபெயர்ப்புச் செய்து வாசித்துக் காட்டிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஹதீஸ்களைப் பாதுகாக்கின்ற பியின் போது அதனோடு இணைந்த பல புதிய கலைகள் தோற்றம் பெற்றன.
  - ஹதீஸ்களைப் பாதுகாக்கின்ற செயன்முறையின் போது ஹதீஸ்கள் தரம்பிரிக்கப்பட்டன.
  - ஹதீஸ்கலை அறிஞர்களின் அயராத உழைப்பின் மூலம் ஹதீஸ் தொகுப்பு நூல்கள் தோன்றின.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:

- ஹதீஸ் கலை தோன்றியதனால் அதன் பாதுகப்புக்கு உத்தரவாதம் கிடைத்தது.
- உஸுலுல் ஹதீஸ் என்ற கலை தோற்றம் பெற்றதோடு அதனோடு இணைந்ததாக முஸ்தலஹுல் ஹதீஸ், இல்முல் ஜரஹ் வத் த∴தீல் முதலான துறைகள் வளர்ச்சி பெற்று தனிப் பெரும் கலைகளாக வளரத்தொடங்கின.
- ஹதீஸ்களை அறிவித்த றாவியின் - அறிவிப்பாளரின்- நம்பகத்தன்மை, அவர் றிவாயத் செய்த ஹதீஸின் நம்பகத் தன்மை, அறிவிப்பாளர் வரிசை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஹதீஸ்கள் வகைப்படுத்தப்பட்டன.
- ஸஹீஹ், ஹஸன், ழஈப் என ஹதீஸ்கள் தர அடிப்படையில் வகுக்கப்பட்டன.
- ஸஹீஹ் என்பது நம்பத்தகு ஹதீஸ்களைக் குறிக்கும். இதனை றிவாயத் செய்த அனைத்து ராவிகளும் நம்பிக்கைக்குரியவர்களாக இருப்பர். அத்தோடு அதன் ராவித் தொடர் முறிவடையாது இறுதிவரை செல்லும்.
- ஹஸன் என்பது ஸஹீஹான ஹதீஸின் நிபந்தனைகளை அடையப் பெற்றிருப்பினும் அதன் இஸ்னாத்தில் இடம்பெற்றுள்ள ஒரு ராவியேனும் மிக நம்பத்தகுந்தவர் (ஸிகதுன்) என்ற படித்தரத்தைப் பெறாமல் (அஸ்ஸதூக்) உண்மையாளர் என்ற தரத்தை உடையவராக இருப்பார்.
- றாவிகளின் நம்பகத் தன்மையில் குறைபாடுடைய ஹதீஸ்கள் ழஈபான ஹதீஸ்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.
- ஹதீஸ் கலைப் பாதுகாப்பின் போது பல்வேறு தொகுப்பு நூல்கள் தோன்றின. அவற்றுள் ஆறு கிரந்தங்கள் பிரதானமானவை. அவை ஸிஹாவுஸ் ஸித்தா என அழைக்கப்படுகின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 ஹதீஸ்களின் வகைகளை பட்டியற்படுத்துங்கள்.

குழு-2 ஹதீஸ்களைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சிலவற்றை குறிப்பிடுங்கள்.

குழு-3 ஹதீஸ்களை வகைப்படுத்தியதனால் கிடைக்கப்பெற்ற அனுகூலங்களை கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-4 பிரதான ஹதீஸ் கிரந்தங்களையும் அவற்றைத் தொகுத்த இமாம்களையும் அட்டவணையொன்றில் தொகுத்தெழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

ஸஹீஹ், ஹஸன், ழஈப் என்பற்றுக்கிடையிலான வேறுபாடுகள் தொடர்பான பெற்றோருடன் கலந்துரையாடிக் கருத்துக்களைத் தொகுப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.5 : மவ்ழூஉ தோன்றியமைக்கான காரணங்களை அறிந்து அவற்றைப் பயன்படுத்துவதை விட்டும் தவிர்ந்து நடப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- மவ்ழூஉ என்பதற்கான கருத்தை விளக்குவார்.
- மவ்ழூஉகளின் தோற்றத்துக்கான காரணங்களை எடுத்துக் காட்டுவார்.
- மவ்ழூஉ ஹதீஸ்களுக்கான உதாரணங்களைச் சொல்லிக் காட்டுவார்.
- அவற்றின் தீமைகளை சுட்டிக்காட்டி அவற்றை உரைப்பதிலும், கேட்பதிலும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- ''யார் மனமுரண்டாக என்மீது பொய்யை இட்டுக் கட்டுகின்றாரோ அவர் தங்குமிடம் நரகமாகும்'' (முஸ்லிம்)

  ''பொய் என்று தெரிந்து கொண்டே என் பெயரால் செய்திகளைப் பரப்புகின்றவன் மிகப் பெரிய பொய்யன் ஆவான்'' (முஸ்லிம்)
- மேலுள்ள இரு ஹதீஸ்களையும் பிரிஸ்டல் அட்டையில் எழுதி அதுபற்றி மாணவர்களின் துலங்கல்களை வினவி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஹதீஸ்கள் என்ற பெயரால் இட்டுக் கட்டப்பட்டவையும் உண்டு.
  - ஹதீஸ் கலை அறிஞர்கள் ஹதீஸ்களை தரம் பிரித்து வகைப்படுத்தியுள்ளனர்.
  - ஹதீஸ் என்ற பெயரால் இட்டுக்கட்டப்பட்டவைகள் மவ்ழூஆத் என அழைக்கப்படுகின்றன.
  - ஹதீஸ்களை இட்டுக் கட்டியோர் பல்வேறு காரணங்களுக்காக பல துறைகளில் புனைந்துரைத்துள்ளனர்.
  - ஹதீஸ்கலை அறிஞர்கள் மவ்ழூஆத்களை இனங்கண்டு அவற்றின் பண்புகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - மவ்ழூஉ என்ற அறபுப் பதத்தின் கருத்து இட்டுக்கட்டப்பட்டது அல்லது புனைந்துரைக்கப்பட்டது என்பதாகும். அதன் பன்மைச் சொல் மவ்ழூஆத் ஆகும்.
    - நபி(ஸல்) அவர்களின் பெயரால் புனைந்துரைத்து பரப்பப்பட்ட செய்திகளையே இது குறிக்கின்றது.
    - வரலாற்றில் மவ்ழூஆத்கள் தோன்றுவதற்கு பல்வேறு காரணிகள் வழிகோலின.

      உ-ம் : அரசியல், வியாபாரம், மத்ஹப்வெறி, எதிரிகளின் சூழ்ச்சி, தவறான இறைபக்தி, சுயநலம்
    - அறிஞர்களால் அடையாளம் காணப்பட்ட மவ்ழூஆத்கள் :-
        1. முஆவியாவை மிம்பரில் கண்டால் கொலை செய்யுங்கள்.
        2. கத்தரிக்காய் எல்லா நோய்களுக்கும் மருந்தாகும்.
        3. எனது உம்மத்தில் இத்ரீஸ் என்று ஒருவர் தோன்றுவார். அவர் இப்லீஸைவிடக் கெட்டவர்.
        4. அல்லாஹ் நாடியவரைத் தவிர எனக்கு பின்னால் வேறு நபி இல்லை
        5. முஹம்மத் என பெயர் சூட்டிக் கொண்டவர் நரகம் செல்ல மாட்டார்.
    - மவ்ழூஆத்களை எடுத்துரைப்பதும் அவற்றைக் கொண்டு அமல் செய்வதும் தடுக்கப்பட்டவையாகும்.
    - நபி (ஸல்) அவர்களின் பெயரால் புனைந்துரைப்பது பெரும் பாவமாகும்.
    - மவ்ழூஆத்களை எடுத்துக் கூறுபவர் பெரும் பாவி என்ற கருத்தை சில அறிஞர்களும் அவர் காபிராவார் என்ற கருத்தை, இன்னும் சில அறிஞர்களும் அவருக்கு சுவனம் தடை செய்யப்பட்டுள்ளது என்று மற்றும் சிலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** ஹதீஸ் என்ற பதத்தையும் மவ்ழூஉ என்ற பதத்தையும் விளக்கி அவை இரண்டுக்குமிடையிலான வேறுபாடுகள் நான்கினைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-2** தாம் பெற்ற முன்னறிவை அடிப்படையாகக் கொண்டு மவ்ழூஉகளின் தோற்றத்துக்கான சில காரணங்களைக் குறிப்பிடுங்கள்.

**குழு-3** இன்று சமூகத்தில் ஹதீஸ் என்ற பெயரால் புனைந்துரைக்கப்பட்டுப் பரப்பப்பட்டுள்ள மவ்ழூஆத்களுக்கு நீர் கேட்டறிந்த இரண்டு உதாரணங்களை எழுதுங்கள்.

**குழு-4** மவ்ழூஆத்களை எடுத்துரைப்பதால் ஏற்படும் தீமைகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

ஹதீஸ் என்ற பெயரால் பரப்பப்பட்டு வருகின்ற போலிகள் சிலவற்றுக்கான உதாரணங்களைப் பெற்றோருடன் கலந்துரையாடிக் குறித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 : நபி முகம்மது (ஸல்) அவர்களின் வாழ்வில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் சிலவற்றை எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகளை பட்டியல் படுத்துவார்.
- அவர்களுக்கு நுபுவ்வத் கிடைத்த நிகழ்வை சொல்லிக் காட்டுவார்.
- மி:்ராஜ் நிகழ்வை விபரித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- அழகாக ஓதக்கூடிய ஒரு மாணவனைக் கொண்டு பின்வரும் ஆயத்துக்களை ஓதி, அதன் மொழி பெயர்ப்பையும் வழங்குங்கள்,

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ ﴿١﴾ خَلَقَ الْإِنسَانَ مِنْ عَلَقٍ ﴿٢﴾ اقْرَأْ وَرَبُّكَ الْأَكْرَمُ ﴿٣﴾

الَّذِي عَلَّمَ بِالْقَلَمِ ﴿٤﴾ عَلَّمَ الْإِنسَانَ مَا لَمْ يَعْلَمْ ﴿٥﴾

(நபியே! அனைத்தையும்) படைத்த உங்களது இறைவனின் திருப்பெயரால் நீங்கள் ஓதுவீராக. அவனே மனிதனைக் கருவிலிருந்து படைத்தான். (நபியே பின்னும்) ஓதுங்கள். உங்களது இறைவன் மாபெரும் கொடையாளி. அவன் தான் எழுதுகோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக் கொடுத்தான். அன்றி(அதன் மூலம்) மனிதன் அறியாதவைகளை எல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுக்கிறான்(96:1-5)

- மேலுள்ள வசனங்களின் கருத்துக்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - நபித்துவம் கிடைக்குமுன் நபி (ஸல்) அவர்கள் ஹிராவில் தங்கிச் செல்லல்.
  - நாற்பதாவது வயதில் முதல் வஹி இறங்குதல்
  - கதீஜா (ரழி) அவர்களிடம் கூறலும் வரகா பின் நவ்பலிடம் சென்று உறுதிப்படுத்தலும்
  - இரகசிய, பகிரங்க பிரசாரங்கள்

**படி 2** :
- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்

- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - நபி(ஸல்) அவர்களின் வாழ்வில் பல முக்கிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.
  - அவற்றுள் சில முக்கியமான திருப்பங்களாக அமைந்தன.
  - நுபுவ்வத் கிடைத்ததும் அதனைப் பகிரங்கப்படுத்திய போது பல சவால்களை எதிர்நோக்கினார்கள்.
  - சவால்களை எதிர்கொள்ளப் பல வழிமுறைகளைக் கையாண்டார்கள். (பொறுமை,ஹிஜ்ரத்)
  - தாமும், சகாக்களும் சடைவின்றி பிரசாரத்தில் ஈடுபட்டார்கள்.
  - இக்காலகட்டத்தில் இடம்பெற்ற மிஃராஜ் நிகழ்வு நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதலாகவும், ஆதாரமாகவும் அமைந்தது.
  - மிஃராஜில் பல அனுபவங்களைப் பெற்றார்கள். எதிரிகளையும் வாயடைக்கச் செய்தார்கள்.
  - மிஃராஜின் போதே ஐவேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** நபி (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத் கிடைத்த பின்னணியை எடுத்துக்காட்டுங்கள்.

**குழு-2** பிரசாரத்தின் போது நபியவர்கள் எதிர்நோக்கிய சவால்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-3** பிரசாரத்தைத் தொடர்வதற்கு நபியவர்கள் கையாண்ட வழிமுறைகளை எடுத்துக்காட்டுங்கள்.

**குழு-4** மிஃராஜ் நிகழ்வைச் சுருக்கமாக எழுதிக்காட்டுங்கள்.

**குழு-5** மிஃராஜின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

மிஃராஜ் நிகழ்வைப் பற்றி மேலதிக தகவல்களைக் கேட்டறிந்து எழுதி வர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2.1 : நபி முஹம்மத்(ஸல்) அவர்களின் த∴வா அணுகுமுறையையும் அதில் அவர் எதிர்கொண்ட சவால்களையும் விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நபி (ஸல்) அவர்களின் த∴வா அணுகுமுறையை விளக்கிக் கூறுவார்.
- த∴வாவில் அவர் எதிர்கொண்ட சவால்களை பட்டியற் படுத்துவார்
- நபி (ஸல்) அவர்கள் சவால்களை வெற்றி கொண்ட வழிமுறையை விளங்கி அவற்றை முன்மாதிரியாகக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- பின்வரும் சம்பவத்தை வாசிக்கச் செய்யுங்கள் அல்லது வாசித்துக் காட்டுங்கள்.

  ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: எனது தோழர்களில் எவரேனும் இன்றிரவு என்னைப் பார்க்க வேண்டுமே என, நபி (ஸல்) அவர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் ஆயுதங்களின் ஒலியைக் கேட்டேன். ''அது யார் எனக் கேட்டார்கள்'' ''நான்- ஸஅத் இப்னு அபீவக்காஸ்(ரழி)'' எனப் பதில் வந்தது. ''ஏன் வந்தீர்கள்'' எனக் கேட்டார்கள். ''நபி (ஸல்) அவர்களுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்து விடுமோ என்று பயந்ததால் பாதுகாக்க வந்திருக்கிறேன்''. இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் ஸஅத் (ரழி) அவர்களுக்காகப் பிரார்த்தித்தார்கள்.
- மேற் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக மாணவர்களின் கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - நபித்துவம் கிடைத்தது முதல் நபி (ஸல்) அவர்கள் பல்வேறு சவால்களை எதிர்நோக்கினார்கள்.
  - அவை மக்கா வாழ்க்கைப் பகுதியிலும், மதீனா வாழ்க்கைப் பகுதியிலும் இடம்பெற்றன.
  - அவை உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் குடும்பவியல் ரீதியாகவும், சமூகவியல் ரீதியாகவும் தாக்கத்தை ஏற்படுத்தின.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்

- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - எல்லா நபிமார்களும் த.ஃவாவை முன்வைத்த போது பல சவால்களுக்கு உட்பட்டார்கள்.
    - முதல் பிரசாரம் ஸபாக் குன்றில் இடம் பெற்ற போது குறைஷியர் வசை கூறினார்கள்.
    - அபூ லஹப் தலைமையில் எதிர்ப்பிரசாரக் குழு செயற்பட்டது.
    - அபூதாலிப் மூலம் பிரசாரத்தைத் தடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
    - பெண், பொன், மண்ணாசைகள் மூலம் தடுக்கும் முயற்சி தோல்வியடைந்தது.
    - நபி (ஸல்) அவர்கள் உடலியல் ரீதியாக இம்சிக்கப்பட்டார்கள்
    - பனூஹாஷிம், பனூ முத்தலிப்கள் சமூக பகிஷ்கரிப்புக்கு உட்படுத்தப்பட்டார்கள்.
    - முஸ்லிம்கள் இம்சிக்கப்பட்டார்கள். நாடு துறக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.
    - நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்யும் முயற்சி பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** முதல் பிரசாரத்தின் பின்னர் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக இடம்பெற்ற சவால்களை காலவரன்முறைக்கு ஏற்ப அட்டவணைப்படுத்துங்கள்.

**குழு-2** நபி (ஸல்) அவர்களின் தாயிப் பயணத்துக்கான காரணங்களையும், அதன்

தோல்விக்கான காரணங்களையும் அட்டவணைப்படுத்துங்கள்.

**குழு-3** நபி (ஸல்)அவர்கள் மதீனா ஹிஜ்ரத்தின் போது எதிர் நோக்கிய சவால்களைப் பட்டியறப்படுத்துங்கள்.

**குழு-4** நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்விலேற்பட்ட சவால்களைப் பட்டியறப்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

பெற்றோர் துணையுடன் ஒரு தாஇயை சந்தித்து, அவர் எதிர்நோக்கிய சவால்களைக் கேட்டறிந்து எழுதி வர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2.2 : உம்மஹாதுல் மு∴மினீன்களதும், ஸஹாபாக்களதும் வாழ்க்கை வரலாற்றைக் கற்று முன்மாதிரிகளை எடுத்து நடப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- உம்மஹாதுல் மு∴மினீன்களான ஸவ்தா (ரழி), ஜுவைரியா(ரழி), ஸபிய்யா(ரழி) ஆகியோரின் வாழ்க்கையோட்டத்தை விபரிப்பார்.
- அவர்களது வாழ்வில் முக்கிய நிகழ்வுகளை எடுத்துக் காட்டுவார்.
- அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :

- பின்வரும் நிகழ்வை ஒரு மாணவர் மூலம் வாசிக்கச் செய்யுங்கள்.

  "ஒரு பெண் தூங்கிக் கொண்டிருந்தாள். தூக்கத்தில் சந்திரன் வந்து அவரது மடியில் தங்கியது. அவள், இதனை தனது கணவன், ச∴ பானிடம் கூறினாள். அவரோ, தான் இறந்த பின்னர் இறை தூதரை மணந்து கொள்வாய்" என விளக்கமளித்தார். சில மாதங்களில் கணவன் இறந்தார். கணவன் இறந்த கவலையில் அவள் ஆழ்ந்திருந்தாள். இதனை அவளது தோழி கவ்லா அறியவந்தாள். அவளைத் தேற்றினாள். இதே கால கட்டத்தில் நபி (ஸல்) அவர்களும் மனைவி கதீஜா(ரழி) அவர்களை இழந்த கவலையில் ஆழ்ந்திருந்தார்கள். எனவே இருவரையும் திருமணம் செய்து வைக்கும் முயற்சியில் கவ்லா ஈடுபட்டார். இருவரும் சம்மதம் தெரிவிக்கவே நபி (ஸல்) அவர்களுக்கும் அந்தப் பெண்ணுக்குமிடையில் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டது. அப்பெண்ணே அன்னை ஸவ்தா(ரழி) ஆவார்.
- குறித்த சம்பவத்தைப் பற்றி மாணவர்களது கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - நபி (ஸல்) அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருந்தார்கள்.
  - அதற்காக அல்லாஹ் அவர்களுக்கு விசேட அனுமதியை வழங்கியிருந்தான்.
  - அவர்களைப் பல்வேறு காரணங்களின் நிமித்தம் மணமுடித்தார்கள்.
  - அவர்களில் ஆயிஷா(ரழி) அவர்களைத் தவிர ஏனையோர் விதவைகளாவர்.

**படி 2** :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.

- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - ஸவ்தா (ரழி) குறைஷியரின் பனூ நஜ்ஜார் கோத்திரத்தை சேர்ந்தவர்.
    - அவர் மரணித்த போது கவ்லா என்ற தோழி மூலம் நபியவர்களுக்கு மண முடித்து வைக்கப்பட்டார்.
    - ஜுவைரியா உயர் குலத்தில் பிறந்த செல்வமும் செல்வாக்கும் உடையவர்.
    - இவரின் முதற் கணவர் ச.்.பான் பின் ஸப்வான் ஆவார்.
    - அவர் பனீ முஸ்தலிக் போரில் கைதியாக பிடிபட தாபித் பின் கைஸ் என்பாரின் அடிமையாக்கப்பட்டார்.
    - இதனை, நபி (ஸல்) அவர்களிடம் ஜுவைரியா கவலையுடன் முறைப்பாடு செய்தார்.
    - நபியவர்கள் அவரை மீட்டி சுதந்திரப் பெண்ணாக்கி அவரின் விருப்பத்துடன் மணமுடித்தார் (ஹி 6)
    - ஸபியா பனு குறைழாக்களின் தலைவர் ஹுயை என்பவரின் மகளாவார்.
    - அவரது முதற் கணவர் ஸலாம் பின் மஷ்கம் கைபர் போரில் மரணமானார்.
    - ஸபிய்யா கைதியாகப் பிடிபட்டு தஹிய்யாவின் அடிமையானார்
    - ஒரு தலைவரின் மகள் அடிமையாக இருப்பதை விரும்பாத முஸ்லிம்களின் வேண்டுகோளுக்கு இணங்க, நபி (ஸல்) அவர்கள் ஸபிய்யாவினை மறுமணம் செய்து கொண்டார்கள்.
    - இவர்கள் எல்லோரிடமும் பெண்களுக்கான முன்மாதிரிகள் காணப்பட்டன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** அன்னை ஸவ்தா, அன்னை ஜுவைரியா, அன்னை ஸபிய்யா ஆகியோரின் வாழ்க்கையோட்டத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

**குழு-2** அன்னை ஸவ்தா, அன்னை ஜுவைரியா, அன்னை ஸபிய்யா ஆகியோர் மணமுடிக்கப்பட்ட பின்னனியையும் காரணங்களையும் எடுத்துக் காட்டுங்கள்.

**குழு-3** மூவரிடமும் காணப்பட்ட முன்மாதிரிகளை எடுத்துக்காட்டுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

அன்னை ஸவ்தா, அன்னை ஜுவைரியா, அன்னை ஸபிய்யா ஆகியோர் தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடி அவர்களால் சொல்லப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து எழுதி வர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2.3 : உம்மஹாதுல் மு∴மினீன்களதும், ஸஹாபாக்களதும் வாழ்க்கை வரலாற்றைக் கற்று முன்மாதிரிகளை எடுத்து நடப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- உபாதலா எனப்பட்ட இப்னு அப்பாஸ்(ரழி), இப்னு உமர் (ரழி) இப்னு ஸுபைர் (ரழி) இப்னு மஸ்ஊத் (ரழி) ஆகியோரின் வாழ்க்கையோட்டத்தை எடுத்துக் காட்டுவார்.
- அவர்களின் தனித்துவத்தை விளக்கிக் கூறுவார்.
- அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :

- பின்வரும் சம்பவத்தை ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.

  ஒரு முறை நபி (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர் அபூபக்ர் (ரழி) அவர்களும் பாலை வனத்தில் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு கடுமையாக தாகம் ஏற்பட்டது. அவ்வேளை உக்பா பின் முஈத் என்பாரின் ஆட்டு மந்தையை ஒரு சிறுவன் மேய்த்துக் கொண்டிருந்தான். சிறுவனை அணுகிய அவர்கள் சிறிது பால் தந்து எமது தாகம் தீர்ப்பீரா என வினவினார்கள். இவை என்னுடையவையல்ல, எசமானுடையவை. அவரது அனுமதியின்றி தர முடியாது என்றான். சிறுவனின் அமானிதம் பேணும் தன்மையை பாராட்டிய அவர்கள், ஒரு கன்னியாட்டிடம் பால் கறக்க அனுமதிப்பீர்களா எனக் கேட்டார்கள். கன்னியாடு பால் கறக்காது, முடியுமானால் கறந்து கொள்ளுங்கள் என்றான்.

  ஆட்டின் மடுவைத் தனது கரத்தால் தடவிய நபி(ஸல்)அவர்கள் ஏதோ ஒன்றை உச்சரித்து மடுவைத் கழுவி பால் கறந்தார்கள். பாலைக் குடித்து தாகத்தை தீர்த்துக் கொண்டார்கள். பின்னர் ''முன்போல் ஆகிவிடு'' என்றார்கள். ஆச்சரியமுற்ற சிறுவன் நீங்கள் மொழிந்த அந்த மந்திர மொழியை எனக்குக் கற்றுத் தருவீர்களா எனக் கேட்டார். நீர் கற்பது மட்டுமல்ல உலகத்தாருக்கும் கற்றுத் கொடுப்பீர் என அச்சிறுவனை வாழ்த்தினார்கள். இஸ்லாத்தை ஏற்று நபி (ஸல்) அவர்களின் நெருங்கிய தோழனாக மாறிய இவரே அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) ஆவார்.

- குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக மாணவர்களது கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - நபித்தோழர்களில் அபாதில்கள் எனப்பட்ட நால்வர் இருந்தார்கள். அவர்கள் இப்னு மஸ்ஊத் (ரழி) இப்னு அப்பாஸ் (ரழி), இப்னு உமர் (ரழி), இப்னு ஸுபைர் (ரழி) ஆகியோர் ஆவர்.

- இவர்களிடம் ஏனைய ஸஹாபாக்களை விட தனிப்பட்ட குணாம்சங்கள் காணப்பட்டன.
- இவர்களை நபியவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இவர்களுக்காக பிரார்த்தித்தும் இருக்கிறார்கள்.
- இவர்கள் இஸ்லாத்தை வளர்ப்பதில் பல்வகை பங்களிப்புக்களைச் செய்துள்ளார்கள்.
- இவர்களிடம் தனித்துவமான முன்மாதிரிகள் காணப்பட்டன.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - இப்னு மஸ்ஊத்(ரழி) நுபுவ்வத் கிடைத்த காலத்திலும் இப்னு உமர் (ரழி) ஹிஜ்ரி 2 இலும் இப்னு அப்பாஸ் (ரழி) ஹிஜ்ரி 3 இலும் இப்னு ஸுபைர் (ரழி) ஹிஜ்ரி 2 இலும் பிறந்தார்கள்.
  - இப்னு மஸ்ஊத்(ரழி) ஹிஜ்ரி 72 இலும் இப்னு உமர் (ரழி) ஹிஜ்ரி 72 இலும் இப்னு அப்பாஸ் (ரழி) ஹிஜ்ரி 68 இலும் இப்னு ஸுபைர் (ரழி) ஹிஜ்ரி 73 இலும் வபாத்தானார்கள்.
  - இப்னு மஸ்ஊத் (ரழி) மஸ்ஊத்-உம்மு அப்த் தம்பதியினருக்கும், இப்னு உமர் (ரழி) உமர்-ஸைனப் தம்பதியினருக்கும், இப்னு அப்பாஸ் (ரழி) அப்பாஸ்-உம்மு பழ்ல் தம்பதியினருக்கும், இப்னு ஸுபைர் (ரழி) ஸுபைர்- அஸ்மா தம்பதியினருக்கும் பிறந்தார்கள்.
  - இப்னு மஸ்ஊத் (ரழி) அல்குர்ஆன், பிக்ஹுத் துறைகளிலும், இப்னு உமர் குரஆன், ஹதீஸ், தப்ஸீர் துறைகளிலும், இப்னு அப்பாஸ் தப்ஸீர் துறையில் மிகுந்த ஆற்றல் பெற்றிருந்ததோடு ஹதீஸ், பிக்ஹ், வரலாறு, இலக்கிய துறைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள்.
  - இப்னு ஸுபைர் அரசியலில் அதிக ஈடுபாடு கொண்டார். சில காலம் கலீபாவாகவும் இருந்தார். இப்னு உமர் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தார். ஏனைய இருவரும் சமநிலை பேணினர்.

- பொதுவாக நால்வரிடமும் மார்க்கக் கல்வி பெறுவதில் அதிக ஈடுபாடு காணப்பட்டது.
- நால்வரிடமும் ஈமானிய பலம், அறிவு, முதிர்ச்சி, மார்க்கப்பற்று, துணிவும் வீரமும், எளிமையும் கடின உழைப்பும், இறைபக்தியும் கட்டுப்பாடும் காணப்பட்டன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** இப்னு அப்பாஸ் (ரழி) தொடர்பாக ஒரு கட்டுரை எழுதுங்கள்.

**குழு-2** இப்னு மஸ்ஊத்(ரழி) தொடர்பாக ஒரு உரையாடலை எழுதுங்கள்.

**குழு-3** இப்னு உமர் (ரழி) தொடர்பாக ஒரு சொற்பொழிவை தயாரியுங்கள்.

**குழு-4** இப்னு ஸுபைர் (ரழி) தொடர்பாக நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

மேலுள்ள ஸஹாபாக்களுள் ஒருவரது சிறந்த முன்மாதிரிகள் பற்றி பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிவர வழிப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **5.0** | **:** | **நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **5.3** | **:** | **இப்ராஹிம் (அலை) அவர்களின் வரலாற்று முன்மாதிரிகளை விளங்கி வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வார்.** |
| **பாடவேளை** | | **:** | **2** |

**கற்றல் பேறுகள்:**

- நபி இப்ராஹிம்(அலை) அவர்களை அறிமுகப்படுத்துவார்.
- அவர்களில் காணப்பட்ட தனிப்பண்புகளைச் சுட்டிக்காட்டுவார்.
- அவர்களுக்கும் நபி (ஸல்) அவர்களுக்குமிடையிலான உறவையும் மக்காவுடனான தொடர்பையும் எடுத்துக்காட்டுவார்.
- அவர்களது த.்.வாப் பணியில் அனுபவித்த இன்னல்களை அறிந்து அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :

- Çáááåãøó Õâì Úáì Óíøöϊöäǫ ãõÍóãøóÏò æÚáì Âá Óóíøöϊöäǫ ãõÍóãøóÏò ßãóǪ ÕóáíÊó ÚáìÓíÏöäǪ ÇȨÈÑóÇåöíãó æÚóáì ÂáÓíÏöäǪ ÇȨÈÑóÇåöíãó æÈóǪÑßÚáìÓíÏöäǪãÍóãøóÏò æÚáì Âá ÓíÏäǪ ãõÍãøóÏò ßãǪ ÈóǪÑßÊó Úáì ÓíÏäǪ ÇȨÈÑóÇåöíãó æÚáì Âá ÓíÏäǪ ÇÈÑÇåöíãó Ýì ÇáÚÇáãíä Çäß Íóãöíϊñ ãóÌöíÏ

  ‘‘இறைவா எனது தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் எங்களது தலைவர் இப்றாஹிம் (அலை) மற்றும் அவர்களின் குடும்பத்தார் மீதும் ஸலவாத் கூறியது போன்று ஸலவாத் கூறுவாயாக. மேலும் எங்களது தலைவரான இப்றாஹிம் (அலை) மற்றும் அவர்களின் குடும்பத்தார் மீது பரகத் சொரிந்தது போன்று எமது தலைவரான முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ பரகத் சொரிவாயாக’’ என்ற ஸலவாத் இப்றாஹீமிய்யாவை காட்சிப்படுத்தி தெளிவாக வாசிக்கக் கூடிய ஒரு மாணவர் மூலம் வாசிக்கச் செய்து பாடத்துள் பிரவேசியுங்கள்.

- அது பற்றி மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - கி.மு 2000 ஆம் ஆண்டளவில் ஈராக் நாட்டை நும்ரூத் எனும் அரச குடும்பம் ஆண்டு வந்தது. அதன் தலைநகராக ‘உர்’ இருந்தது.
  - அரசும் சமூகமும் ‘ஷிர்க்’ கில் மும்முரமாக ஈடுப்ட்டிருந்தன. அதன் பூசாரிகளில் ஒருவராக ஆசார் இருந்தார்.
  - அவரது மகனாக இப்றாஹிம் (அலை) அவர்கள் பிறந்தார்கள். எனினும் அந்தச் சிந்தனைக்கு முரணாகவே அவர் செயற்பட்டார்.
  - இதனால் வாழ்வில் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது.

**படி 2** :
- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - இப்றாஹிம் (அலை) அவர்களிடம் தனித்துவமான பண்புகள் காணப்பட்டன.
    - சிறுவயதில் நுண்ணறிவுடையவர்களாகவும், நாளாந்த செயல்பாடுகள் பற்றி அடிக்கடி கேள்வி கேட்பவர்களாகவும் இருந்தார்கள்.
    - தந்தையின் மீது நேசம் கொண்டிருந்தாலும் அவரது ஷிர்க்கான நடவடிக்கைகளைக் கண்டித்தார்கள்.
    - அவர்களிடம் இளகிய உள்ளம் காணப்பட்டது. (அல்குர்ஆன் 11:75)
    - அவர்கள் ஷிர்க்குக் கெதிராக தந்தையுடனும், மன்னருடனும், மக்களுடனும் தர்க்க ரீதியாக வாதாடினார்கள். இதனால் தீக்குண்டத்தில் எறியப்பட்டார்கள். எனினும் அல்லாஹ்வின் அருளால் பாதுகாக்கப்பட்டார்கள்.
    - அவர்களுக்கும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் சந்ததி முறையில் தொடர்பும், கொள்கை ரீதியான தொடர்பும் காணப்பட்டது.
    - நபி (ஸல்) அவர்களிடமும் (33:21) இப்றாஹிம் (அலை) அவர்களிடமும் (60:04) அழகிய முன்மாதிரியிருப்பதாக அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது.
    - இருவரும் மக்களுடனும், கஃபாவுடனும், ஹஜ் கிரியைகளுடனும் தொடர்புபடுகின்றார்கள்.
    - இருவரும் தௌஹீதை நிலை நாட்டுவதில் அதிக கவனம் செலுத்தியதோடு கொடிய சவால்களையும் எதிர்நோக்கினார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** நபி இப்றாஹிம் (அலை) அவர்களின் இளமைக்கால செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடி அதில் காணப்படும் முன்மாதிரிகளைப் பட்டியல் படுத்துங்கள்.(2:266, 6:76-80, 9:114, 11:75)

**குழு-2** அல்குர்ஆனின் 19:42-48 ஆகிய வசனங்களில் இடம்பெறும் கருத்துக்களை உரையாடல் வடிவில் எழுதிக்காட்டுங்கள்.

**குழு-3** நபி (ஸல்) அவர்களுக்கும், இப்றாஹிம் (அலை) அவர்களுக்கும் இடையிலான சந்ததி உறவை எடுத்துக்காட்டுங்கள்.

**குழு-4** நபி இப்றாஹிம் (அலை) அவர்களுக்கும் மக்காவுக்குமிடையிலான தொடர்பை 2:125-129, 14:35 ஆகிய வசனங்களின் துணையோடு எடுத்துக்காட்டுங்கள்.

**குழு-5** த.்.வாப் பணியில் நபி இப்றாஹிம் (அலை) அனுபவித்த சிமங்கள் பற்றி நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

நபி இப்றாஹிம் (அலை) அவர்களைப் பற்றிக் கலந்துரையாடி அங்கு கூறப்பட்ட மேலதிக தகவல்களை எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0** : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : அஜ்னபி, மஹ்ரமிகள் பற்றிய வரையறைகளைப் பேணி நடப்பார்.

**பாடவேளை** : 2

**கற்றல் பேறுகள்:**

- அஜ்னபி, மஹ்ரமி என்பதன் கருத்தை விளக்குவார்.
- சமூகத்தில் அஜ்னபி, மஹ்ரமி என்ற வேறுபாடு எவ்வாறு உருவாகின்றது என்பதை சுட்டிக் காட்டுவார்
- அஜ்னபி, மஹ்ரமிகளின் பட்டியலொன்றை தயாரிப்பார்.
- மணமுடித்தல், வுழு முறிதல் போன்ற நிகழ்வுகளில் இஸ்லாமிய நெறிமுறைகளை ஆதாரங்களுடன் சொல்லிக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :

- குடும்ப உறவினர்களையும் அவர்களுடன் பழகும் விதத்தையும் மாணவர்களிடம் வினவுங்கள். குடும்ப அங்கத்தவர்கள் அனைவருடனும் ஒரே விதமாகப் பழக முடியாது எனவும் அதற்கான வரையறைகள் காணப்படுகின்றன என்பதையும் வெளிக்கொணரும் விதமாக கலந்துரையாடலில் ஈடுபட்டுப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இஸ்லாம் ஆண், பெண் உறவுகளை அஜ்னபி, மஹ்ரமி என இரு வகையாகப் பிரித்து நோக்குகிறது.
  - அனைத்து சந்தர்ப்பங்களிலும் அஜ்னபி, மஹ்ரமி வரையறைகளைப் பேண வேண்டும் என்பது அடிப்படையாகும்.
  - தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வில் அஜ்னபி, மஹ்ரமி வரையறைகளைப் பேணுவதன் மூலம் அனாச்சாரங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட சமூகம் ஒன்றை உருவாக்க இஸ்லாம் வழிகாட்டியுள்ளது.
  - அஜ்னபி, மஹ்ரமி வரையறைகளைப் பேணுவது தொடர்பான தெளிவான வழிகாட்டல்களை நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

**படி 2** :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
  - அஜ்னபி - மஹ்ரமி என்ற வகைப்படுத்தல் ஆண்களை மையப்படுத்தியே நோக்கப்படுகிறது. ஆண்களுக்கு திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டவர்கள் மஹ்ரமி என்றும் திருமணம் முடிக்க தடுக்கப்படாதவர்கள் அஜ்னபி என்றும் பொதுவாக வகைப்படுத்தலாம்.
  - மஹ்ரமி என்பது தடுக்கப்பட்டவர்கள் மரியாதைக்குரியவர்கள் முதலான கருத்துக்களைத் தருகிறது. ஆண்களுக்கு திருமணம் முடிக்க தடுக்கப்பட்ட உறவுமுறைப் பெண்களை மஹ்ரமி என்கிறோம்.
  - தாய், தாயின் தாய், தந்தையின் தாய், மகள், மகளின் மகள், மகனின் மகள், சொந்த சகோதரி, சொந்த சகோதரியின் மகள், தந்தையின் சகோதரிகள், தாயின் சகோதரிகள் போன்றோர் நிரந்தர மஹ்ரமிகள் ஆவர்.
  - அஜ்னபி என்பது அந்நியமானவர்கள் என்ற கருத்தைத் தருகிறது. எமது நெருக்கமான உறவுகளிலிருந்து அன்னியப்படுத்தப்பட வேண்டியவர்களை நாம் அஜ்னபி என வழங்குகிறோம். ஒரு ஆண் திருமணம் முடிக்க ஆகுமாக்கப்பட்டவர்களை இப்பிரிவில் உள்ளடக்கலாம். மஹ்ரமி (திருமணம் முடிக்க தடுக்கப்பட்டவர்கள்) தவிர்ந்த அனைவரும் அஜ்னபிகளாவர்.
  - திருமணம் முடிக்க தடைப்பட்டவர்களை நிரந்தரமாகத் தடை செய்யப்பட்டவர்கள் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டவர்கள் என இரு வகையானோர் உள்ளனர். இரத்த உறவு, திருமண உறவு மற்றும் பால்குடி உறவு முதலானவற்றின் மூலம் மஹ்ரமிக்கள் உருவாகுகின்றனர் என அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகிறது.
  - ஆண், பெண் உறவு எப்போதும் அஜ்னபி, மஹ்ரமி வரையறையைப் பேணியாதாக அமைய வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. மனிதனின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும் அஜ்னபி, மஹ்ரமி வரையறையைப் பேணி அமையும் போது தான் கட்டுக்கோப்பான சமூகம் ஒன்று உருவாகும்
  - மஹ்ரமி அல்லாத ஓர் ஆண் அல்லது பெண்ணின் உறவு மட்டுப்படுத்தப்பட்டதாகும். எனவே ஒருவரை ஒருவர் பார்த்தல், பேசுதல், ஒன்றாகக் கலந்திருத்தல் போன்ற விடயங்களைத் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** நிரந்தர, தற்காலிக மஹ்ரமிக்களை பட்டியற்படுத்துங்கள்.

**குழு-02** அஜ்னபிக்களுடனான உறவு எவ்வாறு அமைய வேண்டும் எனக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-03** அஜ்னபி வேறுபாட்டையும் வரையறைகளையும் கடைப்பிடிப்பதனால் கிடைக்கும் நன்மைகளைக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துங்கள்

**குழு-04** பொது வாழ்வில் அஜ்னபி வரையறைகளைப் பேணி நடப்பதற்கான ஒழுங்குகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

ஒவ்வொரு மாணவரதும் குடும்பத்தில் உள்ள மஹ்ரமிக்களை தமது பெற்றோருடன் கலந்துரையாடிப் பட்டியற்படுத்த வழிப்படுத்துங்கள்

**தேர்ச்சி 7.0 : ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை எண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 : சமூகப் பணிகளில் பங்கெடுப்பதன் அவசியத்தை விளங்கி அவற்றில் பங்கேற்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- சமூகப்பணி என்பதை விளக்கிக் காட்டுவார்.
- சமூகப் பணியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவார்.
- சமூகப் பணிகளில் விருப்போடு ஈடுபடுவார்.
- சமூகப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- பின்வரும் சம்பவத்தை வாசிக்கச் செய்யுங்கள் அல்லது வாசித்துக் காட்டுங்கள்.
- நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்த புதிதில் முஸ்லிம்களுக்கு தண்ணீர் தேவை அதிகரித்தது. அது வரட்சியான காலமாக இருந்ததனால் தண்ணீருக்காக முஸ்லிம்கள் திண்டாடினார்கள். அப்போது ஒரு யூதனுக்கு உரிமையாக இருந்த பி∴ரு-ரூமா எனும் கிணற்றை உஸ்மான் (ரலி) விலைக்கு வாங்கி மதீனமாநகர் முழுவதுமுள்ள மக்களெல்லாம் பயன்பெறுமளவுக்கு அதை அர்ப்பணித்தார்கள். இந்த வரலாற்று சம்வத்தினை நினைவுபடுத்தி பாடத்தில் பிரவேசியுங்கள்
- சம்பவம் தொடர்பாக மாணவர்களது கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - மக்களின் நலனுக்காக பிரதி உபகாரங்களை எதிர்பார்க்காது தனியாகவோ,நிறுவன ரீதியாகவோ மேற்கொள்ளப்படுகின்ற சமூக நல திட்டங்கள் சமூக பணிகளாக கருதப்படுகின்றன.
    - ஒரு முஸ்லிம் இபாதத்துக்களுடன் மாத்திரம் தன்னை சுருக்கிக்கொள்ளாவது தனிநபர், சமூக நலனை மேம்படுத்தும், வளப்படுத்தும் பணிகளிலும் ஈடுபடவேண்டியது அவசியமாகும். எனவேதான் உலகை வளப்படுத்தல் (இமாரா) என்பது ஓர் முஸ்லிமின் கடமையாக இஸ்லாம் கருதுகிறது.
    - ஒருவருக்கு அல்லாஹ்வினால் அருளப்பட்டுள்ள சொத்து, செல்வம், பணம், நேரம், அறிவு, திறன்கள் போன்ற அருள்களை பயன்படுத்தியோ அல்லது இவற்றில் ஏதாவது ஓர் அருளை மட்டும் செலவு செய்து கூட சமூக பணிகளில் ஈடுபட வாய்ப்புக்கள் உண்டு.

- இஸ்லாத்தின் பார்வையில் தனிமனிதன் ஒருவரிடம் காணப்பட வேண்டிய உயரிய பண்புகளில் ஒன்றுதான் நாபிஉன் லிகைரிஹி (பிறருக்குப் பயனளிப்பவன்) பிறருக்குப் பயனுள்ளவனாக வாழ்தல் என்பதாகும். சமூக பணிகளில் ஈடுபடுவதன் ஊடாக இவ்வாறான பண்பினை வளர்த்துக்கொள்ள முடியும்.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
    - பிறருக்கு உதவுதல், கற்பித்தல், நிலத்தை வளப்படுத்தல், பொதுச் சொத்துக்களை அமைத்தல், சிரமதான பணிகளை மேற்கொள்ளல், சூழல் பாதுகாப்பு, குடிநீர்திட்டங்கள் போன்றன பொதுப்பணிகளில் அடங்கும்.
    - நமக்குக் கொடுத்திருக்கும் அனைத்து அருட்கொடைகளைப் பற்றியும் இறைவன் மறுமையில் நம்மை விசாரிப்பான் என்பதுடன் இவ்வாறான பணிகள் நிறைவான நன்மைகளை இம்மை மறுமைகளில் பெற்றுத்தரும். இதனை சதகதுல் ஜாரியா என்பர்.
    - (பிறருக்கு உதவியும் நன்மை செய்யுங்கள். நிச்சயமாக (பிறருக்கு) நன்மை செய்கிறவர்களை அல்லாஹ் நேசிக்கிறான். (2: 195)
    - ஈமான் கொண்டவர்களே! நீங்கள் ருகூஉ செய்யுங்கள். ஸுஜூத் செய்யுங்கள். உங்களது இரட்சகனுக்கு இபாதத் செய்யுங்கள். நல்ல காரியங்களில் ஈடுபடுங்கள். நீங்கள் வெற்றி பெறுவீர்கள் (22: 77)
    - உங்களில் எவருக்கு தனது சகோதரனுக்குப் பயனளிக்க இயலுமாக இருக்கிறதோ அவன் அதனைச் செய்யட்டும். ((முஸ்லிம்) நபியவர்கள் மற்றோர் சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரிய மனிதன் பிறருக்குப் பயனுள்ளவனாவான். (ஸஹீஹுல் ஜாமிஃ)
    - சூரியன் உதிக்கும் ஒவ்வொரு நாளிலும், இருவருக்கு மத்தியில் நீ சமாதானம் செய்து வைப்பது தர்மமாகும். ஒருவரை அவரது வாகனத்தில் ஏறுவதற்கு அல்லது அவரது பொருளை அதன் மீது ஏற்றுவதற்கு நீ உதவி செய்வதும் தர்மமாகும். நல்ல வார்த்தைகளைக் கூறுவதும் தர்மமாகும். தொழுகைக்கு

செல்ல எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் தர்மமாகும். இடையூறு அளிப்பவற்றை பாதையிலிருந்து அகற்றுவதும் தர்மமாகும்.'' (முஸ்லிம்)

- இந்தப் பள்ளிவாசலில் ஒரு மாதம் இஃதிகாப் இருப்பதை விடவும் எனது சகோதர முஸ்லிம் ஒருவரின் தேவையை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக அவருடன் நடந்து செல்வது எனக்கு மிகவும் விருப்பத்திற்குரியது என்றார்கள். (ஸஹீஹுல் ஜாமிஃ)
- குறைந்த பட்சம் பாதையில் கிடக்கும் கற்களையும், முட்களையும் அகற்றுவது இஸ்லாத்தின் பார்வையில் சமூக பணியாகவே கருதப்படுகிறது.
- சமூக பணிகளில் ஈடுபடும்போது தூய்மையான உள்ளத்துடனும், இறையச்சம், இறைதிருப்தி, நேர்மை போன்ற ஒழுக்க விழுமியங்களையும் கடைப்பிடித்துக்கொள்ள வேண்டியதும் கடமையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** கலந்துரையாடிப் சமூகப் பணிகளின் பட்டியல் ஒன்றை தயாரியுங்கள்

**குழு-2** சமூகப்பணிகளின் மூலம் கிடைக்கும் நன்மைகள் சிலவற்றைத் தொகுத்து எழுதுங்கள்

**குழு-3** சமூகப் பணிகளில் ஈடுபடுவதைத் தூண்டும் வரலாற்று ஆதாரங்கள் நான்கினைத் தொகுத்து எழுதுங்கள்

**குழு-4** சமூகப்பணிகளில் ஈடுபவதை தூண்டும் வகையில் பதாதைகள் நான்கினைத் தயார்படுத்துங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

தமது பிரதேசத்தில் சமூகபணிகளை மேற்கொள்ளும் அமைப்புக்கள் சிலவற்றின் பெயர்களையும் அவற்றின் பணிகள் பற்றியும் பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிவர வழிப்படுத்துங்கள்

**தேர்ச்சி 7.0 : ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை எண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.2 : பொதுச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாப்பார். வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- பொதுச் சொத்து என்பதை வறையறுத்துக் குறிப்பிடுவார்
- சொதுச் சொத்துக்களை வகைப்படுத்திக் காட்டுவார்
- பொதுச் சொத்துக்களை பாதுகாப்பது ஒவ்வொரு தனிநபரினதும் பொறுப்பு என்பதை ஏற்றுக்கொள்வார்
- பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யாது பாதுகாப்பதில் ஈடுபடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- பின்வரும் சம்பவத்தை வாசிக்கச் செய்யுங்கள் அல்லது வாசித்துக் காட்டுங்கள்.

  ஒரு தடவை இரண்டாம் கலீபா உமர் றழி அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். அவருக்கு மருந்துக்காக தேன் தேவைப்பட்டது. பல இடங்களில் தேடிப்பார்த்த போதும் கொஞ்சமேனும் கிடைக்கவில்லை. நகரில் விலைகொடுத்து வாங்குவதற்கும் பணம் போதியதாக இருக்கவில்லை. கலீபா தொழுது முடிந்ததும் தமது தேவையை மக்களிடம் சொன்னார்கள். பைதுல்மாலிலிருந்து தமது நோய் நிவாரணத்துக்காக சிறிதளவு தேனை பெற்றுக்கொள்ள அனுமதியளிக்குமாறு மக்களிடம் கோரினார்கள். இதைக்கேட்ட மக்கள் திகைத்துப்போனார்கள். அவர்களின் உள்ளங்கள் உருகிப்போகின.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - உலகில் மனிதர்களுக்காக அல்லாஹ்வினால் அருள்பாளிக்கப்பட்டுள்ள வளங்களில் பொதுச்சொத்தும் ஒன்றாகும்.
  - பொதுவாக சொத்துக்களை தனியார் சொத்துக்கள் பொதுச்சொத்துக்கள் என வகைப்படுத்திக் குறிப்பிட முடியும். பொதுச் சொத்துகள் எனும் போது பொது மக்களின் நலனுக்காக அரசாங்கத்தினாலோ நிறுவனங்களினாலோ அமைக்கப்படுகின்ற அல்லது இயற்கையாக கிடைக்கப்பெறுகின்ற நீர், ஆறு, காடு, போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
  - பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்துவது தொடர்பில் இஸ்லாம் ஒழுங்கு முறைகளைக் காட்டித்தந்திருக்கிறது.
  - பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது நன்மையான விடயம் என்பதோடு அதனை துஷ்பிரயோகம் செய்வது பாவமான காரியமாகும். அவ்வாறு துஷ்பிரயோகம் செய்வது தனிநபர்

வாழ்விலும் சமூக வாழ்விலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
  - தனிநபர்களினால் அல்லது குழுக்களினால் வக்பு செய்யப்படும் சொத்துக்களும் அரசுக்கு சொந்தமான சொத்துக்களும் பொதுச் சொத்துக்களாகக் கணிக்கப்படுகின்றன.
  - பாடசாலைகள், பள்ளிவாயில்கள், மருத்துமனைகள், பொதுக் கிணறுகள், போக்குவரத்துச் சாதனங்கள், பாதைகள், நூலகங்கள், பொது மலசல கூடம், பஸ்தரிப்பிடம், மையவாடிகள், பூங்கா, கடற்கரை, குளம், காடு, ஆறு போன்றன எமது சூழலில் காணப்படும் சில பொதுச் சொத்துக்களாகும்.
  - மக்களுக்குத் தேவையான பொதுச் சொத்துக்களை அமைப்பது சதகதுல் ஜாரியாவைச் சேர்ந்ததாகும்.
  - நீங்கள் நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளுங்கள் (5: 2)
  - யார் ருமாவின் கிணற்றை வாங்கி பொதுமக்களின் பாவனைக்கு விடுகிறாரோ அவருக்குச் சுவனம் கிடைக்கும் எனவும் ருமாவின் கிணற்றைத் தோண்டிச் சுத்தம் செய்வோருக்கும் சுவர்க்கம் கிடைக்கும் எனவும் நபியவர்கள் குறிப்பிட்டார்கள்
  - பொதுச் சொத்துக்கள் ஒரு தலைமுறைக்கு மட்டுமல்லாது அடுத்துவரும் தலைமுறைக்கும் உரித்தானது என்பதனால் அது தொடர்பாக சமூகத்தை விழிப்பூட்ட வேண்டியது கடமையாகும்.
  - பொதுச் சொத்துக்களை அமைப்பது, அவற்றை பாதுகாப்பது என்பன பாரியதோர் சமூக சேவையாகும் என்பதுடன் அவற்றிற்கு அல்லாஹ்வின் திருப்தியும் நற்கூலியும் கிடைப்பதோடு மக்களின்

பிராத்தனையும் உரித்தாகும். பொதுச் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்வது பாவமான காரியமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** பொதுச் சொத்துக்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக இஸ்லாமிய வரலாற்றில் காணப்படும் இரண்டு ஆதாரங்களைத் தொகுத்து எழுதுங்கள்

**குழு-2** பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது பற்றி விழிப்புணர்வூட்டும் ஒர் துண்டுப்பிரசுரத்தினை தயாரியுங்கள்

**குழு-3** உமது பிரதேசத்தில் காணப்படும் பொதுச்சொத்துக்களைப் பட்டியல்படுத்தி அவை துஷ்பிரயோகம் செய்யப்படும் விதத்தினைக் கலந்துரையாடி எழுதுங்கள்

**குழு-4** பாடசாலைகளுக்குள் காணப்படும் பொதுச்சொத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு, அவற்றை முறையாகப் பயன்படுத்தும் விதம் குறித்து மாணவர்களுக்கு விழிப்பூட்டும் வகையில் நான்கு பதாகைகளைத் தயார்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

பொதுச்சொத்துக்கள் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என்பதை வெளிப்படுத்தும் படங்களை சேகரிக்க வழிப்படுத்துங்கள்.